
வண்டிக்காரன் மகன்
அண்ணாவின்
பொன்னோவியம்
திரைக்கதை-வசனம்
கலைஞர்

# வண்டிக்காரன் மகன்

மூலக்கதை

அண்ணா

திரைக்கதை-வசனம்

கலைஞர்

கனி புதிப்பகம்

சென்னை-34.

முதற் பதிப்பு: 1978
C பதிப்புரிமை

★

விலை ரூ. 1–50

---

அச்சிட்டோர்:
முரசொலி அச்சகம் சென்னை – 600 034.



# கலைஞரின் முன்னுரை

வணக்கம். வாழ்க தமிழ்!

எரிமலையாய்ச் சுடுதழலாய்
இயற்கைக் கூத்தாய்
எதிர்ப்புகளை நடுங்க வைக்கும் இடிஒலியாய்
இன உணர்வுத் தீப்பந்தப் பேரொளியாய்
இழிவுகளைத் தீர்த்துக் கட்டும் கொடுவாளாய்
இறைவனுக்கே மறுப்புச் சொன்ன இங்கர்சாலாய்
எப்போதும் பேசுகின்ற ஏதன்சு நகர் சாக்ரடீசாய்
'ஏன்,? என்று கேட்பதிலே வைர நெஞ்ச வால்டேராய்
எம் தந்தை பெரியாரும் வாழ்ந்திட்டார்;
நம் சிந்தை அணு ஒவ்வொன்றும் நிறைந்திட்டார்.
அந்த எழுச்சி ஞாயிறுக்கு நூற்றாண்டு விழா!
எழுபதாம் ஆண்டு பிறந்தது எங்கள் அண்ணனுக்கு!

புயற்காற்று ஒரு பூந்தென்றலைப் பிள்ளையாய்ப்
பெறுவதுண்டோ?
அப்படிப் பிறந்த பிள்ளைதான் நம் அண்ணன் எனும்
மந்தமாருதம்!
சண்டமாருதங்களையும் தன் இன்முகத்தால் விரட்டுகின்ற
மந்தமாருதம்!

பெரியாரின் வலக்கரமாய் — அறிவில்
வறியோரைக் கரையேற்றும் விசைப்படகாய்
சிறியோரின் பிழை பொறுக்கும் செங்கதிராய்
வெறியோரைப் பணிய வைக்கும் வித்தகராய்—அண்ணா
நெறியோடு முறையோடு நமை வளர்த்தார்!

பொங்குகடல் நடையும், பூவையரின் மென்நடையும் தன்
புதுத் தமிழ் நடையில் காட்டியவர்.
பொல்லாங்கு உரைப்போரை வாதத்தில் மாட்டியவர்.
பொடியெடுத்துப் போடும் நேரம்
புன்னகையால் எதிரிகளைப் பொடியாக்கி வாட்டியவர்.
புழுதிக் குணம் படைத்தோரை ஓட்டியவர்.
பொன்மகுடம் தமிழ்த்தாய்க்குச் சூட்டியவர்.

எழுதுகோல் வைத்திருந்தார் அண்ணா—அது
ஏமாந்த தமிழர்களின் தலையெழுத்தை மாற்றத்
தாளில் உழுத கோல்!

அந்த எழுதுகோல் படைத்ததுதான்
'காஞ்சி' இதழில் நாம் கண்ட கைவண்ணம்!
சிறுகதையாய்ச் சித்தரித்தார் வண்டிக்காரன் மகனை—
திரைக்கதைக்குத் தேவையான மாற்றங்கள் செய்து,
உரையாடல் தீட்டுகின்ற வாய்ப்பினையும் நான் பெற்றேன்.

கொள்கைகளைப் பரப்புவதே
என் கலைப்பணியென
எல்லோரும் அறிந்திடுவீர்!
அப்பணிதான் அண்ணா வழித் திருப்பணியாம்.
திரைப்பணியால் திருந்த வேண்டும் நம் நாடு—
இல்லையேல்
சூழ்ந்துவிடும் தீராத கேடு...
அந்த
எண்ணத்தை மனதில் வைத்து
எடுத்துள்ளார் இப்படத்தை...இனிய
இலட்சியத்தில் வெற்றி பெற இந்நாட்டுப் பெருமக்காள்!
தாய்மாரே! பெரியோரே! தங்கம் நிகர்
உடன்பிறப்புக்காள்! தந்திடுவீர் ஆதரவை!

★

# வண்டிக்காரன் மகன்

**காட்சி—1** **ஜமீன்மாளிகை வெளிப்புறம்**

(பொதுமக்கள் கூடியிருக்கிருர்கள்..... அவர்களுக்குள் ''தொண தொண'' என்று பேச்சுக்கள்...

''சைலன்ஸ்'' என்ற பேரொலியுடன் காளிங்கராயன் கதவைத் திறந்து கொண்டு வருதல்...)

மக்கள்:—ஏ, காளிங்கராயர் வந்துட்டாரு!.. ஜமீன்தாரய்யா வந்துடுவாரு!..

(அனைவரும் வாயிற்புறத்தையே பார்த்தல்—ஜமீன்தார் வருகிருர்.)

ஒருவன்:— ஜமீன்தார் ஜம்புலிங்க பூபதி!

மக்கள்:— வாழ்க!...

காளிங்:— என்னடா காட்டுக்கூட்டம்...வாழ்க...வாழ்க...வாள் வாள்ன்னு!... அழகா... நல்லா நம்ப சாஸ்திரத்துக்கு சம்பிரதாயத்துக்கு ஏத்தபடி...ஜமீன்தார் ஜம்புலிங்க பூபதிக்கு ஜே! ஜே!..ன்னு கோஷம் போடுவீங்களா?..

ஒருவன்:— ஜமீன்தார் ஜம்புலிங்க பூபதிக்கு...

மக்கள்:— ஜே!

ஜமீன்தார்:— பெரியவர்களுக்கு நமஸ்காரம்!.. சிறியவர்களுக்கு ஆசீர்வாதம்!... காளிங்கராயா!..

காளிங்:— பிரபூ!

ஜமீன்தார்:— இவர்களின் குறைகளைக் கேள்!..

காளிங்:— உத்திரவு பிரபு...

(ஒரு பெண் மனு ஒன்றை ஜமீன்தாரிடம் கொடுத்தல்—அவர் பரிவுடன் வாங்குதல் — அந்தப் பெண் ஜமீன்தாரின் காலில் விழுந்து கும்பிடுதல்..)

ஜமீன்தார்:— எழுந்திருங்கள்...எழுந்திருங்கள்...நீங்கள் எல்லாம் என் காலில் விழுந்து வணங்குகிறீர்களே; நான் என்ன மகானா? மகரிஷியா? மகாத்மாவா?..இல்லை! ஆனால் ஒன்று நீங்கள் விழுந்து வணங்குவது ஜமீன்தார் ஜம்புலிங்கத்தின் காலில் இல்லை!... தர்மத்தின் காலைத்தொட்டுக் கும்பிடுகிறீர்கள்! நீதியின் காலை — நாணயத்தின் காலைத்தொட்டுக் கும்பிடுகிறீர்கள்! என்ன காளிங்கராயா?...நான் சொல்வது சரிதானா?..

காளிங்:— வேற யார் சொல்ல முடியும் — நாமே சொல்லிக்க வேண்டியதுதான்!

ஜமீன்தார்:— (காலில் விழுந்த பெண்ணிடம்) உன் குறை என்னம்மா?

பெண்:— என் புருஷன் சதாநேரமும் சாராயத்தைக் குடிச்சிட்டு.. குடும்பத்தைக் குட்டிச் சுவராக்கிட்டாருங்க!..

ஜமீன்தார்:—ஐயகோ!ஐயகோ! தாய்க்குலம் கண்ணீர் வடிப்பதா? அதுவும் என் எதிரிலா? தாய்க்குலத்தின் கண்ணீரை என்னால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை... காளிங்கா!...இந்தப் பெண்மணியின் கணவனைக் கூப்பிட்டு... கடுமையாக உத்தரவிடு!.. (பெண்ணை நோக்கி) கவலைப்படாதே அம்மா!. உன் புருஷனைத் திருத்துவதுஎன் பொறுப்பு — காளிங்கா! அதோடு இன்னொரு கட்டளை — உடனே அமுலாக வேண்டும். நமது ஜமீன் எல்லைக்குள் மதுவின் வாடையே அடிக்கக்கூடாது.

காளிங்:— நம்ப எல்லைக்குள்தானே!..அதை அமுல்படுத்திடலாம்.

புலவர்:—மாரி பொய்த்தாலும் பாரியின் கொடை பொய்க்காது! தலையைக் கொடுக்கவும் தயாரானான் குமணன்! தான்செய்த தர்மங்களையெல்லாம் கொடையாகக் கொடுத்தான் கர்ணன்! பாரியாய் — குமணனாய் — கர்ணனாய்க் காட்சியளிக்கும் வள்ளலே வாழ்க!... வாழ்க!...

ஜமீன்தார்:— காளிங்கா!: அய்யா யாரு?...

புலவர்:— ஒரு தமிழ்ப்புலவன் ஐயா!

காளிங்:— முகஸ்துதி பண்ணும் போதே தெரியுதே!..

புலவர்:— எல்லாப் புலவர்களையும் அப்படிச் சொல்லாதீர்கள்! உறுதியோடு இருக்கிற புலவர்களும் இருக்காங்க... சமயத்துக்குத் தக்கபடி தாளம் போடுகிற புலவர்களும் இருக்காங்க!..

ஜமீன்தார்:— காளிங்கா..புலவர் மனதைப் புண்படுத்தாதே! புலவரே! உங்களுக்கு என்ன வேணும்?

புலவர்:— இதோ...இந்தப் பெண் பூங்கொடியை விட்டுவிட்டு என் மனைவி, இறந்துவிட்டாள்!... தாயில்லாக் குழந்தையை வச்சிகிட்டு நான் தவிக்கிறேன்!..

ஜமீன்தார்:—(குழந்தையைத் தூக்கி) அய்யோ பாவம்!...தங்கப் பதுமை மாதிரி இருக்கு...குழந்தை... ஏம்மா! ஜலதோஷமா உனக்கு... (மூக்கைச் சிந்தி விடுகிறார்..) (மக்கள் வியப்பு—குழந்தையைப் புலவரிடம் கொடுத்தவாறு) புலவரே! கவலே வேண்டாம். மாதாமாதம் ஜமீனில் இருந்து இந்தக் குழந்தையை வளர்க்கவும், படிக்கவும் பணம் அனுப்பப்படும்..உமது விலாசத்தை மானேஜர் காளிங்கராயனிடம் கொடுத்துவிட்டுப் போங்கள்...

புலவர்:—நன்றி ஐயா நன்றி!...

(மனுக்கள் காளிங்கனிடம் குவிகின்றன.)

ஜமீன்தார்:— காளிங்கா! வண்டி தயாரா?.... எங்கே வண்டிக்காரன்?....

காளிங்:— டேய் சடையா!...சடையா!..

(உமாவைத் தூக்கியபடி சடையன் ஓடி வந்து)

சடையன்:— எஜமான்...வண்டி தயாருங்க!..

உமா:—அப்பா! நானும் கூட வர்ரேம்பா!

ஜமீன்தார்:— உமா! வேண்டாம்மா...நீ போயி விளையாடு... அப்பா கோயிலுக்குப் போயிட்டு வர்ரேன்!

காளிங்:— குழந்தைங்க கோயிலுக்குப் போகக்கூடாது!...வாம்மா வா...என்னோட வா!

(ஜமீன்தார் வந்து வண்டியில் ஏறி அமர்தல். சடையனும் வண்டியில் ஏறி ஓட்ட வண்டி புறப்படுகிறது.)

★

## காட்சி— 2

(ஜமீன்தார் வண்டியில் வர, வண்டிக்கார சடையன் வண்டியை ஓட்டி வருகிறான்.)

★

காட்சி — 3. ஜமீன் தேவாலயம் வாயில்.

(ஜமீன்தார் வரும் வண்டி நிற்கிறது. சடையன் முன்னல் இறங்கி, ஜமீன்தார் இறங்குவதற்குப் பணிவுடன் உதவிசெய்கிருன்

ஜமீன்தார் வாயிற்கதவருகே சென்றதும், அங்குள்ள காவலன் (நடுத்தர வயது) ஜமீன்தாருக்கு முதுகை வளைத்து வணக்கம் தெரிவித்துவிட்டு, கதவைத்திறக்கிருன். சடையன், ஜமீன்தாருக்குப் பின்னல் பயபக்தியுடன் வெள்ளித்தட்டில் தேங்காய், பழம் சூடன் சாம்பிராணி முதலியவற்றை எடுத்துச்செல்கிருன்.)

★

காட்சி — 4 ஜமீன் தேவாலயம் உட்புறம்

(அம்மன் சிலை அலங்கரிக்கப்பட்டுள்ளது. சிலையிருக்கும் பீடத்திற்குப் பின்னல் அடைப்புச் சுவர் போல இருக்கிறது. உள்ளே வந்த ஜமீன்தார், தன் காலணிகளைக் கதவோரத்தில் கழற்றிவைத்துவிட்டு, மேலே போட்டுக் கொண்டுள்ள பட்டுத் துண்டினை இடுப்பில் கட்டிக்கொண்டு — தேங்காயை உடைத்து வைத்து..பழங்களை, சிலையின் முன் வைத்து.... சூடத்தைக் கொளுத்தி, சிலைக்குக் காட்டிவிட்டு.. )

ஜமீன்தார்:— தேவீ! பராசக்தி! ஜெகன் மாதா!..ஓம் சக்தி! ஓம் சக்தி! ஓம்! ஓம்சக்தி, ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்!...

(கண்மூடித் தியானித்து நின்று, கன்னங்களில் போட்டுக் கொண்டு — கண்விழித்து, சடையனைப் பார்த்து,...)

சடையா!.. நான் பூஜையிலே உட்கார்ந்தா எப்ப எழுந்திருப்பேனே தெரியாது..நீ போய் மற்ற வேலைகளைப் பாத்துட்டு மெதுவா வா!...போ!...

(சடையன் அவரையும் வணங்கிவிட்டு, அம்மன் சிலையையும் வணங்கிவிட்டு மிகப் பணிவுடன் வெளியேறுகிருன்....கதவை ஜமீன்தார் தாளிடுகிருர்....

பின்னர், அம்மன் சிலையை திருகுகிருர்.

ஒரு ரகசியக் கதவு சிலைக்குப் பின்னல் திறக்கிறது — அந்த வழியாக ஜமீன்தார், தனது அந்தரங்க ஆடம்பர அறையில் நுழைகிருர்.)

★

(ஜமீன்தார் உள்ளே நுழைகிறார்... ஆடம்பரமான அறை... கட்டிலில் மரகதம் வேறுபக்கம் திரும்பிப் படுத்திருக்கிறாள், அலங்கார உடையுடன்!..கவர்ச்சியான தோற்றமுடன்!...)

ஜமீன்தார்:—(கட்டிலை நோக்கி கொஞ்சு மொழியில்) மரகதம்!.. தூக்கமா? ஆகா!..நீ திரும்பிப் படுத்திருக்கும் அழகே, தெவிட்டாத பேரழகு!..(அருகே சென்று) உறக்கமா? ஊடலா?... உயிர் போகுதடி உன் ஒளிமுகத்தைக் காணாமல்!..என் கரும்பல்ல; கொஞ்சம் திரும்பு!...

(மரகதம் திரும்பி எழுகிறாள் ...)

மரகதம்:—எவ்வளவு நேரம் காத்திருக்கிறேன் தெரியுமா?..

ஜமீன்தார்:—என் கானமயிலைக் கட்டித்தழுவ நானும்தான் துடித்துப் பறந்தேன்..அதற்குள் கருணை மனுக்களோடு ஒரு கழுதைக் கூட்டம்..வழக்கம்போல்..ஜமீன் மாளிகை வாசலில்!..

மரகதம்:—விரட்டியடித்துவிட்டு விரைவில் வருவதுதானே!.. இங்கு நான் விரகதாபத்தால் வெந்துதான் போகிறேன் போங்கள்!

(தொட வருகிறாள்.)

ஜமீன்தார்:— (விலகிக்கொண்டு) மரகதம்! என் கையைத் தொடாதே! கொஞ்சம்..என் கைக்கு ''டெட்டால்'' ஊற்று!... (வாஷ்பேசினிடம் சென்று) யாரோ ஒரு புலவனும்—அவன் குழந்தைக்கு மூக்கு சிந்திவிட்டேன்.. சனியன்!..

(மரகதம் டெட்டால் ஊற்ற, ஜமீன்தார் கைகழுவுதல் — மரகதம், டவல் தந்திட அதில் துடைத்தல்...)

மரகதம்:—அப்பறம் இன்னைக்கு யார்யார் குறையைத் தீர்த்தீங்க?...

ஜமீன்தார்:—ஒரு கிழவிக்கு அவள் உயிரோடு இருக்கிறவரை மாதாந்திர உதவிப் பணம் நூறு ரூபாய்.

மரகதம்:—அவ்வளவு ரூபாயா!...

ஜமீன்தார்:—அந்தக் கிழம் ஒருமாதம்கூட உயிரோட இருக்காது!.

மரகதம்:—ம்..அப்புறம்..ஏதாவது புதிய உத்திரவு...

ஜமீன்தார்:—நம் ஜமீனுக்குள் மதுவின் வாடையே இனிமேல் அடிக்கக் கூடாதுன்னு புதுஉத்தரவு போட்டிருக்கேன்!.

மரகதம்:—ஓ!.. (என்றவாறு புத்தக அலமாரியைத் திருப்ப — மது பாட்டில்களின் அலமாரி திரும்புகிறது. மரகதம், ஒரு கிளாசில் ஊற்றி ஜமீன்தாருக்குத் தருகிறாள்...)

ஜமீன்தார்:—மரகதம்..நீயும் கொஞ்சம்..(கிளாசை அவள் உதட்டில் வைக்கிறார். அவள் பருகுகிறாள். அதே கிளாசை ஜமீன்தார் பருகியவாறு)
மதுவின் சுவையும்—மரகதத்தின் இதழின் சுவையும்— இரண்டும் இணைந்து எனக்கு இரட்டை போதை அளிக்கிறது.. ஆகா!.

மரகதம்:—நீங்களே இரட்டை மனிதர்தானே!...

ஜமீன்தார்:—இடிச்சன்னு..கிண்டலா பண்றே?..

மரகதம்:—இரண்டு ஆள் பலம் உங்கள் ஒருத்தருக்கே இருக்குன்னு சொன்னேன்..இல்லையா கண்ணாளா!...

ஜமீன்தார்:—மரகதம்! நீ உன் சொந்த அனுபவத்தைத்தானே சொல்றே?..

மரகதம்:—போங்கள்! (வெட்கத்துடன் படுக்கையில் போய் சாய்தல். ஜமீன்தார் தொடர்ந்து சென்று அவளைத் தழுவிக் கொண்டு..)

ஜமீன்தார்:— மரகதம்..எங்கே?..(உதட்டைக் குவித்து முத்தம் கேட்கிறார்.) எனக்கு ஒரு...கொடு!

மரகதம்:—ஊஹூம்..வெட்கமாயிருக்கு!..

ஜமீன்தார்:—அது என்ன திடீர்னு புது வெட்கம்!.. இங்கு யார் நம்ப ரெண்டுபேருந்தானே இருக்கிறோம்...கொடு!...

மரகதம்:—மூணாவது ரு ஆளும் இருக்கு!..

ஜமீன்தார்:—மூணாவது ஆளா? என்ன சொல்றே?

மரகதம்:—என் வயிற்றுக்குள்ளே யிருந்து பாத்துகிட்டு இருக்கு..

ஜமீன்தார்:—(திடுக்கிட்டு) என்ன? கர்ப்பமா?...

மரகதம்:- ஆமாம்..நாலு மாசம்!..

ஜமீன்தார்:—நாலு மாசமா? மரகதம்!..இது என்ன மடத்தனம்?..
இதுவரையில் ஏன் அதை அழிக்கவில்லை.என்னிடம் கூட இப்போதுதான் சொல்லுகிறாய்?..ஜமீன் சொத்துக்களைப் பங்குபோடத் திட்டம் போட்டிருக்கியா?

மரகதம்:—உங்கள் சொத்து யாருக்கு வேண்டும்..தேவையில்லை!..எனக்கு ஒரு குழந்தை வேண்டும்!

ஜமீன்தார்:—என்ன சொன்னே? உன்னை உயிரோட விட்டா தானே..உனக்கு குழந்தை, குட்டி எல்லாம்..இப்பவே உன்னை அனுப்பவேண்டிய இடத்துக்கு அனுப்பி வைக்கிறேன்!..

(மரகதத்தின்கழுத்தைநெறித்தவாறு படுக்கையில் தள்ளுதல். மரகதம், படுக்கையில் விழுந்தவள் தலையணைக்குக் கீழ் இருக்கும் ரிவால்வரை எடுத்து, முதலில் மேல்நோக்கி சுட்டுவிட்டு பிறகு ஜமீன்தாரைக் குறிபார்க்கிறாள்..)

மரகதம்:—ஐம்புலிங்க பூபதி அவர்களே!..மரகதம், இது வரையில் உமது மடியில் துள்ளி விளையாடிய மான்குட்டி!...
இனிமேல் உமது உயிரைக் குடிக்கும் புலிக்குட்டி!...

ஜமீன்தார்:—(பயந்து மிரண்டவாறு) மரகதம் மன்னித்துவிடு என்னை!.. நமக்குள் சமரசமாகப் போய்விடுவோம்..;

மரகதம்:—நானும் எனக்குப்பிறக்கப்போகும் குழந்தையும்.இனிமே இங்கல்ல; ஜமீன்மாளிகையில்தான் வாழவேண்டும்!... வாழத்தான்போகிறோம்—

ஜமீன்தார்:—சரி, மரகதம்!..நீ, ஜமீன் மாளிகையில் என்மகள் உமாவுக்கு படிப்பு சொல்லிக்கொடுக்கும் வாத்தியாரம்மா!..அப்படி வாழலாம்!..

★

**காட்சி — 5** **ரயில் முதல்வகுப்புப் பெட்டி**

(டேவிட்துரை சிகரெட்டைப்புகைத்தவாறு மதுப்புட்டியை எதிரே வைத்து குடித்துக் கொண்டிருக்கிறார். அவர் உட்கார்ந்திருக்கும் பெஞ்சுக்குக் கீழே சிறுவன் சொக்கலிங்கம் ஒளிந்து கொண்டிருக்கிறான். அவன்முகத்தில் வியர்த்துக் கொட்டிக் கொண்டிருக்கிறது. மேலும் ஒரு கிளாஸ் ஊற்றிக் குடிக்கிறார்... டேவிட் தள்ளாடியவாறு எழுந்து, ரயில்பெட்டியில் உள்ள 'டாய்லட்'டிற்குச் செல்ல முயன்று நிலைதடுமாறி ரயிலின் கதவைத் திறந்து, ஒரு காலையும் முன்னுக்கு வைக்கப் போகிறார். அப்போது சொக்கலிங்கம், அலறியடித்து எழுந்தோடி, அவரது இடுப்பில் கையைக் கோத்து கீழேவிழாமல் தடுத்து நிறுத்துகிறான்.)

டேவிட்:— ஹூ ஆர் யூ? யார் நீ?

சொக்:— நான் யாருங்கிறது அப்புறம் இருக்கட்டும்...இன்னேரம் நான் வந்து இங்கே ஒளிஞ்சிருக்கிலேன்னா...நீங்க கீழே விழுந்து சுக்குநூறாப் போயிருப்பீங்க!..

டேவிட்:—ஓ...ஐ ஸி!..நான் பாத்ரூமுக்குப் போனேன்..பாய்!..

சொக்:— பாத்ரூமுக்குப் போறேன்னுட்டு பரமண்டலத்துக்கே போயிருப்பீங்க!..இது..கீழே இறங்குகிற கதவுசார்... கதவு!...

டேவிட்:— (சிரித்தபடி) குட்பாய்!..வெரிகுட் பாய்!...உன்பேர் என்ன தம்பி?..

சொக்:— சொக்கலிங்கம்!..

டேவிட்:— குட்!...குட்!...பாய்! நீ எப்படி இங்க வந்தே?

சொக்:— நான் பொறந்த ஊரை விட்டே ஓடியாந்துட்டேன்!..

டேவிட்:— உனக்கு அப்பா அம்மா யாருமே இல்லியா? நீ ஒரு அனாதையா?...

சொக்:— அனாதை இல்லை சார்...நான் ஓடியாந்து இங்க ஒளிஞ்சதே ஒரு பெரிய கதை சார்!..

டேவிட்:— ஓ...!ம்.... சொல்லு, சொல்லு!....

சொக்:— அப்பா மடியிலே உக்காந்துக்குவேன்!.. அம்மாதான் எனக்குச் சோறு ஊட்டுவாங்க!..

(ப்ளாஷ்—பேக் ஆரம்பம்.)

## காட்சி — 6 சடையன் வீடு

(சடையன் அருகே சொக்கலிங்கம் உட்கார்ந்திருக்கிறான். சடையன் தன் எதிரில் உள்ள; தட்டில் உள்ள சோற்றை அள்ளி வாயில் போட்டுக் கொள்கிறான். மண்டியிட்டு அருகே பானை, சட்டியுடன் அமர்ந்துள்ள சொர்ணம் சடையனின் மடியில் உள்ள சொக்கலிங்கத்துக்குச் சோற்றை அள்ளி ஊட்டிவிடுகிறாள்...)

சொர்ணம்:— ஏங்க...நம்ம ஜமீன்தாரய்யா பொண்ணுக்கு தினம் பாதாம் அல்வாவா கொடுக்கிறாங்களாமே... அதில ஒரு நாளைக்கு ஒன்னு வாங்கிட்டு வந்து...நம்ப பையனுக்கு கொடுங்களேன்!...

சொக்க:— வேணும்மா வேணும்! இந்தப் பழயது என்னைக்கும் கிடைக்கும்...பாதாம் அல்வா ஒருநாளைக்குத்தான் கிடைக்கும்...

சடையன்:— சொ..ணம்!.. நம்ம பையன் பேசறதைக் கேட்டியா?

சொர்ணம்:— சின்னப்புள்ளை பேச்சா இருந்தாலும் சிந்திக்க வைக்கிற பேச்சுங்க!..நம்பளைப் போல பாட்டாளிங்களுக்கு பழயசோறுதான் பாதாம் அல்வா, பஞ்சாமிர்தம் எல்லாமே — இல்லிங்களா?...

சடையன்:— என்ன அப்படிசொல்லிட்டே!.. நம்ப பையன் பாதாம் அல்வாவுக்கு ஆசைப்படுறான்னு, ஜமீன்தாரய்யா கிட்ட ஒரு வார்த்தை சொன்னு போதும். அப்படியே பாதாம் அல்வா தட்டையே அனுப்பிச்சிடுவாரு!...

சொக்க:— எம்மோ!...எப்போ!...நான் விளையாடப்போறேன்!

சொர்ணம்:— சரிடா கண்ணு சீக்கிரம் விளையாடிட்டு வந்து.. கால் கையை கழுவிட்டு...படிடாம்மா...

சொக்க:— சரிம்மா!... (முத்தம் கொடுத்து விட்டு ஓடுகிறான்.)

சொர்ணம்:— (சடையனிடம்— சாப்பாட்டு சாமான்களை எடுத்து வைத்தவாறு) ஏங்க!..நானும்...குதிரை லாயத்துக்குப் போயி, கூட்டிப் பெருக்கிட்டு வர்ரேன்...

★

## காட்சி — 7 குதிரை லாயம்

(குழந்தைகள் ஐந்தாறுபேர் கூச்சல் போட்டுக் கொண்டு விளையாடுகிறார்கள். சொக்கலிங்கமும் அங்கே இருக்கிறான். அழுக்கு ஆடைச் சிறார்களுக்கிடையே, சிறுமி உமா தகதகவென ஒளிபரப்பும் உடையுடன் வந்து கலந்து கொள்கிறாள்..ஒரு ஏழைச் சிறுமி "ஏ! உமா வந்தாச்சு! உமா வந்தாச்சு!" என்று கூவுகிறாள்...)

உமா:— ஏ, இன்னைக்கு என்ன விளையாட்டு விளையாடலாம்?

மற்றொரு சிறுவன்:— கண்ணாமூச்சி!..

இன்னொருவன்:—கண்ணுமூச்சி வேணும் — கலியாண வெளையாட்டு

ஒரு சிறுமி:— அப்படின்னு யாரு பொண்ணு?...யாரு மாப் பிள்ளை...?

ஒருவன்:— நீ தான் பொண்ணு!...

சிறுமி:— நான் மாட்டேன்...இதோ உமாதான் பொண்ணு மாதிரி இருக்கா!...

ஒருவன்:— அப்ப சரி...உமாதான் பொண்ணு! — சொக்கலிங்கம் தான் மாப்பிள்ளே!..

சொக்க:— நான் மாட்டேண்டா...(என்று ஓட, ஒரு சிறுவன் அவனைத் துரத்துகிறான்.)

எல்லோரும்:— முடியாது! முடியாது!...நீதான் மாப்பிள்ளை;...

டும் டும்! பீப்பி பீப்பி!...

(என்று மேளதாளம் வாசிக்க ஆரம்பித்து விடுகின்றனர். உமாவையும், சொக்கலிங்கத்தையும் ஒரு பலகையில் உட்கார வைக்கின்றனர். மந்திரங்கள் ஜபிக்கின்றனர்....சொக்கலிங்கத்தின் தலையில் ஒரு மாப்பிள்ளைமுண்டாசு கட்டுகின்றனர். அவன் கையில் ஒரு கயிற்றில் ஒரு சிறு கல்லை எடுத்து முடிந்து, உமா கழுத்தில் கட்டச் சொல்லுகின்றனர். அவன், கயிற்றை உமா கழுத்தில் கட்டப் போகும்போது ஜமீன்தாரின் கரம் அவன் கையைத் தட்டிவிட்டு, அந்தக் கயிற்றைப் பிடுங்குகிறது..)

ஜமீன்தார்:— வண்டிக்காரப் பயலுக்குப் பொறந்த கழுதை!,..நீ ஜமீன்தார் ஜம்புலிங்க பூபதியின் மகளுக்கா தாலி கட்டப் போகிறாய்?...

(அவரது உறுமல் கண்டு உமா உட்பட எல்லா சிறுரும் சிதறி ஓடுகிறார்கள். சொக்கலிங்கம் மட்டும், ஜமீன்தார் கையில் சிக்கிக் கொண்டிருக்கிறான்...)

ஜமீன்தார்:—இனிமே இந்தப் பக்கம் வராதே! வராதே!...(அடிக்கிறார்; அடித்துக் கொண்டே இருக்கிறார்...)

சொக்க:— அம்மா! அம்மா!

(சொர்ணம் ஓடி வருகிறாள் அலறியவாறு)

சொர்ணம்:— எஜமான்! எஜமான்! அவனே அடிக்காதீங்க!...எஜமான், அடிக்காதீங்க!..

ஜமீன்தார்:— இவன் கையை முறிச்சாதான் என்ன? (சொக்குவின் கையைத் திருகுகிறார். அவன் அலறுகிறான்.)

சொர்ணம்:— ஐயையோ! விடுங்க எஜமான் அவனே!...அவனேக் கொன்னுடாதிங்க!.. ஏதோ, பிள்ளைங்க விளையாட்டா செஞ்ச வேடிக்கையை...நீங்க விபரீதமா எடுத்துக்கிட்டு...

ஜமீன்தார்:— விளையாட்டா? ஹா!..ஹா!.. ஜமீன் ஜம்புலிங்க பூபதியின் மகள் உமாவோட நிழல் இருக்குதே நிழல்: அந்த நிழலைக்கூட இவன் விளையாட்டாத் தொட்டா.. இந்தப் பரதேசிப் பயலோட பத்து விரலையும் வெட்டிப் பந்தாடிடுவேன்!..

சொர்ணம்:— எஜமான்! எனக்கு ரொம்ப ஆச்சரியமா இருக்கு எஜமான்...ஒவ்வொரு நாளும் நீங்க பொதுஜனங் களுக்கு பேட்டி கொடுக்கும்போது....ஏழைக்குழந் தைகளை எடுத்துக் கொஞ்சி முத்தம் கொடுக்கிறீங்க!.. சமத்துவம் பேசுறீங்க!...சாதி வித்யாசமில்லாம பழகு றீங்க!..

ஜமீன்தார்:—(கோபமாக) என்னடீ, என்ன சொன்னே?.. என்னடி சொன்னே?..

சொர்ணம்:— கூட்டத்துக்கு மத்தியிலே ஒரு ஜமீன்தார்!.. குதிரை லாயத்திலே இன்னொரு ஜமீன்தாரான்னு கேட்கிறேன்!

ஜமீன்தார்:— (சொக்கலிங்கத்தை எறிந்து விட்டு)... கேட்படி கேட்ப!...(அவள் தலைமயிரைப் பிடித்து அறையப் போகிறார்..)

சொர்ணம்:—எஜமான்!..

(ஜமீன்தார் தயக்கம், தலைமுடியைப் பிடித்தபடி நிற்கிறார்.. சொர்ணம் திடுக்கிட்டு...)

எஜமான்!.. குடிச்சிருக்கீங்களா?.. குடி, குடியைக்கெடுக் கும்னு ஊருக்குச் சொல்வீங்களே!..அந்த வெறியிலே தான்... இப்படி நடந்துகிட்டீங்களா?..

(ஜமீன்தார் மனம் பேசுகிறது.)

''இவளுக்கு என் உண்மை உருவம் தெரிந்துவிட்டது!..இனி இந்த ஊருக்கே தெரிந்துவிடும்!இனியும் இவள்உயிரோ டிருந்தால்?... கூடாது! கூடாது! கூடவேகூடாது!

(மன ஒலி நிற்கிறது.)

ஜமீன்தார்:—என்ன சொன்னே?..யாரைப் பாத்துக் குடிகாரன்னே! என்னைப் பாத்தா?... என்னைப் பாத்தா?..(அவளைத் தள்ளிக்கொண்டே போகிறார் தலைமுடியைப் பிடித்த வாறு...)

சொக்க:—அம்மா! அம்மா!...

(என்றவாறு ஜமீன்தாரை இழுக்க ஓடிவருதல், அதற்குள் அவளை அங்குள்ள மயிலைக்காளை மீது தள்ளுகிறார். காளை, அவளைத் தன் கூரிய கொம்புகளால் குத்தித் தள்ளுகிறது. சொர்ணம் வீறிட்டு அலறுகிறாள். சொக்கலிங்கம் ''அம்மா!'' என்று இடி முழக்கம் செய்கிறான்..சடையன் ஓடி வருகிறான்..)

சடையன்:—சொர்ணம்..! சொர்ணம்..!

ஜமீன்தார்:—(சமாளித்தல்) ஐயோ, சொர்ணம்! அந்தப் பக்கமா போனே!.. அது துஷ்டக் காளையாச்சே!.. அதைக் கொண்டாந்து குதிரை லாயத்துல கட்டினது யாரு?.. சொர்ணம்!.. சொர்ணம்!!

சொக்க:—அப்பா! அம்மாவைக் கொன்றது இந்த ஜமீன்தார் தாம்பா!

ஜமீன்தார்:—அட தெய்வமே-சடையா! இவன் பொய்சொல்ருன்.. மாடு முட்டுனதை மனுஷன் மேலே சொல்ருன்.

சொக்க:—நீ மனுஷன் இல்லே!..நீ தான் மாடு!..

சடையன்:—(அவனைத் தடுத்து) பாவிப்பயலே!..எங்க எஜமானையா குற்றம் சொல்றே?..

ஜமீன்தார்:—சடையா! இதுதான்—பழியோரிடம் பாவமோரிடம் என்பாங்களே; அது!...

சடையன்:—அவர் நம்ப தெய்வம் மாதிரி! அவரைப்பத்தி நீ ஏதாவது சொன்னே உன் நாக்கு அழுகிப் போய்டும்!..

சொக்க:—இல்லப்பா இல்லே!—இவன்தான் எங்கம்மாவைக் கொன்ஞன்!..இவனை சும்மா விடக்கூடாது!..

(கல்லை வீசுதல்—ஜமீன்தார் தலையில் கல்அடிபடுதல்—சொக்கன் ஓட)

சடையன்:—ம்..அவனைப் பிடிங்க!..பிடிங்க!..

(அங்கு வரும் சில வேலையாட்களைப் பார்த்து சொக்கலிங்கம் ஓடுதல் — வேலையாட்கள் துரத்துதல்.)

★

காட்சி — 8 ரயில் முதல்வகுப்புப் பெட்டி

(ப்ளாஷ்—பேக் முடிகிறது.)

டேவிட்:—(சிறுவன் கண்களில் நீர்த்துளிகள்..அதனைத் தன் விரல்களால் துடைத்துவிட்டவாறு...) மை பாய்!..கவலைப் படாதே!.. கடவுள்தான் உன்னைக் கொண்டு வந்து என்னிடம் சேர்த்து வைத்திருக்கிருர்... இனிமேற் கொண்டு நீ என்னிடமே இருக்கலாம்... உன்னை வளர்த்து ஆளாக்கவேண்டிய பொறுப்பு என்னுடையது!. என்ன சரிதாஞ?...ம்..சரி என்று உன் தலையை ஆட்டு...

(சோகத்திலும் சொக்கலிங்கம் புன்னகை சிந்த தலையசைக்கிருன்.)

டேவிட்:—மிகவும் நல்லது!.. ம்.. பாய்! உன் பெயர் என்ன சொன்ஞய்?..

சொக்க:—சொக்கலிங்கம்!..

டேவிட்:—சுக்கு லிங்கம்!..

சொக்க:—ஊஹூம்!..சொக்க..லிங்கம்!..

டேவிட்:—ஏன் வம்பு...இனிமேல் நான் உன்னை லிங்கன் என்றே கூப்பிடுவேன்!..

(லிங்கன் மகிழ்ச்சியுடன் தலையசைத்தல்.)

**(ஆண்டுகள் உருள்கின்றன)**

(ஜமீன்தார் சாய்ந்து படுத்திருக்கிறார். ஒருத்தி அவருக்கு முன் கண்ணாடியைத் தூக்கிப் பிடித்துக் கொண்டிருக்கிறாள்..ஒருத்தி தலைக்கு ''டை'' போட்டுக் கொண்டிருக்கிறாள்...)

ஜமீன்தார்:— (ஒருத்தியிடம்) வனிதா! (கண்ணாடியை உற்றுப் பார்த்து) இதோ இரண்டு வெள்ளை ரோமம் தெரியுது பாரு..இதையும் கறுப்பாக்கு!..

(அவள், அந்த ரோமங்களுக்கு 'டை' தடவுகிறாள்.. ரிஸீவரை லீனா போனில் வைக்காமலேயே பேசுதல்.)

லீனா:—நீங்க இந்த ஊருக்கே ஜமீன்தாரு — நீங்க எப்படி இருந்தா என்னங்க?...

ஜமீன்தார்:—லீனா!..உனக்கு ஒண்ணுமே தெரியமாட்டேங்குதே!.. உருவத்திலே கவர்ச்சி—ஊருக்கு உபதேசம் பண்றதிலே ஒரு தனிப் பயிற்சி—இந்த இரண்டும்தான்..எனக்கு மூல தனம்!..அதில் தனி கவனம் செலுத்தவேண்டாமா?...

லீனா:—நீங்க பெரிய ஆளுங்க!..

ஜமீன்தார்:—(லீனா கையில் ரிசிவரைப் பார்த்துவிட்டு) லீனா!.. என்ன கையிலே ரிசீவரை வச்சுகிட்டே...

லீனா:—அடடே! மறந்துட்டேங்க!.. (போனில் வைத்துவிட்டு) உங்க மன்மத முகத்தைப் பாத்தா எல்லாமே மறந்து போகுது!..ஆமாம்..யாரு போன் பண்ணுனுங்க?..

ஜமீன்தார்:—அதுவா.. டேவிட் துரைன்னு — ஒரு வெள்ளைக்கார கோடீஸ்வரன்! அவரு, லிங்கன்னுஒருத்தனை என்கிட்ட செகரட்டரி வேலைக்கு அனுப்புறேன்னாரு..பேரு நல்லா இருக்குல்லே..லிங்கன்...!

லீனா:—நல்லா இருக்கு.. நான்கூட ஒருசேதி சொல்லப் போறேன்— அதுகூட உங்களுக்கு நல்லா இருக்கும்!..

ஜமீன்தார்:—என்ன லீனா?..

லீனா:—(நாணத்துடன் நாணிக்கோணி) நான்.. இப்ப.. ரெண்டு மாசம்.. முழுகாம இருக்கேன்!..

ஜமீன்தார்:—என்ன கர்ப்பமா?... (தந்திரமாக) ஏன் லீனா என்னைப் பத்தியோ — உன்னைப் பத்தியோ ரகசியம் தெரிஞ்சவங்க..உனக்கு வேண்டியவர்கள் யாராவது வெளியில இருக்காங்களா?...

லீனா:—இல்லீங்க! கடவுளைத்தவிர வேற யாருக்கும் எதுவும் தெரியாதுங்க!

ஜமீன்தார்:—கடவுளுக்குத் தெரிஞ்சா பரவாயில்லை!..லீனா..கிட்ட வாயேன்!..

(மற்றப் பெண்களைப் போகச்சொல்ல—அவர்கள் போய்விடுகிறார்கள். கதவை மூடிவிட்டு அவள் கழுத்தை நெறித்துக் கொண்டே.. ''கர்ப்பமா கர்ப்பம்''..என உறுமியவாறு அவளைப் பிணமாக்குகிறார்..லீனா, உயிரற்று கீழே சாய்கிறாள்.)

காட்சி — 10

(பெரியவனான லிங்கன் பாட்டுப்பாடி வருதல்.)

ஒருநாடகம் நடக்குது நாட்டிலே! — அதை
நான் சொல்ல வந்தேன் பாட்டிலே! — சிலர்
ஆடுற மேடையும், போடுற வேஷமும்
ஊரார் கண்ணுக்குத் தெரியல்லே! — அட,
உண்மை எவனுக்கும் புரியல்லே! — ஒருநாடகம்

பாய்ந்து வருகுது அதிகாரம்! — அதன்
பக்கத்தில் ஆயிரம் பரிவாரம்! — இது
போகுற போக்கு
சரியில்லே என்று
ஊருக்குக் காட்டுவேன்
அடையாளம்! — ஒருநாடகம்

உத்தமர் போலொரு
உபதேசம்! — அந்த
புத்தரைப் போலொரு
வெளிவேஷம்! — இந்தப்

போலிகள் போடும்
போர்வையை எடுத்தால்
உருட்டல்; மிரட்டல்;
சிறைவாசம்! — ஒருநாடகம்

ஏழைகள் குளிப்பது
கண்ணீரில்! — இந்த
எத்தர்கள் மிதப்பது
பன்னீரில்! — இந்தக்
கோழைகள் வீரம்
எத்தனை காலம்
கொடிகட்டிப் பறக்கும்
தர்பாரில்? — ஒருநாடகம்

★

காட்சி 10-ஏ

(லிங்கனின் இலட்சிய கீதம் முடிவதற்கும் உமா, ஓட்டிவரும் சாரட் வண்டி அவனை மிக வேகமாக நெருங்குவதற்கும் சரியாக இருக்கிறது. உமாவின் கையிலுள்ள சாட்டையை லிங்கன் பிடுங்கு கிறான்.)

உமா:— (கோபமாக) ஏய்! உடம்பு எப்படியிருக்கு!

லிங்கன்:— (முண்டாவைத் தட்டி) நல்லாத்தான் இருக்கு!. பாத்தா தெரியலே; தெருவிலே போறவங்களையெல்லாம் உடல்நலம் விசாரிக்கிறீங்களே... நீங்க என்ன டாக்டரம்மாவா?...

உமா:— (மேலும் கோபமாக) ஆங்?

மரகதம்:— டாக்டரம்மாக்கள் எல்லாம் இப்படித்தான் சவுக்கை வச்சிகிட்டு விசாரிப்பாங்களா?

லிங்கன்:— நோயாளிகள் கிடைக்காம லோ—லோன்னு அலையுற டாக்டரம்மாக்கள்ளாம் இப்படித்தான் விசாரிப்பாங்க?

உமா:— கேலியும் கிண்டலும் கிடக்கட்டும்... முதல்ல சவுக்கைக் கொடு!

(கையை நீட்டுகிறாள் சவுக்கை வாங்க)

லிங்கன்:— சவுக்கை கொடுக்கட்டுமா? இல்லே; சவுக்கால கொடுக்கட்டுமா?

உமா:— என்ன சொன்னே?

மரகதம்:— தம்பியோவ்! கொஞ்சம் மரியாதையாப் பேசுங்க! யாகாவாராயினும் நா காக்க!..

லிங்கன்:— நா, காக்கிறது இருக்கட்டும் இவ்வளவு வேகமா போனா.. தெருவிலபோறவுங்க உயிரை யாருகாக்கிறது?

உமா:— அதைக் கேக்க நீங்க யாரு?

லிங்கன்:— நான் யாருன்னு ஒரே வரியிலே சொல்ல முடியாது!... எனக்கும் கொஞ்சம் இடம் கொடுத்தீங்கன்னா உக்காந்துகிட்டு விவரமா சொல்வேன்!

மரகதம்:— தம்பி! நீங்க இந்த ஊரு இளைய ஜமீன்தாரணியோட பேசறீங்கங்கிறது ஞபகமிருக்கட்டும்!

லிங்கன்:— ஓ! ஜமீன்தாரணியா? (திகைப்பு — மரகதத்திடம்) நீங்க யாரு? இவுங்க டாட்டரா?

மரகதம்:— டாட்டரா?... போச்சுடா!... தம்பி? நீங்க என்ன எனக்கு ஐஸ் வைக்கிறீங்களா? எனக்கே இதாட்டம் ஒரு டாட்டர் இருக்கு! நான் இந்த சின்ன ராணிக்கு டீச்சரம்மா!

லிங்கன்:— ஒகோ! டீச்சரம்மா அவர்களே! உங்க மாணவியை இவ்வளவு வேகமா வண்டியோட்டச் சொல்லாதிங்க!.

(சவுக்கைத் தூக்கி எறிய — அதை உமா, கையில் பிடித்தவாறு — கோபமாக)

உமா:— இதைவிடவேகமா ஓட்டுவேன்; என்னை யார் கேக்கிறது?
லிங்கன்:—இப்பநான் கேக்கிறேன்!.அப்பறம் இந்த ஊரேகேக்கும்!
உமா:— இனிமேப் பேசினு நான் பொல்லாதவளா இருப்பேன்!..
லிங்கன்:— இனிமே தானு!...உம்!...உம்!...

(வண்டி போகிறது...)

★

காட்சி — 11

ஜமீன் மாளிகை

(ஜமீன்தாரும், காளிங்கராயனும் இருக்கிறுர்கள்.... அப்போது மரகதம், உமா வருதல்.)

உமா:— அப்பா! வரவர இந்த ஊர் ரொம்ப கெட்டுப்போச்சு!.. என்னையே ஒருத்தன் எதிர்த்துப் பேசுறுன்!..

ஜமீன்தார்:— (எழுந்தவாறு) என்ன? யார் அவன்?... மரகதம்!... உமாவை அப்படிப் பேசினது யாரு?...

மரகதம்:— யாரோ ஒரு துடிதுடிப்பான வாலிபன்!.. ரொம்ப குறும்புக்காரன்!..

காளிங்:— ம்...வருங்காலத்து ஜமீனி! ஜமீனி கிட்டப்போயி குறும்பு பண்ணினுனு? இப்போதே குருவி சுடுவது மாதிரிச் சுட்டு விட்டு வருறேன் — விரலெல்லாம் துடிக்குது!..உத்தரவு கொடுங்க!..கொடுங்க நீங்க உத்தரவு!...அவன் எவனுயிருந்தாலும் சுட்டுடுவேன்!... விடமாட்டேன்!.. ஒத்து.... யாரது விலகு!... (ரைபிளை எடுத்துக் குறி பார்த்தவாறு நீட்டுகிறுன். அப்போது 'ரைபிள்' துப்பாக்கி முனையில் லிங்கன் வந்து.. நிற்கிறுன்.)
யார்?.... குறி வச்சிட்டேன்! தள்ளு அந்தப் பக்கம்!

லிங்கன்:— டேவிட் துரை ஜமீன்தாருக்கு லெட்டர் கொடுத்திருக்காரு!

உமா:— அப்பா!..இவர்...(ஏதோ சொல்ல முனைகிறுள் — சொல்லவில்லை.)

ஜமீன்தார்:— (கடிதத்தைப் பார்த்தவாறு) ஓ!..நீங்கதான் மிஸ்டர் லிங்கனு?..டேவிட் துரை 'போன்' பண்ணினுரு! நான் அவரிடமே சொல்லி விட்டேன்... நீங்கதான் இனிமே இந்த ஜமீனுக்கு செகரட்டரின்னு! இவர்தான் மானேஜர் காளிங்கராயன்...

காளிங்:— மானேஜர் மட்டுமல்ல; ஆல் இன் ஆல்!..
(கை குலுக்குதல்)

லிங்கன்:— Much Pleased to meet you!

ஜமீன்தார்:— (லிங்கன் கையைக் குலுக்கி) மிஸ்டர் லிங்கன்! உங்கள் வரவு நல்வரவாகுக!... இதோ... இதுதான்! என் மகள் உமா!... அதாவது எதிர்கால ஜமீன் தாரணி... உமா...

லிங்கன்:— வணக்கம்.

உமா:— (தயக்கமுடன்) வ... ண... க்... க... ம்!..

ஜமீன்தார்:— இதோ... இது...

லிங்கன்:— உமாவோட டீச்சரம்மா... தெரியும்!.. வணக்கம்...?

மரகதம்:— வணக்கம்.

(ஜமீன்தார் வியப்பு... அப்போது கோகிலா, உமாவைக் கூப்பிட்டவாறு ஓடி வருகிறவள் — அருகே வந்து நிற்கிருள்....)

கோகிலா:— உமா!...

ஜமீன்தார்:— இதுதான் கோகிலா...

லிங்கன்:— வாத்தியாரம்மாவின் மகள்!... வணக்கம்.

ஜமீன்தார்:— அடேடே!... இதெல்லாம் உங்களுக்கு நல்லா தெரியுதே!...

காளிங்:— துரை சொல்லியிருப்பாரு! நம்ப ஜமீனுக்கு ஏத்த செகரட்டரி!...

ஜமீன்தார்:— கோகிலா! மிஸ்டர் லிங்கனை அழைத்துக்கொண்டு போய், நமது மாளிகை முழுதும் சுற்றிக்காட்டு!..

கோகிலா:— (லிங்கனிடம்) வர்ரீங்களா?..

★

காட்சி — 1ॆ ஜமீன் மாளிகை-பல பகுதிகள்

(ஹாலில் மாட்டப்பட்டுள்ள புலியின் தலே, மானின் தலே, எருமையின் தலே ஆகியவற்றைக் காட்டுதல்..)

கோகிலா:—வாங்க! வாங்க! வாங்க! இது புலி! உயிர்ப்புலின்னு நினேச்சுக்காதிங்க; செத்துப்போன புலி!..இந்தப் புலியோட அட்டகாசத்தைத் தாங்காம ஜனங்கள்ளாம் ஓடியாந்து ஜமீன்தாருகிட்ட முறையிட்டாங்களாம். உடனே ஜமீன்தாரு, எடுத்தாரு துப்பாக்கியை! சென்றுரு காட்டுக்கு!..கொன்றுரு புலியை! கொண்டு வந்து இங்கே மாட்டினுரு தலேயை!..

லிங்கன்:—இந்த ஜமீன்தாரா?..

கோகிலா:—சொல்றதுக்குள்ளே அவசரப்படுறீங்களே; இந்த ஜமீன்தாரோட அப்பாவோட அப்பா—அதாவது தாத்தா!.. இதோ, மான் தலே!.மான் வேட்டையிலே இப்ப இருக்கிற ஜமீன்தார் ரொம்ப கெட்டிக்காரரு!..நூறு மைல் வேகத்திலே ஓடுற மான்களே, நம்ப ஜமீன்தாரு நூற்றி அம்பது மைல் வேகத்திலே போயி வேட்டையாடி வீழ்த்துவாரு!..வாங்க!

லிங்கன்:—ஓ!

கோகிலா அறை.

கோகிலா:—இதான் என் ரூம்.. (உள்ளே அழைத்து வந்து) முதன் முதல்ல என் ரூமுக்கு வந்திருக்கீங்க.. இந்தாங்க ஆப்பிள்!..(லிங்கன் வாங்கிக்கொள்கிருன்)அருமையான காஷ்மீர் ஆப்பிள்!.. என்பேர்தான் உங்களுக்குத் தெரியும்..கோகிலா! எங்க அம்மாவைத்தான் உமாவோட வழியிலேயே பாத்துட்டீங்க!... உமாவுக்கு டீச்சரம்மான்னு அறிமுகப் படுத்தினுங்களே; அந்த மரகதம்மாவோட பொண்ணுதான் நான்!. நான் பிறந்தோன்ன எங்கப்பா; அம்மாகிட்ட சண்டை போட்டுகிட்டு.. கப்பலேறி வெளிநாட்டுக்குப் போயிட்டாராம்..நான் பிறந்த நேரம் எப்படி பாத்தீங்களா?. நான் பிறந்த நட்சத்திரம் அஸ்வதி — பரணி—கார்த்திகை—ரோகிணி... அப்படிம்பாங்களே; இருபத்தேழு நட்சத்திரம்.. அதில ஒரு நட்சத்திரம்!.. லக்னம் என்னன்னு.. மேஷம்—ரிஷபம்- மீனம்- கும்பம்—சிம்மம்—கடகம்—தனுசு—விருச்சிகம்..

லிங்கன்:— (மேசையிலிருந்து ஒரு கிளிப்பை எடுத்து) போதும்!. போதும்!.அம்மா.. எங்கே, உதட்டைக் கொஞ்சம்... (தன் உதட்டை' குவித்துக் காட்டுதல்) இப்படி வச்சுக்க..பாக்கலாம்..

கோகிலா:—எப்படி? இப்படியா?

(அவள் உதட்டைக் குவிக்கிறாள். அப்போது லிங்கன் தன் கையில் உள்ள கிளிப்பை அவள் உதட்டில் மாட்டிவிடுகிறான் .)

லிங்கன்:—என்னை ஒரு வார்த்தைகூடப் பேசவிடாம நீ பாட்டுக்குப் பேசிகிட்டே இருக்கியே..ஊம்!..

(கோகிலா, ''வலிக்குது, எடுத்து விடுக'' என்பது போல கெஞ்சுதல். லிங்கன், சிரித்துக்கொண்டே கிளிப்பை எடுத்துவிடுகிறான்.)

கோகிலா:—ஏன், நான் பேசுறது..பிடிக்கலியா?.ரசிக்க முடியலியா உங்களாலே!...

லிங்கன்:—நோ..நோ..நீ ரொம்ப ரசனையா பேசுற!..உன்னைக் கொண்டு போயி, அஜந்தா, எல்லோரா, மாமல்லபுரம், இதுமாதிரி இடங்கள்ள 'கெயிடா' போட்டா.. அங்க வர்ர சுற்றுலாப் பயணிகளுக்கு..ஒரு நாள் முழுக்க மூச்சுவிடாம விளக்கம் சொல்லிகிட்டு இருப்பே!.. இப்ப நான் கேக்கிற கேள்விக்கு பதில் சொல்லு!...

(உதட்டைத் தடவி, வலியைப் போக்கிக் கொண்டவாறு)

கோகிலா:—கேளுங்க!..இந்த ஜமீன் எப்ப ஆரம்பமாச்சு? இந்த ஜமீனின் முதல் ஜமீன்தார்யார்?..அவர்பேர்?..அப்படியிப்படி யெல்லாம் கேட்கப் போறீங்களா?..அதுக்கு இதோ, இந்த ஜமீன் சரித்திரமே ஒரு புத்தகமா இருக்கு..இந்தாங்க! (ஒருபுத்தகத்தைக்கொடுக்கிறாள்.)

லிங்கன்:—(புத்தகத்தை அலட்சியமாக வாங்கியவாறு) மறுபடியும் ஆரம்பிச்சுட்டியா..இதோ..கிளிப்பு! மாட்டிடுவேன்!..

கோகிலா:—வேண்டாம்! வேண்டாம்!!.. இப்பவே உதடு வீங்கிட்டுது.. ஏண்டி உதடு வீங்குச்சுன்னு எங்கம்மா கேட்டா என்ன சொல்றது?...புதுசா வந்திருக்கிற செகரட்டரி செஞ்ச வேலைன்னு சொல்லிடுவேன்!...

லிங்கன்:—சரியான வெகுளிப் பெண்ணு இருக்கே!.. (சிரித்தவாறு) ஆமா கோகிலா!..உங்க இளையராணி உமா அம்மையாரோட...

கோகிலா:—அம்மையாரா?...அவுங்க..குமாரி உமாங்க!...ம்.... இந்தக் காலத்திலே நாற்பது அம்பது ஆனது கூடத் தான் நான் குமாரின்னு பட்டம் வச்சுக்குது!...

லிங்கன்:—ஆமா குமாரி உமாவோட அன்றாடப் பொழுதுபோக்கு, காற்றைவிட வேகத்திலே..சாரட் வண்டி ஓட்டுவது தானா?...

கோகிலா:—அது மாலை நேரத்துப் பொழுதுபோக்கு!..காலையில எழுந்ததும்...

லிங்கன்:—பல் விளக்குவாங்க!..காபி சாப்பிடுவாங்க!..?

கோகிலா:—குளிக்கிறதை மறந்துட்டீங்களே!..குளிச்சு டிரஸ் போட்டுகிட்டு குதிரை சவாரி செய்யாம இருக்கிறதே இல்லே!

லிங்கன்:— I see..! தினமும் காலேயிலே குதிரை சவாரி செய்வாங் களா?

கோகிலா:—ஆமாம்..இதோ!..உமா சவாரி செய்ற குதிரையை இங்கேயிருந்தபடியே காட்டுறேன்!.(ஜன்னல் திரையை விலக்கி) அதோ!.வண்டிக்கார சடையன் குளிப்பாட்டு ருன் பாருங்க..அந்தக் குதிரைதான்!..

(சடையன் குதிரையைக் குளிப்பாட்டுவதை லிங்கன் பார்க் கிருன் — லிங்கன் முகத்தில் சோகம்.)

★

## காட்சி — 13

குதிரை லாயம்

(சடையன் குதிரையைக் குளிப்பாட்டிக் கொண்டிருக் கிருன்... சற்று வயதான தோற்றம்... லிங்கன், கோகிலா கொடுத்த ஆப்பிளேக் கையில் தூக்கிப் போட்டு மாறிமாறிப் பிடித்தவாறு வந்து கொண்டிருக்கிருன்... குதிரைக்கருகாமையில் லிங்கன் நெருங்கும்போது... அவன் வருவதைக் கவனிக்காமல் சடையன் குதிரையின் மீது ஒரு வாளி தண்ணீரை ஊற்ற, அந்தத் தண்ணீர் லிங்கனின் பூட்சிலும், பூட்சுக்கு மேலே 'பேண்ட்'டிலும் படுகிறது. பூட்சும், பேண்டின் முனைப்பாகமும் நீர் கலந்த சேருக ஆகிவிடுகிறது.)

சடையன்:— (லிங்கனிடம் ஓடிவந்து..) அடேடேடே...தெரியாமப் பட்டுப் போச்சுங்க... மன்னிச்சிடுங்க!

(என்று பணிவாகக் கெஞ்சலுடன் கூறுகிருன்.)

லிங்கன்:—பரவாயில்லே!.. பரவாயில்லே!..

(அப்போது, காளிங்கராயன் கூச்சலுடன் வந்து கொண்டே.)

காளிங்:—டே, முட்டாள்! சடையா!... குதிரையைக் குளிப் பாட்டுடான்னு... மனுஷாளக் குளிப்பாட்டுறே நீ! யார் இந்த மனுஷன்? தெரியுமா உனக்கு?...ஜமீன்தார் புது செகரட்டரி!.. படிச்சவர்!.. பணக்காரர்! சாரி மிஸ்டர் லிங்கன்!.. டே, சடையா!... மிஸ்டர் லிங்கு ேடை பூட்சை சுத்தமாத் துடை!... ம்... துடைடா... டர்டி பெலோ!...

(சடையன் தன் துண்டை எடுத்து, லிங்கனின் பூட்சைத் துடைக்கப் போகிருன்.)

லிங்கன்:—அய்யோ... வேண்டாம்!.. உங்க வயசு என்ன! என் வயசு என்ன!.. எங்கப்பா வயது உங்களுக்கு, நீங்க போயி இந்த வேலே செய்றதாவது...

காளிங்:—வயசாவது ஒண்ணுவது... பிச்சைக்காரன் பூரா வயசான வனு வர்ரான். அவனை யெல்லாம் அப்பன் வயசுன்னு கட்டிக்கிட்டு அழுதா நம்ப கதி என்ன ஆவுறது? இதனுலதான் நாட்டுல மழை பெய்யாம, குட்டிச் சுவரா போகுது! என்ன அர்த்தமில்லாமப் பேசறீங்க? நாம் எல்லாம் ஜமீன்தார் வர்க்கம். ஜமீன்தார் கடவுளுடைய பிரதிநிதி! நான் அவருடைய பிரதிநிதி!! இவுங்களெல்லாம் வேலேக்காரப் பசங்க! நீங்க என்ன அவுங்க சாதியா?... டே, சடையா! என்ன பிரசங்கம் கேட்டுகிட்டு இருக்கே!.. துடைடா பூட்சை! அவரைத் தொடாதே, பூட்சை மட்டும் தொடை!

சடையன்:—இதோ எஜமான்...

(லிங்கன் தடுத்தும் கேளாமல், சடையன் லிங்கனின் பூட்சைத் துடைத்தல்...)

லிங்கன்:—வேண்டாம் ஐயா! வேண்டாம்!

(லிங்கனின் கைகள் பின்னுல் கட்டப்பட்டிருக்கின்றன. அவன் உணர்ச்சி வயப்பட்டிருப்பதை, அவன் கையில் உள்ள ஆப்பிள் நசுங்கி துண்டுதுண்டாகக் கீழே விழுவதிலிருந்து தெளிவாக்கப்படுகிறது. லிங்கனின் கண்கள் கலங்குகின்றன. சடையன் பூட்சைத் துடைத்துவிட்டு எழுகிறுன்.)

★

## காட்சி — 14

காளிங்கராயன் அறை

(காளிங்கராயன் கண்களே மூடியவாறு குடித்துக்கொண்டிருக்கிறுன். கண்ணுயிரம், கோழிக்கால் முதலிய இறைச்சித் துண்டுகளே காளிங்கராயனுக்கு முன்னுள்ள தட்டில் பரிமாறிக்கொண்டிருக்கிறுன்.)

கண்ணுயிரத்தின் குரல்:—கண்ணேத் திறக்காம குடிக்கிறீங்களே எஜமான்! கொஞ்சம் கண்ணேத்திறந்து பார்த்தாதானே எதிரிலே மீனு... கோழி... இதெல்லாம் நல்லா சாப்பிடலாம்.

(பூப்போட்ட கிளாசை முழுவதும் முடித்துவிட்டுச் 'சடார்' எனக் கீழே வைத்துவிட்டு)

காளிங்:—மடையா!... மகான்கள் தவம் பண்றபோது கண்ணேத் திறப்பாங்களாடா?

கண்ணுயிரம்:—மாட்டாங்—

காளிங்:—ஏன் தெரியுமா?

கண்ணாயிரம்:—சொல்லுங்க!..

காளிங்:—அப்பதாண்டா சொர்க்கம் தெரியும்!.. என்னப்பன் சொக்கலிங்கம் காட்சி கொடுப்பான்!...

[அப்போது லிங்கன் படியேறி வந்து நிற்கிறான்.]

காளிங்:— அடேடே...செகரட்டரி லிங்கன்... வாங்க! வாங்க!.. சொக்கலிங்கத்தைப் பத்திச் சொன்னா செகரட்டரி லிங்கன் வந்துட்டாரு டேய், கண்ணாயிரம்!.. அய்யாவுக்கு ஊத்துடா!.. விஸ்கியா? பிராந்தியா? ஜின்னா? ரம்மா?...

லிங்கன்:— நோ! நோ!.. நான் அதைக் கையால தொட்டது கூட கிடையாது!...

காளிங்:— தொட வேண்டாம்!.. நீங்க பேசாம வாயைத் திறந்துகிட்டு உட்கார்ந்திருங்க!..நங்க ஊத்திடறோம்!.

லிங்கன்:—ஆமா... உங்க ஜமீன்ல யாரும் குடிக்கக்கூடாதுன்னு சட்டம் கொண்டு வந்திருக்கீங்க!.. நீங்கபாட்ல பாட்டில் பாட்டிலா முழுங்கிறீங்களே!

காளிங்:— சட்டம் ஜனங்களுக்குத்தான் போட்டிருக்கு! அதிகாரத்துலே இருக்கிறவங்களுக்கு அல்ல. தெரியுமா? டேய் கண்ணாயிரம் நீ ஊத்துடா.

(தன் கிளாசைக் காட்டுதல் — கண்ணாயிரம் ஊற்றுதல்— காளிங்கன் கண்ணை மூடிக்கொண்டு குடித்தல்... அந்த வேளையில், லிங்கன் ஒரு ''ரம்'' பாட்டிலை எடுத்து மறைத்துவைத்துக் கொள்ளுதல்...)

காளிங்:— ஆகா! ஆகா... பிரமாதம்!.. இந்திரலோகத்துக்கே வந்தாச்சு!.. உம்!.. ஊர்வசி, ரம்பை, திலோத்தமையெல்லாம் டான்ஸ் ஆடுறாங்க!..

லிங்கன்:—மிஸ்டர் மேனேஜர்!.. நான் வர்ரேன்!..

காளிங்:—போறீங்களா?... ஏன்?.. ஊர்வசி ரம்பை டான்சை பார்த்துட்டுப் போங்களேன்!.. ஆஹா! ஐயோ... டிரஸ்ஸே இல்லே!.. ரிப்பன் கட்டிகிட்டு ஆடுறாங்கடா எல்லாரும்!..

லிங்கன்:—நீங்களே பார்த்து ரசியுங்கள்!.. எனக்கு வேலையிருக்கு!..

(லிங்கன் போய்விடுதல்.)

(அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது, கண்ணாயிரம் பாட்டிலில் மீதமுள்ளதைக் குடித்திட ஆரம்பிக்கிறான்.)

காளிங்:— அடே... வைடா கீழே!.. ஜமீன்ல யாருமே குடிக்கக் கூடாதுன்னு உத்தரவு!... வேலைக்கார நாய், நீ குடிக்கிறியா?.. திருட்டுப் போதை ஏத்திறியாடா?..

(என்று அவனைக்கோபமாக அடிக்கிறான்..கண்ணாயிரம் சிரிக்கிறான்...மீண்டும் காளிங்கன் அடிக்கிறான் கண்ணாயிரம் சிரிக்கிறான். காளிங்கன் அவன் தலைமயிரைப் பிடித்து உலுக்கிக் கொண்டு)

என்னடா... அடிச்சுகிட்டே இருக்கேன்?... நீ சிரிச்சுகிட்டே இருக்கே!...

கண்ணாயிரம்:—ஒண்ணுமில்லே... ஒரு துளி குடிச்சதுக்கே நான் இவ்வளவு அடி வாங்குறேனே!.. நீங்க அவ்வளவு குடிக்கிறீங்களே; எவ்வளவு அடி வாங்கப் போறீங்களோன்னு நினைச்சு சிரிக்கிறேன்!..

காளிங்:— எதிர்த்தா பேசுற?... கழுதை!... என்னையா எதிர்த்து பேசுறே?.. இனிமே நீ சிரிக்க முடியாது... அழப் போற! உன்னை வேலையைவிட்டு டிஸ்மிஸ் பண்ணிட்டேன். போ வெளியே!.. கெட் அவுட்!..

கண்ணாயிரம்:—ரொம்ப நன்றி!.. வர்ரேன்...

(கண்ணாயிரம் போகிறான்... காளிங்கன் தள்ளாடிக் கொண்டே ஏதோ உளறியவாறு வெளியே வருகிறான்.)

காளிங்:— போறவன் எல்லாம் திட்டிட்டுப் போறான்; இவன் ஒருத்தன்தான் நன்றி சொல்லிட்டுப் போறான்... போடா!

★

காட்சி—14 ஏ

ஜமீன் மாளிகை
காளிங்கன் அறைக்கு வெளியே

(வெளியேறிய கண்ணாயிரம் ஒரு தூண்பக்கம் போகும்போது — ஒரு கை அவனைத்தடுத்து இழுத்துப் பிடிக்கிறது. கண்ணாயிரம் அதிர்ச்சி — திகைப்பு — லிங்கனின் கைதான் அது... லிங்கன், சைகை காட்டி கண்ணாயிரத்தைப் பேசாமல் இருக்கச் செய்து — தன்னுடன் தூணில் ஒளித்துக் கொள்கிறான்.

அப்போது காளிங்கன், அவர்கள் ஒளிந்திருக்கும் தூணைக் கடந்து செல்லுதல் — லிங்கன் காளிங்கனைப் பின்தொடரும் சில பகுதிகள் — கண்ணாயிரமும் லிங்கன் பின்னால் செல்கிறான்.)

காட்சி —15 ஜமீன் மாளிகையில் ஒரு பகுதி

(இருளில் மங்கலான விளக்குகளுக்கிடையே சற்று பிரகாச மான ஒளி வட்டத்தின் மத்தியில் மரகதம், புத்தகம் படித்துக் கொண்டிருக்கிருள். காளிங்கன் போதையில் தள்ளாடியவாறு அவள் பின்னல் வந்து, கண்களைப் பொத்துகிருன்... திடுக்கிட்டு கைகளைத் தட்டிவிட்டு எழுந்தவாறு)

மரகதம்:—என்ன மானேஜரய்யா?.. வயசான காலத்திலே சும்மா இருக்க முடியலியா!...

காளிங்:—வயசைப் பார்த்தா உடுருன் மன்மதன்...பாணம்!.. காதலுக்கு வயசு என்ன ஒரு தடையா?... அதை உடைச்சு ரெண்டு பேரும் எறியணும்! இப்போ சின்னப்பசங்க காதல்பண்ருங்களே அதுஎன்ன பிரயோ சனம்?.. ஒண்ணுமே இல்லே. நாமன்ரு பெரிய ஜீனியஸ்!.. பழைய காலத்து மனிதர்கள்... நம்ப காதலே தனி!.. (நெருங்கி வந்து தொடுதல்)

மரகதம்:—ஸ்!.. அப்பறம் நான் ரொம்பப் பொல்லாதவளா இருப்பேன்!..

காளிங்:— பொல்லாதவதான் எனக்குவேணும்! அப்பதான் எனக்கு மூடு கிரியேட் ஆகும். அப்பாவியா இருந்தா அவளுக்கு ஒண்ணும் தெரியாது.. அடிமாடு மாதிரி!

மரகதம்:—(கோபமாக) மானேஜர்!...

காளிங்:— (கொஞ்சலாக) டீச்சரம்மா!...

மரகதம்:— (கண்டிப்பாக) நான் உமாவுக்குத்தான் டீச்சரம்மா! இப்ப உனக்குச் சரியான பாடம் கற்பிக்கப் போற டீச்சரம்மா!...

காளிங்:— பாடம்... சொல்லித் தர்ரியா? சொல்லிக் கொடு! வா...பக்கத்திலேதான் என் படுக்கையறை இருக்கு!. வா; அது என்ன நான் இது வரையில படிக்காத பாடம்னு பார்க்கிறேன்!...

மரகதம்:—மேனேஜர்! மரியாதையா சொல்றேன்! உடனடியா இடத்தை காலி செய்யணும்! — இல்லேண்ணு ஜமீன்தார் கிட்ட சொல்லிடுவேன்!..

காளிங்:— மலரைக் கசக்கி முகரக்கூடாது!... நான் அந்த மாதிரி ப்ளான் உள்ளவன்... ஒரு காலம் வரும்!.. அப்ப, நீ என் கால்ல வந்து விழுந்து காதல் பிச்சை கேப்ப!... எல்லோரும் வர்ர மாதிரி வரமாட்டே.

மரகதம்:—எப்படி?

காளிங்:— வேற சைஸ்! நேரா வந்து குப்புற அடிச்சுப் படுத் துக்குவே!.. படுத்துக்கிட்டு, பிடிச்சுக்குவே..காலே!.. காதல் பிச்சை கொடுங்க!.காதல் பிச்சை கொடுங் கன்னு கேக்கப் போறே!.. அட போடின்னு... விஸ்வாமித்திரர்போஸ்லே அப்படி நிக்கப்போகிறேன்!

(விசுவாமித்திரர் மேனகையை விரட்டி வெறுக்கும்பாணி யில் கையை வைத்து அபிநயம் காட்டுகிற காளிங்கன் கீழே விழுகிறான் தள்ளாடி.)

மரகதம்:— (அலட்சியமாக சிரித்துவிட்டு...) ஒழுங்கா ஒரு இடத் துல நிக்க முடியலே... அய்யாவுக்கு இந்த லட்சணத் திலே காதல்!

(என்றவாறு போகிறாள். இவ்வளவு நேரம் மறைந்திருந்து இந்த நிகழ்ச்சியை லிங்கனும், கண்ணாயிரமும் பார்த்துக்கொண்டிருக் கிறார்கள்.)

லிங்கன்:—கண்ணாயிரம்!.. மரகதம்மா — ஜமீன்தார் உறவிலே ஏதோ மர்மம் இருக்குல்லே!..

கண்ணாயிரம்:—இது மாத்திரமா?.. வாங்க!.. இன்னம் எவ்வளவோ ரகசியம் இருக்கு — சொல்றேன்!..

லிங்கன்:—சரி... சரி... வா!

★

## காட்சி — 16

குதிரை லாயம்

(காலை நேரம் சடையன், குதிரைக்கு சேணம் பூட்டி, தண்ணீர் வைத்துவிட்டு வேறுபக்கம் போகிறான். 'ரம்' பாட்டி லுடன் லிங்கன் மறைந்திருக்கிறான். . . . சடையன் போனதும், குதிரையிடம் நெருங்கி — தன் பையிலிருந்து ',ரம்' பாட்டிலை எடுத்து. . . . தண்ணீரில் ஊற்றிவிட்டு, பாட்டிலை அங்கேயே வீசிவிட்டுப் போய்விடுகிறான்.)

★

## காட்சி—16 ஏ

ஜமீன்வீடு வெளிப்புறம்

(உமாவும், கோகிலாவும் குதிரைச் சவாரிக்கான உடையணிந்து வருகின்றனர்.)

உமா:— கோகிலா! இன்னைக்கு "ஹார்ஸ் ரைடிங்" ஏரிக்கரைப் பக்கம் போய்ட்டு வரலாமா?....

கோகிலா:—ஓ!... உன் இஷ்டப்படி!

(சடையன், குதிரைகளைப் பிடித்துக் கொண்டு வருதல். உமா, 'ரம்' சாப்பிட்ட குதிரையில் ஏறி உட்காருகிறாள். . . . .கோகிலா, தான் ஏறிடவேண்டிய குதிரைக்குப் போவதற்குள், உமா ஏறிய குதிரை முரண்டு பிடித்து வெறியோடு ஓடத் தொடங்குகிறது... அதைச் சமாளிக்க முடியாமல் உமா திணறு கிறாள்.... குதிரை, அவளை மீறி ஓடுகிறது....)

கோகிலா:—உமா! உமா!... (அலறுகிறாள்.)

அதற்குள் லிங்கன் ஓடிவந்து)

லிங்கன்:— என்ன? என்ன?

கோகிலா:— அய்யோ! உமாவைக் காப்பாத்துங்களேன்!...

(லிங்கன், கோகிலாவின் குதிரையில் ஏறிக்கொண்டு பின்தொடருகிறான்.)

★

## காட்சி — 17

(கட்டுக்கடங்காமல் உமாவின் குதிரை செல்கிறது. உமாவின் முகத்தில் அச்சம்! சில சமயங்களில் அலறல்! லிங்கன் தன் குதிரையைத் தட்டிவிட்டு உமாவைக் காப்பாற்றப் பின் தொடர்தல். இறுதியாக ஒரு இடத்தில் குறுக்கு வழியாகக் குதிரையை ஓட்டி லிங்கன், உமாவின் குதிரையருகே சென்று அவளை அப்படியே தூக்கிக் கொள்கிறான். . . . . .இருவரும் உருண்டு ஒரு பகுதியில் உருளுகிறார்கள். உமாவின் குதிரை ஓடிக்கொண்டேயிருக்கிறது. . . உமா, உடல்வலி தாங்காமல் ''அய்யோ! அப்பா! அம்மா!'' என முணகுகிறாள்.)

லிங்கன்:— ஐயையோ! கால்ல அடிபட்டுடுச்சா? கையிலே பட்டுடுச்சா?.. முகத்திலே? முதுகிலே? (என்று உமாவைத் தொட்டுப் பார்க்க..)

உமா:— என்ன இதெல்லாம்?

லிங்கன்:— இல்லே!... முதுகிலே அடிபட்டிருந்தா முதுகெலும்பு முறிஞ்சிருக்கும். . முதல் உதவி சிகிச்சை செய்யலாம்மேன்னுதான் கேட்டேன். ஆபத்துக்குப் பாவம் கிடையாது.

உமா:— உங்க உதவிக்கு ரொம்ப நன்றி! . . . இருந்தாலும் என்னைத் தொடாம காப்பாத்தியிருந்தா.. ரொம்பப் பாராட்டியிருப்பேன்!...

லிங்கன்:— த்சு! த்சு!. . . . அவசரத்திலே நான் ஒரு கயறு எடுத்துக்கிட்டு வர மறந்துட்டேன்! . . .

உமா:— கயறு கொண்டு வந்திருந்தா? . . .

லிங்கன்:— கழுத்திலே அப்படியே கட்டி ஓடுற குதிரை மேலே வீசி. . . குதிரையை அப்படியே நிறுத்தியிருப்பேன்! உன்னையும் தொடாம காப்பாத்தி யிருப்பேன்! . . . இன்னொரு சான்ஸ் கிடைக்காமலா போய்விடும்!

உமா:— ஓ! இன்னொரு தடவை எனக்கு இப்படியாகணும்னு ஆசையா? . . . .

லிங்கன்:— சே! சே! அதெல்லாமில்லே. . . . . உன்னை ஜாக்கிரதையா வீட்டுலே கொண்டுபோய் விடணும். அதுதான் என் ஆசை! மெதுவா.. தொடவும் கூடாது! காப்பாத்தவும் செய்யணும்! . வா! வா!

(இருவரும் நடந்து வருதல். உமா நொண்டியபடியே வருகிருள்.)

*

காட்சி—18 ஜமீன்மாளிகை வெளிப்புறம்

(உமாவும் லிங்கனும் நடந்து வர மரகதம் ஓடிவந்து)

மரகதம்:— துளியோண்டு துளியோண்டு. . . . சின்னச்சின்ன சிராய்ப்புத்தான்! ..(ஆறுதலுடன்..லிங்கனை நோக்கி) பெருங்காயமே கிடையாது தம்பி! . . .

லிங்கன்:— டீச்சரம்மா! இவ்வளவு பெரிய ஜமீன் மாளிகையிலே பெருங்காயம் கிடையாதா?. . . . பெருங்காயம் இல்லே, புளி இல்லேன்னு செகரட்டரிகிட்ட வந்து சொல்றீங்களே. . . . சமையக்காரங்கிட்டே சொல்லுங்க! . . .

மரகதம்:— தம்பி தமாஷ் பண்ணுதப்பா! . . .

(மரகதம் உமாவை அழைத்துக் கொண்டுவர)

ஜமீன்தார்:—உமா! . . .

மரகதம்:— உமா! வாம்மா டிரஸ் 'சேஞ்ச்' பண்ணிகிட்டு காயத்துக்கு மருந்து போடலாம் வா! . .

(என்று அழைத்துப் போகிருள்)

ஜமீன்தார்:—ஏன் சடையா? என்னைக்குமே இல்லாம இன்னைக்கு நம்ம குதிரை வெறிச்சிகிட்டு ஓடக்காரணம்?

காளிங்:— காரணமில்லாமயா நடக்கும்?. (அனைவரும் காளிங்கன் வருவதைக் கவனித்தல். —காலி 'ரம்' பாட்டிலைத் தூக்கிக் காட்டியபடி) . . . 'ரம்'மை குதிரைக்குள்ள விட்டான்.. அது 'கும்'முன்னு குதிக்க ஆரம்பிச்சிடுச்சி!

ஜமீன்தார்:—என்ன சொல்றே காளிங்கா? . . . .

காளிங்:— என்ன சொல்றேனு? பாதியை அவன் குடிச்சான்! மீதியைக் குதிரைக்கு விட்டான்! அந்த அயோக்கியன் இங்கேதான் இருக்கான். அவன் யார் தெரியுமா? ..

(எல்லோருடைய முகத்திலும் யார்? யார்? என்ற கேள்வி)

சடையன்:—யார் அந்த அயோக்கியன்? . . . என் பாதுகாப்பில இருக்கிற லாயத்திலே இப்படியொரு அக்ரமத்தைச் செய்தவன் சொல்லுங்க, அவனைப்பிடிச்சு... 'சவுக்கடி கொடுக்கிறேன்! . . .

காளிங்:— ஒன்றல்ல, ரெண்டல்ல. . . . ஓராயிரம் அடி கொடுக்கணும்! தெரியாத மாதிரி நடிக்கிறியே?.. அந்த அயோக்யன் இவன்தான்! (சடையனைக்காட்டி)

சடையன்:—ஆண்டவனே! எஜமான்! சத்தியமா நான் குடிக்க மாட்டேங்க! . . .

ஜமீன்தார்:— யாராயிருந்தாலும் சரி.. குடிகாரனை நான் மன்னிக்கவே மாட்டேன்! . . .

காளிங்:— அது உங்க கொள்கையாச்சே!

சடையன்:—என் பெத்த பிள்ளை மேல ஆணையா சொல்றேங்க! எனக்குக் குடிப்பழக்கமே கிடையாதுங்க! . . .

காளிங்:— உனக்கு ஏதுடா பெத்த பிள்ளை? அதுதான் தொலைஞ்சு போச்சே! எங்கே போயி பிச்சை எடுக்குதோ? பிள்ளைமேலயா சத்தியம் பண்றே! பெரிய சத்யவானுடா நீ? . . .

சடையன்:—எஜமான்! . . .

(சவுக்கால் அடிக்க கையை ஓங்குதல். லிங்கன் பாய்ந்து சவுக்கடியைத் தன் முதுகில் வாங்கிக் கொள்ளுதல்.)

ஐயோ! . . . செகரட்டரி தம்பி! . . . யாரு பெத்த பிள்ளையோ, என்னால நீங்க அடி வாங்கிட்டிங்களே! . . .

லிங்கன்:— தன் பிள்ளை மீது ஆணை வைத்து சத்யம் செய்த ஒரு தகப்பனை தண்டிப்பது தவறு! . . .

காளிங்:—(சவுக்கைக் கீழே எறிந்தவாறு) செகரட்டரிநீங்க ஒத்துங்க! வேலைக்கார நாயே! உன்னை அடிச்ச அடி அவர் மேல அடிபட்டுப் போச்சே! டேய்! சர்ஜனைக்கூட்டியாடா. உன்னை விடுறதில்லேடா. இன்னைக்கு.. டேய்!.. (கை ஓங்கி அறையப்போகும்போது)

ஜமீன்தார்:—உஸ்.... காளிங்கா!.... வேண்டாம்...

சடையன்:—(ஜமீன்தார் காலில் விழுந்து) எஜமான்!.. என்னை நம்புங்க! . நீங்க அடிச்சாலும் உதைச்சாலும் இந்த அரண்மனை சோத்தை தின்னுகிட்டு கிடக்கிற நன்றியுள்ள நாய்ங்கநான்!

(லிங்கன்உணர்ச்சி வயப்படுகிறுன்.)

★

காட்சி—19

ஜமீன் மாளிகை
லிங்கன் அறை

(சடையன், ஜமீன்தார் காலில் விழுந்து பேசிய வார்த்தைகள் ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

சடையன் குரல்:—''எஜமான் என்னை நம்புங்க...நீங்க அடிச்சாலும் உதைச்சாலும் இந்த அரண்மனை சோத்தை தின்னுகிட்டு கிடக்கிற நன்றியுள்ள நாய்ங்க நான்!''

(லிங்கன் இதழ்கள் ''அப்பா'' என முணுமுணுக்கின்றன. கண்கலங்கிட சட்டையைக் கழற்றி, தோள்பட்டையின் பின்புறத்தில் பட்டுள்ள சவுக்கடி காயத்தைப் பார்க்கிறான் லிங்கன். . . . ஏதோ ஒரு மருந்தை எடுத்து காயத்தில் தடவப் போகிறான். . . . அப்போது சடையனின் கை காயத்திற்கு பச்சிலைச்சாறு தடவுகிறது. ''யார்?'' என்று கேட்டவாறு திரும்பிய லிங்கன் முன்னே சடையன்.)

லிங்கன்:— ங்களா?...

சடையன்:—செகரட்டரி தம்பி!.... இந்த வண்டிக்காரப் பயலுக்காக . . . . நீங்க காயப்பட்டுட்டீங்களே! தம்பி!... இந்தப் பச்சிலையைப் போட்டீங்கன்னு உடனே காயம் குணமாகும்....

(லிங்கன் சடையன் கையிலிருக்கும் பச்சிலைச் சாறு கிண்ணத்தைப் பார்த்தல்... பச்சிலைச்சாறு கிண்ணத்தைப் பிடித்திருக்கும் சடையன் கைவிரலில் ரத்தம் கசிகிறது.)

லிங்கன்:— என்ன, உங்க விரல்ல ரத்தம்....

சடையன்:—அதுவா? . உங்களுக்காகப் பச்சிலை பறிக்கும்போது முள் குத்திட்டுது!... அது பரவாயில்லிங்க தம்பி!... மருந்தைப் போட்டுக்கிங்க!...

லிங்கன்:—போடுங்கள்!... ரத்தம் ரத்தத்தோடு கலக்கட்டும்!... உங்க விரல்ல கசியிற ரத்தத்தையும் என் காயத்தில தடவுங்க! அதைவிட அருமையான மருந்து கிடையவே கிடையாது!

சடையன்:—தம்பி!... என்ன சொல்றீங்க?

லிங்கன்:— உழைப்பாளிகளின் ரத்தமே மருந்து மாதிரிதானே!... அதைத்தான் சொல்ல வந்தேன். நீங்க போடுங்க!

(சடையன் மகிழ்ச்சியை வெளிப்படுத்தி மருந்தைப் போட்டுவிட்டு...)

சடையன்:—சரிங்க... வர்ரேங்க!... என்னை மன்னிச்சிடுங்க!

(குனிந்து கூனி வணங்கி கைகூப்புதல்.)

லிங்கன் :— அய்யோ!... இதெல்லாம் வேண்டாங்க!

(சடையனின் கையைப் பிடித்துத் தடுத்தல், சடையன், உணர்ச்சி மிகுதியுடன் போகிறான். . . . அவன் போனதும் கோகிலா, ஒரு மருந்துக் கிண்ணத்துடன் வருகிறாள். அவள் சடையன் போவதைப் பார்த்துக் கொண்டு வருகிறாள்.)

லிங்கன்:—வாம்மா கோகிலா! . .

(லிங்கன் தோள்புறத்தைப் பார்த்து)

கோகிலா:—அடேடே. . எனக்கு முன்னாடி அந்த சடையன் முந்திகிட்டு மருந்தைப் போட்டுட்டுப் போய்ட்டானே! நான் எவ்வளவு அருமையான மூலிகை கொண்டு வந்திருக்கிறேன். . . . இந்த மூலிகை மாத்திரம் உங்க காயத்திலே பட்டா எவ்வளவு இதமா இருக்கும் தெரியுமா?. . . .

லிங்கன் :— இதமா இருக்குமா? யாருக்கு?

கோகிலா:—உங்களுக்குத்தான் பின்னஎன்ன எனக்கா?(சிரிக்கிறாள்)

லிங்கன்:— ஏன் சிரிக்கிறே?

கோகிலா:—நீங்க கேலி பண்ணினா சிரிப்பு வராதா?. அதிருக்கட்டும்.. இவ்வளவு கஷ்டப்பட்டு பறிச்சு, அறைச்சு, சாறு பிழிஞ்சு நான் கொண்டு வந்திருக்கிற இந்த மருந்தை என்ன பண்றது?

லிங்கன் :— அப்போ ஒண்ணு செய்! காளிங்கராயனைக் கூப்பிட்டு இன்னொரு அடி சவுக்கால (மறுபுறம் தோளைக்காட்டி) இந்தப் பக்கத்தில கொடுக்கச் சொல்லு! உன் மருந்து வீணாப்போகாம அந்தக் காயத்தில போடலாம்! . . .

கோகிலா :—காளிங்கராயன்!.... இனிமே அவன் உங்களை அடிச்சான்னா, சவுக்கைப் பிடுங்கி நானே அவனைத் திருப்பி அடிப்பேன்!

லிங்கன்:— அப்போ நானே இந்த மருந்தைக் கொண்டு போயி அவன் காயத்திலே தேய்ச்சி விட்டுடறேன்!

கோகிலா:— ஆமா உங்க ஊர் எது? உங்க தாய் தகப்பனார்.... மிட்டாவா? மிராசா? ஜமீனா..நிலபுலம் எவ்வளவு?

லிங்கன்:— அது என்ன அப்படிக் கேட்டுட்டே...? இந்தப் பூமண்டலம்...சூரிய மண்டலம்...சந்திர மண்டலம் இதான் எங்கள் பூர்வீகச் சொத்து!..இது போதாதுன்னு செவ்வாய் மண்டலத்தையும் விலை பேசிக் கொண்டிருக்கிறேன்!

கோகிலா:— செவ்வாயா?...

லிங்கன்:— உம்!..பெண்களின்வாய் செவ்வாய்தானே!..

கோகிலா:— அப்படின்னா...நான் நினைக்கிறபடி...நீங்க சாதாரண மனிதர்தான்!..இல்லியா?...

(கோகிலா சிரித்துக் கொண்டே ஓடி விடுகிறாள்....)

லிங்கன்:— (தனக்குள்) கள்ளம் கபடம் இல்லாத பெண்!.... அவ பாட்டுக்கு மனம்விட்டுச் சிரிக்கிறாள்...பேசுகிறாள்... ஓடுகிறாள்... What an innocent girl!

## காட்சி — 20

(கோகிலா, உமா நீச்சல் குளக்கரையில் அமர்ந்திருப்பதைப் பார்க்கிறாள். உமா, நீரில் லிங்கனின் உருவத்தைப் பார்த்தல்.... கற்பனையாக..அந்த நினைவில் லயித்திருக்கும்போது; அருகே வந்த கோகிலா...'உமா' எனக் குரல் கொடுக்க உடனே உமா, தண்ணீரைக் கலக்கி விட்டு விட்டு...சமாளிக்கிறாள்.)

கோகிலா:— ஓகோ...புரியுது! புரியுது!...உமா!...நீரில் எழுதிய நினைவுச் சித்திரத்தை ஏன் கலைச்சிட்டே?...யார் அது? அம்மா தமயந்தி! யார் அந்த நளன்? சகுந்தலா! யார் அந்த துஷ்யந்தன்?...

உமா:— போடி கோகிலா...

கோகிலா:—உமா!...உமா!...என்கிட்ட மறைக்காதே! எனக்கு எல்லாம் தெரியும்!..கொஞ்ச நாளா நீ...

உமா:— கோகிலா!...உன்கிட்ட சொல்லிடணும்னு எனக்கு மனசு துடிக்குது...ஆனு...

கோகிலா:— என்ன?...யாரு?...

உமா:— நீ என்ன நினைக்கிறே நம்ப செகரட்டரி லிங்கன் இருக்காரே...

(கோகிலா முகமாற்றம்)

அவர் நம்ப ஜமீன் அந்தஸ்துக்கு சமமான அந்தஸ்துள்ளவரா இருப்பாரா?..இல்லை...சாதாரணமான குடும்பத்தைச் சேர்ந்தவரா இருப்பாரா?... லிங்கனை நான் விரும்புறேன்!..ஆனு...அதே நேரம் அவர் ஒரு சதாராணக் குடும்பத்தைச் சேர்ந்தவர்னு தெரிஞ்சு போச்சுன்னு... அடுத்த நிமிஷமே...என் நெஞ்சிலே இருந்து அவரைத் தூக்கி எறிஞ்சிடுவேன்!..

கோகிலா:—ஏன் இவ்வளவு கஷ்டம்..அவர்... எப்படிப்பட்டவர்னு பூவா தலையா போட்டுப் பாத்துடுவோமே!.. (தன் ஜாக்கெட்டுக்குள் இருந்து ஒரு ரூபாய் நாணயத்தை எடுத்து) தலைவிழுந்தா அவர் பெரிய குடும்பம்.. பூ விழுந்தா...சாதாரண குடும்பம்...சரிதானு?...

(உமா, மௌனமாகப் புன்னகை புரிகிறாள். கோகிலா நாணயத்தைச் சுண்டி விடுதல்...தலைப் பக்கம் விழுகிறது.)

ஆ! தலை! தலை;...

(உமா, சிரித்தவாறு, ''போடி'' என நாணிக்கோணிஓடுகிறாள்..)

பிள்ளையாரப்பா! இந்தத் தடவை பூ விழ நீதான் அருள் புரியணும்!

(கோகிலாவின் மன அலைகள் பேசுகின்றன — திரும்பி வந்து நாணயத்தை எடுத்து சுண்டுகிறாள்...இப்போது 'பூ' விழுகிறது... 'பூ' பக்கமும் கோகிலா முகமும் மாறிமாறிக் காட்சியாகின்றன.. நாணயத்தை எடுத்துத்தலைப்பாகத்தைப் பார்க்கிறாள்..அந்தத்தலை

ஜார்ஜ் மன்னர் தலையாக இருக்கிறது. அந்தத் தலை லிங்கன் தலையாக மாறுகிறது...நினைவு அலைகள்..

(லிங்கன் — கோகிலா காதல் கீதம்)

லிங்கன்:— மேடையில் ஆடிடும்
மெல்லிய பூங்காற்றே! — நீ
ஆடையில் ஆடினால்
மன்மதன் விளையாட்டே!
மேனகை போலொரு
பூநகை புதுப்பாட்டே! — உன்
மேனியின் சாயலோ
ஆனந்த நீரூற்றே!

கோகிலா:—பழுக்கப் பழுக்க—ரசம்
பிழியப் பிழியப்—பழம்
உள்ளூரக் கள்ளூறத்
தள்ளாடுமோ?

குடிக்கக் குடிக்க மனம்
மிதக்க மிதக்க தினம்
வண்டாட்டம் கொண்டாட்டம்
உண்டாகுமோ?

ஓடை மீனோட
ஓடும் நீர் வேண்டும்!
உறவில் நானோட
ஒருவன் நீ வேண்டும்! — மேடையில்

லிங்கன் ஒடிய ஒடிய இடை
நெளிய நெளிய நடை
உல்லாசப் பல்லாக்கின்
ஊர்கோலமோ?

நெருங்க நெருங்க மெல்ல
ஒதுங்க ஒதுங்க எண்ணும்
ஊடல்கள் யுவராணி
ஒய்யாரமோ?

மாலை இடலாமோ?
மஞ்சம் வரலாமோ?
சேலை தொடலாமோ?
கைகள் படலாமோ? — மேடையில்

கோகிலா:- நழுவ நழுவ என்னைத்
தழுவத் தழுவ வரும்
வித்தைகள் கண்ணு! உன்
வெள்ளோட்டமோ?

லிங்கன்:- மயக்கி மயக்கிப் பின்பு
மறைத்து மறைத்து வைத்தல்—
அன்பே! உன் செல்வாக்கின்
அடையாளமோ?

கோகிலா:- காதல் விளையாடக்
காவல் கிடையாதோ?

லிங்கன்:- காவல் தடைபோட்டால்
ஆவல் மீறுதோ? — மேடையில்

★

காட்சி—20-ஏ

(கோகிலா—லிங்கன் கனவு கீதம் முடிகிறது. கோகிலா, ரூபாய் நாணயத்தையே உற்று நோக்கியவாறு இருக்கிறாள். மரகதம் பின்னிருந்தவாறு தோளைத் தொடுகிறாள்.)

கோகிலா:— (மெய்மறந்த நிலையில் மரகதத்தின் கையைப் பிடித்தவாறு) லிங்கன்!..

மரகதம்:— லிங்கனா? வர வேண்டிய நோய் வர வேண்டிய வயசிலே வந்தாச்சா?..

கோகிலா:—(சடக்கென) ஏம்மா! அந்தநோய் உங்களுக்கு எத்தனை வயசுலம்மா வந்துச்சு?

(மரகதம் திடுக்கிடுதல் — சுதாரித்து)

மரகதம்:— சீ! சரியான வெகுளிப் பெண்ணு வந்து பிறந்தேடி எனக்கு!. ஆமா ..கோகிலா! என்னு விஷயம்..காதலா?

கோகிலா:— அம்மா நீங்கதான் ஒரு ஜோஸ்யம் சொல்லுங்களேன்! லிங்கன் எனக்குக் கிடைப்பாரா? இல்லே, உமாவுக்குக் கிடைப்பாரா?

மரகதம்:— ஓகோ! இதுலப் போட்டிப் பந்தயம் வேறயா?

கோகிலா:—ஆமாம்மா!..ஜமீன் குடும்பத்துக்கு ஏத்த அந்தஸ்த்து இருந்தா உமா அவரைக் கல்யாணம் பண்ணிக்குவா ளாம்...

மரகதம்:— இல்லேன்னு, நீ தயார்ன்னு சொன்னியாக்கும்...?

கோகிலா:— சொல்லலேம்மா... நினைச்சுகிட்டிருக்கேன்!..

மரகதம்:— நினைப்போட இருக்கட்டும் — ரொம்ப நெருங்கிடாதே!

கோகிலா:— அம்மா! என் மனோநிலையை எப்படிம்மா அப்படியே உங்கிட்ட சொல்ல முடியும்?..

மரகதம்:— சொல்ல முடியிலேன்னு விபரமா எழுதிக்கொடு!..

கோகிலா:— அதைக் கொண்டு போயி, அவருகிட்ட கொடுத்திடு றிங்களாம்மா!...

மரகதம்:— நான் கொண்டு போய் கொடுக்கணுமா? அந்தக் காலத்திலே அன்னம் விடு தூதும்பாங்க!...இப்ப நீ அன்னை விடு தூதே நடத்துறேங்கிறியா?...

கோகிலா:— அம்மா! அப்படின்னு என் காதல்...என்னுகிறது?..

மரகதம்:— கொஞ்ச நாளைக்கு ஊறுகாய்ப் பானையிலே போட்டு வையி!...அது ஒண்ணும் ஊசிப் போயிடாது!..

கோகிலா:— ஊறுகாய் போட...என்ன மாங்காயா? எலுமிச்சங் காயா?...

மரகதம்:— மாங்காய்க்கும்,எலுமிச்சங்காய்க்கும் தேவை வந்துடக் கூடாதுன்னுதான்.. அவசரப்படாதேங்கிறேன்!..

கோகிலா:— சரிம்மா!..நீங்க அவரைப்பற்றி...

மரகதம்:— ஆராய்ச்சியை ஆரம்பிக்கிறேன். அதுவரைக்கும் நீ கொஞ்சம் பொறுமையா இரு!..

(கோகிலா தாயைத் தழுவிக் கொள்ளுதல்.)

★

காட்சி — 21 ஜமீன் மாளிகை

ஜமீன்தார் அலவலக அறை

(ஜமீன்தார், லிங்கன் இருவரும் — பெரிய பெரிய கணக்குப் பேரேடுகளை அடுக்கிவைத்து, அவைகளைப் புரட்டிக்கொண்டிருக்கிறார்கள்.)

ஜமீன்தார்:—மிஸ்டர் லிங்கன்!.எந்தக் கணக்கு இடிக்குதுன்னு சொன்னீங்க!..

லிங்கன்:—நம்ப ஜமீன்கிராமங்களிலே விவசாயிகள் கட்டவேண்டிய கிஸ்தி பூரா கட்டியிருக்காங்க!.. அதுக்குக் கணக்கு இருக்கு!.ஆனா..நம்மகிட்ட இருப்பு இருக்கிற உணவு தானியம் ரொம்ப குறைவா இருக்கு...

ஜமீன்தார்:—உணவு தானியம், கணக்கிலே குறைவா இருக்கும்!.. நம்ப களஞ்சியத்திலே சரியா இருக்கும்!..

லிங்கன்:—அப்படின்னா..களஞ்சியத்திலே..பாழாப்போற தானியயத்தை ஏழைபாழைகளுக்குக் கொடுக்கலாமே!..

ஜமீன்தார்:—நல்லா சொன்னீங்க போங்க!..மிஸ்டர் லிங்கன்!... களஞ்சியத்திலே இருக்கிற தானியம் எதுவும் பாழாப் போகாது.. அப்படியே பணமா மாறும்!.. அதுவும் கறுப்புப்பணமா மாறும்!..லிங்கன்! இதெல்லாம் நம்ப ஜமீன் ரகசியங்கள்!..சர்வ ஜாக்கிரதையா காப்பாத்தணும்!...மேலும்...

(அப்போது உமா வருகிறாள்.)

உமா:—அப்பா! அப்பா!...

ஜமீன்தார்:—உமா கண்ணு என்னம்மா?...

உமா:—அப்பா!.நான் இன்னைக்கு நம்ப எஸ்டேட்டுக்குப் போயிட்டு நாளைக்கு வந்துடுறேன்!..

ஜமீன்தார்:—போயிட்டு வாம்மா!.. தனியா குதிரையிலே கிளம்பிடாதே!..என் வண்டியை எடுத்துகிட்டு போ!..

உமா:—சரிப்பா!...

(திரும்புகிறாள்.)

ஜமீன்தார்:—உமா!..வண்டியையும் நீயே ஓட்டிகிட்டு புறப்பட்டுடாதே!..வண்டிக்கார சடையனை அழைச்சிகிட்டுப் போ!

உமா:—சரிப்பா!

ஜமீன்தார்:—நீ பயணத்துக்கு ரெடியாகு!..சடையனை நான் அனுப்புறேன்!..

உமா:—சரிப்பா!...

(எனக்கூறிவிட்டு உமா போய்விடுகிறாள் குதித்துக்கொண்டு)

ஜமீன்தார்:—மிஸ்டர் லிங்கன்!..நம்ப வண்டிக்கார சடையனுக்குச் சொல்லி அனுப்பி..உமாவோட எஸ்டேட்டுக்குப் போகச் சொல்லுங்க!..

லிங்கன்:—ஓ எஸ்!..ஓகே!...

(ஜமீன்தார் போய்விடுகிறார். லிங்கன் முகத்தில் மாற்றம்.)

★

## காட்சி — 22

(பல பகுதிகளில் வண்டி போய்க்கொண்டிருக்கிறது. உமா, ஏதோ ஒருபுத்தகத்தை வண்டியில் படித்துக்கொண்டு போகிறாள். ...பொழுது போய்க்கொண்டேயிருக்கிறது.

★

## காட்சி — 22-ஏ

உமா:—சடையா! விளக்கை ஏத்து!..

(அதுவரையில் கம்பளிச் சட்டையுடன் வண்டி ஓட்டிக் கொண்டிருந்த லிங்கன், தீக்குச்சியைப் பொருத்த அந்த ஒளியில் அவன் முகத்தைக்கண்டு உமா, வியப்பும் திகைப்பும் அடைதல்.)

உமா:—நீங்க எப்படி வந்தீங்க? சடையன் என்ன ஆனான்?

லிங்கன்:—எஸ்டேட்டைச் சுத்திப் பார்க்கணும்னு எனக்கும் ஆசையா இருந்தது!...

உமா:—அதுக்காக... (உமா வண்டியிலிருந்து இறங்கி) இதெல்லாம் என்ன விளையாட்டு? என் குணம் தெரியாம நடந்துக்கிறீங்க?..

(இந்தப் பேச்சுக்கிடையே வண்டியின் லாந்தர் விளக்கு ஏற்றப்படுகிறது.)

லிங்கன்:—சரி, உனக்குப் பிடிக்கிலேன்னா..இப்பவே நான் திரும்பிப் போறேன்... (இறங்கிப் போக முனைகிறான்).

உமா:—ரொம்ப ஒழுங்கா இருக்கு..என்னை இருட்டிலே தனியா தவிக்க விட்டுட்டா?... (திடுக்கிட்டு வழியை நோக்கி) அடேடே.., பாதைகூட தவறிட்டுது போலிருக்கே!... விளக்கைக் கொடுங்க!...

(என்று விளக்கை எடுத்துக்கொண்டு கீழே இறங்கி, அங்குள்ள மைல் கல்லைப் பார்க்கிறாள்..

''டேவிட் துரை எஸ்டேட் பங்களாவுக்குப் போகும் வழி''—என்ற போர்டில் விளக்கின் உதவியால் எழுத்துக்களைப் படிக்கிறாள்.

நம்ப ஜமீன் எஸ்டேட்டுக்குப் போற வழியை இருபது மைலுக்கு அப்பாலேயே தவற விட்டாச்சு!..

லிங்கன்:—வழி காட்டாதது யாரு குற்றம்?..நான் புதுசு!..

உமா:—இப்ப என்ன பண்றது?...

லிங்கன்:—என்ன பண்றது?...

உமா:—பொழுது விடியிற வரையிலே இங்கேயே உக்காந்து கிடக்க வேண்டியதுதான்!

லிங்கன்:—உம்! உக்காந்து கிடக்கலாம். ஆனா பயங்கரமான காடு! ஒருவழி சொல்றேன்..என்னை உங்கப்பாவுக்கு அறிமுகப் படுத்தினாரே டேவிட் துரை. அவருக்கு ஒரு பங்களா.. இங்கேதான் இருக்கு!..ரொம்ப கிட்ட இருக்கு!..

உமா:—அதான்..இந்தக் கல்லிலேயே போட்டிருக்கே!...

லிங்கன்:—அங்கே போய் ராத்திரிக்கு தங்கலாம்!.. காலையில எஸ்டேட்டுக்குத் திரும்பலாம்!..

உமா:—சரி!...

லிங்கன்:—ஏறு வண்டியிலே!

★

காட்சி—23 டேவிட் பங்களா வெளிப்புறம்

(வண்டி நிற்கிறது..இருவரும் இறங்குதல்.)

லிங்கன்:—உமா, இதான் டேவிட் துரை பங்களா!..கோடை காலத்தில இங்கதான் வந்து தங்குவார்.. நான்கூட வந்திருக்கேன்!..

(கேட்டைத் திறந்து காம்பவுண்டுக்குள் வந்தவாறு...)
ஜம்பூ! ஜம்பூ!...

(வேலைக்கார ஜம்பு ஓடிவருதல்.)

ஜம்பு:—சார்! சார்! நீங்களா? வாங்க—வாங்க—அம்மா யாரு?.. சாருக்குக் கல்யாணம் ஆயிட்டுதா?..என்ன சார் எனக்கு ஒரு பத்திரிகைகூட அனுப்பலே!..

லிங்கன்:—(ஜம்புவின் வாயைப் பொத்தி)...ஏ, ஏ!..சும்மா இரு!.. உமா!..நீ உள்ளே போ!...

ஜம்பு:—சார்!..உங்களுக்கு ரொம்பப் பொருத்தம் சார்!...

லிங்கன்:—சரி! சரி!..சாவிக்கொத்தை என்கிட்டகொடுத்துட்டு... சாப்பாட்டுக்கு முதல்ல ஏற்பாடு பண்ணு!

ஜம்பு:—இப்பவே ரெண்டு கோழி அடிக்கிறேன்!

★

காட்சி—24 டேவிட் மலைப்பங்களா உட்புறம்

(லிங்கனுக்கு முன்பு, உள்ளே வந்த உமா, அந்த அறையில் உள்ள கனல் அடுப்புக்கருகே சென்று குளிர் காய்ந்து கொண்டிருக்கும்போது லிங்கன் உள்ளே நுழைகிருன்!)

லிங்கன்:— என்ன உமா, ரொம்பக் குளிருதா?...சூடா ஒரு கப் 'டீ' போட்டுத் தரட்டுமா?

உமா:— எனக்கு ஒண்ணும் வேண்டாம்!...பசியுமில்லே ஒண்ணுமில்லே!..படுத்துத் தூங்கிஞ போதும்!

(லிங்கன் சுற்றுமுற்றும் பார்க்கிருன். ஒருகட்டில், ஒருநீண்ட சோபா, நாற்காலிகள் மட்டுமே இருக்கின்றன.)

லிங்கன்:— அடடே..கட்டில்கூட ஒண்ணுதான் இருக்கு!..சரி, பரவாயில்லே. நீ கட்டில்லே படுத்துக்க!...நான் இந்த சோபாவிலே கட்டையைச் சாய்க்கிறேன்!...

உமா:— நோ! நோ! வேண்டாம்...வேண்டாம்!

லிங்கன்:— ஏன்? அப்படின்ஞ நீ சோபாவிலே படுத்துக்க நான் கட்டில்ல படுத்துக்கிறேன்.

உமா:— இல்லே!...நான் சொல்ல வந்தது அது இல்லே!...

லிங்கன்:— (புரியாதவனைப்போல, வெகுளித்தனமாக பாவனை செய்து) அப்ப நம்ப ரெண்டுபேருமே ஒரே கட்டில்லே படுத்துக்குவோம்!

உமா:—ஷட் அப்!..

லிங்கன்:—ஆமாமா அது அவ்வளவு நல்லா இருக்காதில்லே...சரி உமா, நீயே முடிவுபண்ணு—கட்டில்ல யாரு படுக்கிறது? சோபாவிலே யாரு படுக்கிறது!

உமா:—அந்தப் பிரச்சினைக்கே இடமில்லை. நான் இங்கே உள்ளே கட்டிலிலே படுக்கிறேன்! நீங்க வெளியில வராண்டா விலே படுங்க!..

லிங்கன்:—அய்யோ.. வெளியிலியா?.. அங்க படுத்தா எலும் பெல்லாம் வெடவெடன்னு நடுங்குமே!.

உமா:—எலும்பெல்லாம் விடவிடன்னு நடுங்கும்..ஆ!..

லிங்கன்:—ஆமா!..பல்லெல்லாம் தடதடன்னு தந்தியடிக்கும்!..

உமா:—பல்லெல்லாம் தடதடன்னு தந்தியடிக்குமா? இந்தாங்க!

(என்று லிங்கனிடம் கம்பளியையும் தலையணையையும் உமா கொடுக்கிறாள். லிங்கன் வெளியே வந்து கம்பளியை விரிக்கிறான். ஜம்பு வருகிறான்.)

ஜம்பு:—என்ன சார்! இந்த குளிர்லே இங்கே படுத்திருக்கீங்க? உள்ளேதானே ஹீட்டர் இருக்கு!

லிங்கன்:—உம்!..உள்ளே இருக்கிற ஹீட்டர் சூடு ரொம்ப அதிகமா இருக்கு! அதான் வெளியே படுத்திருக்கேன்! போய்யா! நீ ஒருத்தன்!..யோவ்! வாய்யா இங்கே! எனக்கு ஒரு உதவி பண்றியா?

ஜம்பு:—என்ன உதவி? உள்ளே போறதுக்கா?

(ஜம்புவின் காதில் லிங்கன் ஏதோ சொல்ல அவன் சிரிக்கிறான்.)

(உமா உள்ளே படுத்திருக்க யானை பிளிறும் சப்தம் கேட்டு பயப்படுகிறாள்.)

லிங்கன்:— யானைமாதிரியே இருக்கு! கத்து!...கத்து!

(ஜம்பு கத்துதல்.)

*

## காட்சி 24-ஏ

(உள்ளே உமா பயந்து நடுங்குதல். லிங்கனும் ஜம்புவும் வெளியே பல மிருகங்களைப் போலக் கத்துதல். உமா பயந்து, எழுந்து வருகிறாள். லிங்கன் ஜம்புவை மறைந்துகொண்டு கத்தச் சொல்ல, ஜம்பு அவ்விதமே கத்த, லிங்கன் படுத்துக்கொள் கிறான். உமா கதவைத் திறந்துகொண்டு வெளியே வருகிறாள். லிங்கன் தூங்குவதுபோல பாசாங்கு செய்ய, அவன் மீது சேலைத் தலைப்பைப் போட—அவன் அலறியடித்துகொண்டு எழுகிறான்.)

லிங்கன்:—நீயா?

உமா:—எல்லா மிருகமும் இப்படிக் கத்துதே!..உங்களுக்கு பயமே இல்லியா?

லிங்கன்:—எனக்கென்ன பயம்? ஒரு பயமும் இல்லே!—புலி வந்தா என்னை வாயாலே கிழிக்கும். யானை வந்தா ஒரே மிதி மிதிக்கும். மிச்சம் ஏதாவது எலும்புங்க இருந்தா ஓநாய்களெல்லாம் தின்னுட்டுப் போயிடும்!.. நீ ஏன் கவலைப்படுறே? நீ போயிப் படுத்துத் தூங்கு போ!

(உமா போகிறாள். ஜம்புவிடம் கத்தும்படி லிங்கன் சைகை காட்ட—ஜம்பு யானைபோல் கத்த—உமா அலறியடித்து ஓடி வந்து லிங்கனைக் கட்டிக்கொள்கிறாள்.)

உமா:—நீங்க தயவு செஞ்சு உள்ளே வந்து படுத்துக்குங்க!..

லிங்கன்:—ஊஹூம்!..ஒரு பொண்ணு தனியா இருக்கும்போது ஒரு ஆணும் அதே ரூம்லே இருக்கிறதா? தர்மமகாது.

உமா:—ஒரு ஆணை அநியாயமாச் சாகவிடுறது ஒரு பொண்ணுக்கும் தர்மமாகாது. நீங்க இப்போ உள்ளே வந்து படுக்கப் போறீங்களா இல்லையா?

லிங்கன்:—அப்படிச் சொல்றியா? அதிலேயும் ஞாயம் இருக்கு! உனக்கு எந்தப் பழியும் வரக்கூடாதுங்கறதுக்காக நான் அங்கே வந்து படுக்கிறேன்!

(இருவரும் உள்ளே போக ஜம்பு மகிழ்தல்.)

★

## காட்சி-24-பி டேவிட் மலைப்பங்களா உட்புறம்

(லிங்கன் விசிலடித்தபடி உள்ளே வந்து புத்தக அலமாரி யிலிருந்து ஒரு புத்தகத்தை எடுக்கிறான். உமா கட்டிலில் படுத்திருக்கிறாள். லிங்கன் உமாவைப் பார்த்துவிட்டு)

லிங்கன்:—அடடா! த்சு! த்சு!...த்சு!..

(உமா கட்டிலில் படுத்திருக்கிறாள். கண்ணைத் திறந்து பார்க்கிறாள்.)

ஆஹா! ஆஹா!

(உமா பார்த்தல்...திரும்பி படுத்தல்.)

லிங்கன் குரல்:—சபாஷ்!..ஆரம்பமே பிரமாதம்..எக்ஸெலெண்ட்!..

(உமாவின் முதுகுப்புறம் இந்தக் குரல் ஒலிக்கிறது.)

உமா:—என்னது...எக்ஸெலெண்ட்?...

லிங்கன்:—பின்பகுதி ரொம்பப் பிரமாதம்!..அதாவது இந்தக்கதையோட பின்பகுதி..ரொம்ப நல்லாயிருக்கு!..நான் உன் கிட்ட பேசலே!..எனக்கு நானே படிச்சு ரசிச்சுகிட்டு இருக்கேன்!..

உமா:—புஸ்தகத்தை தலைகீழாத்தான் படிப்பீங்களா?

லிங்கன்:—எனக்கு எப்போதும் முடிவு தெரிஞ்சுகிறதிலே இண்ட்ரெஸ்ட் அதிகம்! கதையோட ஆரம்பத்தை நான் அப்புறம்தான் படிக்கிறது...

உமா:— அது என்ன புஸ்தகம்—அதையாவது சொல்லுங்களேன்!

லிங்கன்:— ஊஹூம்!...உன்கிட்ட சொல்லக்கூடாது.

உமா:— ஏனாம்?

லிங்கன்:— இது செக்ஸ் கதை...!

(லிங்கன் புத்தகத்தை முணுமுணுவென்று மந்திரம் ஜபிப்பதைப் போல் படித்துக்கொண்டிருக்கிறான்...சிரிக்கிறான் — ஓகோ! ஓகோ!! என்கிறான்—பொறுத்துப் பொறுத்துப் பார்த்த உமா, அவனைப் பார்த்து)

உமா:— மழை காலத்துத் தவளை மாதிரி மந்திரத்தை ஜபிக்கிறீங்களே— கொஞ்சம் உரக்க படிச்சா என்னவாம்?

லிங்கன்:— செக்ஸ் கதையை மார்கழி மாசத்து பஜனை மாதிரியா எல்லார் காதிலேயும் விழும்படியா படிக்க முடியும்?...

(புத்தகத்தில் கண்களைப் பாய்ச்சி)

அதிலும் இந்த இடம் இருக்கே...ஆகா! ஆகா! என்ன சுவை! என்ன சுவை! தேன் கலந்து, பால் கலந்து, செங்கரும்புச் சாறு கலந்து, என் ஊன் கலந்து, உயிர் கலந்து உவட்டாமல் இனிக்கின்ற சுவை!

உமா:— அதைத்தான் படிக்கச் சொல்றேன் — இல்லேன்னா இங்க கொடுங்க; நான் படிச்சிக்கிறேன்.
(எனப் புத்தகத்தைப் பிடுங்கத் தாவிப் போகிறாள் — புத்தகத்தை அவளிடம் தராமல்..)

லிங்கன்:— ஏங்கப்பா! உனக்கு எவ்வளவு கோபம் வருது. இதிலே என்ன எழுதியிருக்கு தெரியுமா? அதாவது படிக்கிறேன் கேளு!

(லிங்கன் போகிறான்.)

காட்சி-24 சி

(லிங்கன் பாட்டு)

கார்த்திகை மாதம் கார்காலம்!
கங்குலில் எங்கும் பனிமூட்டம் — உடல்
வேர்த்திட நின்றாள் பருவச்சிலை! அதை
வேடிக்கைப் பார்த்தது பள்ளியறை!

படுத்தாள்; புரண்டாள்;
உறக்கமில்லை! சுகம்
எடுக்கவும் கொடுக்கவும்
ஒருத்தனில்லை!

மடல் கொண்ட வாழை
உடல் கொண்ட பாவை!
இடைகொள்ளவில்லை
அவள் கொண்ட சேலை!
அவன் வந்த பின்பு
அதற்கென்ன வேலை?

வந்தான்; செந்தேன்
தந்தான்! — செவ்
வாய் மீது ஓயாமல் முத்தாடினான்!
வண்ணம் கொஞ்சும்
அன்னம்! தன்
பூமேனி போதைகள் கொண்டாடினாள்!

படுத்தாள்! புரண்டாள்! உறக்கமில்லை!
சுகம் எடுக்கவும் கொடுக்கவும் தடுக்கவில்லை!

நீர் கொண்ட மேகம்
நிலம் வந்து சேர
அனல் கொண்ட பூமி
குளிர் கொண்டு ஆற
கொடி கொண்ட பூவில்
மதுவெள்ளம் ஊற —
முன்னும் பின்னும்
மின்னும் — பொன்
மானோடு ஆனந்த
நீராடினான்!

மெத்தை — தத்தும்
தத்தை; தன்
தாபங்கள் தாளாமல்
போராடினுள்! (படுத்தாள்)

ஸ்வரம் கொண்ட வீணை
அவன் கொண்டு மீட்ட;
உளம் எங்கும் நல்ல
உயிர் நாதம் கேட்க;
உறவென்ற ராகம்;
அரங்கேற்றம் ஆக—

இன்பம் என்னும்
சந்தம் — தன்
பாட்டாகப் பூங்கோதை
தாலாட்டினுள்!

இன்னும் இன்னும்
என்று—தன்
காதாரத் தான் கேட்டுப்
பாராட்டினுன்! (படுத்தாள்)

(இருவரும் காதலில் மயங்கு கின்றனர் — லிங்கன் பிடியில் உமா விழுகிருள்!)

[பொழுது விடிகிறது]

★

## காட்சி–24 டி

(உமா, விம்மி விம்மியழுது கொண்டிருக்கிருள்...அழுகுரல் கேட்டு, லிங்கன் அவளருகே செல்கிருன்.)

லிங்கன்:— உமா!... உமா!... (அவள் முகவாய்க் கட்டையைக் கையால் தூக்கி) அழாதே, அழக்கூடாது!..

உமா:— நீங்கள் வேண்டுமானுல் சந்தோஷமா இருக்கலாம்... ஏன்ளு உங்க சதி நிறைவேறி விட்டதல்லவா?....

லிங்கன்:— (லேசான புன்னகை) சதி! உமா!...சதிங்கிற வார்த்தை தனியா இருக்கிறப்பதான் அதுக்கு பயங்கரமான அர்த்தம். சதியோட பதியும் சேர்ந்து, சதிபதி ஆயிட்டா... அதுக்கு புனிதமான அர்த்தம்!

உமா:— எப்படியோ...மன்னிக்க முடியாத குற்றத்துக்கு என்னை ஆளாக்கிட்டீங்க!..(அழுகிருள்)

லிங்கன்:— கவலைப்படாதே!..நமக்குள் நடந்துவிட்ட இந்த விவகாரம்; யாருக்கும் தெரியாம ரகசியத்தை நான் காப்பாத்துவேன்!..

உமா:— திட்டம் போட்டு என்னைக் கெடுத்துட்டு, இப்ப ரகசியத்தைக் காப்பாத்துறேன்கிறிங்க!

லிங்கன்:— திட்டமில்லே உமா!
லிங்கன் குரல்:— திட்டமில்லே!.. இது நான் மேற்கொண்ட சபதம்!... எடுத்துக் கொண்ட சூளுரை!)

★

காட்சி—25 சடையன் வீடு

(லிங்கனின் தாயார் சொர்ணத்தின் படத்திற்கு சடையன், மாலை அணிவிக்கிறுன்.)

சடையன்:— சொர்ணம்...நீ என்னை விட்டுப் பிரிஞ்சு பதினஞ்சு வருஷமாவுது...நீயும் நம்ப பெத்த பிள்ளையும் இருந்திருந்தா நம்ப பேரனையோ அல்லது பேத்தியையோ நம்ப ரெண்டு பேரும் கொஞ்சிக்கிட்டு இருந்திருக்கலாம்...சொக்கலிங்கம் என்ன ஆனுனோ...உயிரோட இருந்திருந்தான்னு அப்பனை ஒருவாட்டியாவது பாக்கணும்மேன்னு வந்திருக்க மாட்டானு?...

(லிங்கன் வருகிறுன்.)

(திரும்புகிற சடையன் லிங்கனைப் பார்த்து)

சடையன்:— (வியப்புடன்) செக்ரட்டரி தம்பீ...வாங்க! வாங்க!! இந்த ஏழைக் குடிசையிலே உங்க கால் படுறதுன்னு நான் என்னபுண்ணியம் பண்ணியிருக்கேனே?..... (பரபரப்புடன்) உக்காருங்க!..

லிங்கன்:— பரவாயில்லே...

சடையன்:— இன்னைக்கு என் சம்சாரம் நினைவு நாளு...

லிங்கன்:— அப்படியா?... அந்தப் புனிதவதிக்கு நானும் என்னுடைய மரியாதையைத் தெரிவிக்கிறேன்...

(படத்தைத் தொட்டுக் கும்பிடுகிறுன்...)

சடையன்:— (லிங்கனிடம்) சொர்ணம், செத்துப்போன அன்னைக்கு... இப்படித்தான் நான் உக்காந்து கிட்டு.. அவ..இங்க உக்காந்துகிட்டு.. (உருக்கமுடன்) என்

பையன் சொக்கலிங்கத்துக்கு அவப் பழைய சோறை ஊட்ட நானும்..பழையதையும், சுண்டக் குழம்பையும் சுவைச்சு சாப்பிட்டேன்!..அந்தக் காட்சி கண்ணிலேயே நிக்குது...

**லிங்கன்:—** இப்பவும் அது மாதிரி....அம்மா நினைவா சாப்பிட லாமே!..எங்க...நீங்க உக்காருங்க, உங்க பக்கத்திலே நான் உக்காந்து சாப்பிடுறேன்!..

**சடையன்:—** சிவ, சிவா! நீங்க எங்க வீட்டிலே சாப்பிடுறதா?.. அதுவும் பழைய சாதம்!...

**லிங்கன்:—** ஐயா! அன்போடு கொடுத்தா..பழையதுகூட..பச்சடி, கூட்டு, பாயசம், வடையோட...விருந்து சாப்பிட்டது மாதிரிதான் இருக்கும்..ம்..உக்காருங்க!..

(என்றவாறு சடையனை உட்கார வைத்துத் தானும் அருகில் உட்கார்ந்து...பழையது சாப்பிடத் தொடங்குகிறான்... மரகதம் வருகிறாள்.)

**மரகதம்:—** சடையா!

**சடையன்:—** வாங்க, டீச்சரம்மா வாங்க! (எழுகிறான்.)

**மரகதம்:—** நீ, சும்மா உக்காந்து சாப்பிடு சடையா... (லிங்கனைப் பார்த்து விட்டு) அடேடே...செகரட்ரி சார் இங்கேயா? ஏது இவ்வளவு தூரம்?...

**லிங்கன்:—** வீட்டுக்காரம்மாவுக்கு நினைவுநாள் இல்லியா?...

**சடையன்:—** செகரட்டரி தம்பி!...நம்ப டீச்சரம்மாகூட வருஷம் தவறாம வந்து, சொர்ணத்துக்கு ஒரு மல்லிகைச்சரம் போடுறது வழக்கம்...

(இதற்கிடையே மரகதம், சொர்ணம் படத்துக்கு மல்லிகைச் சரம் அணிவித்தல். அப்போது "சடையா! சடையா!" என்று ஒரு ஆள் கூப்பிடுகிறான் தெருவிலிருந்து...)

**சடையன்:—** (உள்ளிருந்தே) என்ன முனியா? என்ன?...

**முனியன்:—** (வெளியில் நின்றவாறு) ஜமீன்தார் எஜமான் அவசரமா கூப்பிடுராரு! தேவாலயத்துக்குப் போகணு மாம்...வண்டி கட்டச் சொல்ராரு!..

**சடையன்:—** செகட்டரி தம்பி...மன்னிச்சுக்குங்க... எஜமான் கூப்பிடுராரு; நான் வர்ரேன்..வர்ரேன்..(போகிறான்.)

**லிங்கன்:—** (அதற்குள் பழையது சாப்பிட்டு கைகழுவி எழுந்து மரகதத்திடம்) ஆமாம்.. அடிக்கடி ஜமீன்தார் தேவா லயத்துக்குப் போறாரே; அங்க அப்படி என்னவிசேஷம்?

**மரகதம்:—** என்ன விசேஷம்? பக்திமான்!...அம்பாள் வழிபாட்ல அவருக்கு அபாரமான ஈடுபாடு!...நித்தியப்படி பூஜை செய்யாவிட்டால் அவருக்கு நிம்மதியே இருக்காது!

**லிங்கன்:—** அவரு கோயிலுக்குப் போறதிலே ஏதோ, புதிர் இருக் குன்னு நினைக்கிறேன்!..

**மரகதம்:—** நான்கூடத்தான் நினைக்கிறேன். நம்ப செகரட்டரி தம்பி விஷயத்திலேகூட ஏதோ புதிர் இருக்குன்னு!..

லிங்கன்:— எனக்கிட்டியா? புதிரா? என்ன புதிர்?

மரகதம்:— உங்க குலமென்ன? கோத்திரமென்ன?... ஜமீன்தார் பரம்பரையா?...மிட்டாவா? மிராசா? சீமானு? பூமானு?...இல்லே...சாதாரணமான குடும்பமா?...

லிங்கன்:— சாதாரணமானவனுகவோ சாமன்யனுகவோ இருந்தா ஜமீன்தார்வீட்ல இவ்வளவுபெரியவேலே கிடைக்குமா?.

மரகதம்:— பணம் படைச்ச குடும்பமா இருந்தா...இந்த ஏழை வண்டிக்காரன்வீட்லவந்துபழையதுசாப்பிடுவாங்களா?

லிங்கன்:— உங்களுக்கு ஏன் அப்படி என்மேல ஒரு சந்தேகம் வந்துச்சு?...

மரகதம்:— சந்தேகம், வரலாமா, வரக்கூடாதான்னு முன்அனுமதி கேட்டுகிட்டு வர்ரது இல்லியே!, அதுமாதிரி..எனக்குச் சந்தேகம் வந்துச்சு! வந்த மாதிரியே போயிடுச்சி!..

★

காட்சி- 26 கோகிலா அறை

கோகிலா:— அப்பா! சந்தேகம் தீர்ந்து போச்சா! அப்படின்னு லிங்கன் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவரா?.. பெரிய வீட்டுப்பிள்ளே இல்லியா? அம்மா! உண்மையா சொல்றீங்களாம்மா!

மரகதம்:— அப்பறம் என்ன..கையடிச்சு சத்தியம் பண்ணிக் கொடுக்கணுமா?... கற்பூரத்தைக் கொளுத்தி காளியம்மன் கோயில்ல அணேக்கனுமா? பெரிய இடத்துப் பையனு இருந்தா... சடையன் வீட்ல... அவ்வளவு சகஜமாப் பழக முடியுமா?...பழைய சோறு சாப்பிட மனசு வருமா?...

கோகிலா:— அப்படின்னு...உமா, அவரை எனக்கே கொடுத்துடுவா..அவளுடைய லட்சியம்..அவள் அந்தஸ்துக்குக் குறையாத மாப்பிள்ளேதானே!..

(மேசை டிராயரைத் திறந்து காசை எடுத்து...பூவா தலையா போட்டுப் பார்த்துக்கொள்கிருள். 'பூ' விழுகிறது...)

கோகிலா:—அம்மா, நீ சொன்னது உண்மையே தாம்மா!...

இப்பவேபோயி..உமாகிட்ட இந்தச்சேதியைச்சொல்லி..!

மரகதம்:— உமா கிட்ட சொல்லி...?

கோகிலா:— அவ உதவியோடவே லிங்கன்— கோகிலா திருமணம் நடைபெற ஏற்பாடு செய்யப்போகிறேன்!..

மரகதம்:— கோகிலா!

கோகிலா:— அய்யோ!..என்னைத் தடுக்காதிங்கம்மா!... எனக்கு சந்தோஷம் தாங்கலேம்மா...நான் தலைகீழா நடக்கிற மாதிரி இருக்கு...வர்ரேன்ம்மா!..

(கோகிலா ஓடுகிறாள். நாணயத்தைக் கையில் தூக்கி எறிந்து பிடித்தவாறு)

★

காட்சி-27

உமா அறை

(கையில் நாணயத்தை தூக்கி எறிந்து பிடித்தவாறு குதூகலமாக வரும் கோகிலா)

கோகிலா:—உமா! உமா!..உண்மையைக் கண்டுபிடிச்சுட்டேன்!... பூவா தலையா போட்டதில தலைவிழுந்தது—தப்பு!... பூ விழுந்ததுதான் கரெக்ட்டு!..அவரை நீ எனக்குக் கொடுத்துடப்....

(பேச்சை முடிப்பதற்குள், உமா வாஷ்பேசினில் வாந்தி எடுப்பதை கோகிலா பார்த்து அதிர்ச்சி..)

உமா!..உடம்புக்கு என்ன?..ஏன் வாந்தி எடுக்கிறே?.. என்ன சாப்பிட்டே?...

உமா:—கோகிலா!..அவசரப்பட்டு..என்னையேநான் மறந்து அமுதம் சாப்பிட்டேன்!.அது எனக்கு விஷமாகிவிட்டதடி!...

கோகிலா:—என்ன சொல்றே?..எனக்கு ஒண்ணும் புரியலியே!,.

உமா:—உன்கிட்ட உண்மையைச் சொல்லாம வேற யாருகிட்ட சொல்லப்போறேன்!...

கோகிலா:—சொல்லு உமா!

உமா:—எஸ்டேட்டைப் பார்க்கப் போனப்ப..எப்படியோ..அந்த லிங்கனும்..அங்க வந்துட்டார்..ஆண்மை, வீரத்துக்கு மட்டுமே அடையாளம் என்றுதான் அதுவரையில் கருதியிருந்தேன்!..ஆனால் அவரது ஆண்மை புரிந்த சாகசத்தில் என்பெண்மையின் உறுதி உருத்தெரியாமல் உடைந்துவிட்டது கோகிலா!... உருத்தெரியாமல் உடைந்துவிட்டது!..

(கோகிலா திகைப்பு —அவள் கையிலிருந்த நாணயம் விழுந்து உருண்டு, தலைப்பகுதி மேலே தெரிகிறது.)

(லிங்கன் புருக்களில் ஒன்றைப் பிடித்துத் தன் முகத்தருகே கொண்டுவந்து ரசித்தல்—பிறகு அதனைத் தூக்கி எறிந்து பறக்க விடுகிறான்..பறந்த புரு, தூக்கி எறியப்பட்ட வேகத்தில் — கூலிங் கிளாஸ் அணிந்தவாறு அங்கே வரும் உமாவின் நெற்றியில் நகத்தால் பிராண்டிவிடுகிறது.. அவள் புருவைத் தள்ளி விடுகிறாள்... உமா, நெற்றியைத் தடவிப் பார்த்துக்கொள்கிறாள்.)

லிங்கன்:—அடேடே உமா.. நெற்றியிலே கீறிட்டுதா?..எங்கே?..

(நெற்றியைப் பார்க்கிறான். அவள் முகத்தை இருகைகளால் பிடித்தபடி.)

உமா:—(சோகமாக) புரு, நெத்தியில தான் கீறிச்சு!..ஆனா, நீங்க என் நெஞ்சிலேயே கீறிட்டீங்க!...

லிங்கன்:—அதெல்லாம் சின்னக்காயம்! இன்னமா ஆறும இருக்கு? அந்தக் காயங்களைப் பாத்துப் பாத்து ரசிச்சு ஊமைப் புன்னகை புரியிறது பெண்களுக்கே ஒரு தனி இன்பம்னு நம்ப இலக்கியங்கள் கூறுகின்றன!..

உமா:—அந்த இன்பத்தின் விளைவுதான் என்னைத் துன்பத்தின் எல்லைக்கே துரத்திவிட்டது!..

லிங்கன்:—என்ன சொல்றே?...

உமா:—நாம ரெண்டு பேரும் செஞ்ச தவறு..

லிங்கன்:—தவறு ஒண்ணுமில்லே...நீ தணலா இருந்தே!..நான் மெழுகா இருந்தேன்!...

உமா:—நான் ஒண்ணும் தணலா இல்லே!..

லிங்கன்:—சரி..நான் தணலா இருந்தேன்!.நீ மெழுகா இருந்தே!..

உமா:—(சோகமுடன்—உருக்கமுடன்) மெழுகா இருந்ததினாலதான் உருகிப் போயிட்டேன்!..

லிங்கன்:—அதான் அலைனக்கே உருகிட்டியே; அப்பறம் இப்ப ஏன் உருகுறே!..

உமா:—நான் உருகிப் போனது மாத்திரமல்ல; ஒரு உயிரையும் சுமந்துகிட்டு நிக்கிறேன்!..

லிங்கன்:—(சாதாரணமாக) உமா!

உமா:— நான் கர்ப்பமாயிருக்கேன் லிங்கன்; கர்ப்பமாயிருக்கேன்!..

லிங்கன்:—சபாஷ்!...

(சிரிக்கிறான்—பெருஞ்சிரிப்பு — வெற்றிச்சிரிப்பு—அந்தச் சிரிப்பு ஒலியில் புருக்களும்—பறவைகளும்—வாத்துக்களும் சிறகடித்து சத்தமிட்டவாறு சிதறுகின்றன..அந்தச் சிரிப்பொலியும்,சிதறியோடும் பறவைகளின் ஒலியும் ஒன்றாகக் கலக்கின்றன. கோகிலா இவைகளை மறைந்திருந்து கவனிக்கிறாள்.)

**(இடை வேளை)**

(தரகர், மாப்பிள்ளை வீட்டார்—ஜமீன்தார் கர்வம் ததும்ப அமர்ந்திருக்கிறார்.)

தரகர்:—(தாய், தந்தை இருவரையும் காட்டியவாறு) இவாதான் மாப்பிள்ளையோட தாயார், தகப்பனார்!..உங்க பெண்ணு உமாவுக்கு ரொம்ப பொருத்தமானவரு மாப்பிள்ளை! படிப்போ ஐ. சி. எஸ்..பதவியோ கலெக்டர் பதவி!..

ஜமீன்தார்:—கிருஷ்ணாபுரம் ஜமீன்...சந்திரகிரி ஜமீன்..அங்கிருந்தெல்லாம் ஆள் மேல ஆள் வருது..உமாவைப் பெண் கேட்டு! அப்படி ஒரு ஜமீன்தார் வீட்டுக்குத்தான் சம்பந்தி ஆக முடியுமே தவிர..இப்படி கலெக்டர் தாசீல்தார்—மிராசுதார்—மிட்டாதார்னு..யாரையும் அழைச்சுகிட்டு வராதீர்! இதுஉமக்கு முதல்தடவையும் கடைசித் தடவையும்...

தரகர்:—வர்ரேங்க!..

ஜமீன்தார்:—ம்!....

(போகிறார்கள். ஜமீன்தார் திரும்புகிறார்—கோகிலா வருகிறாள்..) கேட்டியா கோகிலா..உமாவைப் பெண் கேட்க பாரேன் கலெக்டர் வீடாம் கலெக்டர்!.. கண்டிப்பா சொல்லி துரத்திட்டேன்..மாட மாளிகை, கூட கோபுரம் உள்ள ஒரு ஜமீன் குடும்பத்திலேதான் அவளுக்கு மாப்பிள்ளை வரமுடியுமென்று! என்ன சரி தானே?...

கோகிலா:—ஆமாம்! நீங்க சொன்னது நூற்றுக்கு நூறு சரி!... மாடமாளிகை கூட கோபுரம் உள்ள ஜமீன் குடும்பத்துக்கு மாப்பிள்ளை வந்தாச்சு!...

ஜமீன்தார்:—(துடிப்புடன்) என்ன? என்ன சொல்லுகிறாய்?

கோகிலா:—செகரட்டரி லிங்கன்... உங்கள் வருங்கால மாப்பிள்ளை!..

ஜமீன்தார்:—(கோகிலா கன்னத்தில் அடித்து..) மூடு வாயை! நீ லிங்கனுக்கு வலைவீசிப்பார்த்து முடியாதகாரணத்தால் அவன்மீது பழிபோட்டு விரட்டியடிக்க.. இப்டி ஒரு கதை கட்டிப் பார்க்கிறாயா?...

கோகிலா:—கதை கட்டிப் பார்க்க நினைக்கவில்லை! உமாவின் கழுத்தில் லிங்கன் தாலி கட்டிப் பார்க்க விரும்புகின்றேன்!..

ஜமீன்தார்:—இங்கே நிக்காதே..போ! போய்விடு!..

(அவளைத் தலைமயிரைப் பிடித்துத் தள்ளுகிறார்; அப்போது உமா ஓடிவந்து...)

உமா:—அப்பா! அவளை ஒன்றும் செய்யாதீர்கள்!..அவள் நடந்ததைத்தான் சொல்லுகிறாள்!..

ஜமீன்தார்:—இல்லே! நடக்க முடியாததைச் சொல்லுகிறுள்; நடக்கக் கூடாததைச் சொல்லுகிருள்!

உமா:—(காலில் விழுந்து) அப்பா! லிங்கன்தான் என் கணவராக முடியும்.. அதைத்தடுக்க யாராலும் முடியாது!..

ஜமீன்தார்:—என்ன சொன்ஞய்?..எச்சில் இலே கோபுரத்துக் கலசத்தில் ஒட்டிக்கொள்வதா?

உமா:—நான்தான் இப்போது எச்சிற் பண்டம்!..நான் அவருக்குத் தான் உரியவள்!..

ஜமீன்தார்:—கனவிலும் நடக்காது!...

உமா:—உங்கள் கடும்சபதம் பலிக்காது!..நான் இப்போது கர்ப்ப வதியப்பா!...

ஜமீன்தார்:—உமா!..

உமா:—அப்பா!..என்னே மன்னித்துவிடுங்கள்!..தயவு செய்து என்னே அவருக்கே திருமணம் செய்து வையுங்கள்!..

ஜமீன்தார்:—(குழப்பமுடன்) அய்யோ!..உமா.. உமா.. ஜமீன் குடும்பத்துக் கௌரவத்தைச் சந்திசிரிக்க வச்சுட்டியே அம்மா!.. சந்தனத்தைப் பன்னீரில் கரைக்கிறதா? (சாக்கடை நீரில் கரைத்துத் தெளிக்கிறதா?...

(மரகதம் வந்தபடி.)

மரகதம்:—ஜமீன்தாரய்யா அவர்களே!..இது ஒண்ணும் பழைய காலமல்ல!.. பதினேஞ்சு வருஷத்துக்கு முன்ஞடி என்ருல்..ஒரு அபலேப் பெண்ணுக்கு குழந்தையைக் கொடுத்துவிட்டு..அது யார் பெற்ற பிள்ளேயோ என்று ஊருக்குத் தெரிவிக்க முடியாமல் அவளே அடக்கி ஒடுக்கி விடலாம். இப்போது நடந்திருக்கிறது முழுக்க முழுக்க புதிய கதை!..ஒரு பிரபல ஜமீன்தார் குடும்பத்தின் கற்பைப் பற்றிய கதை! இதை ஊருக்குத் தெரியாமல் மறைக்கவும், உங்க கௌரவத்துக்குப் பங்கம் ஏற்படாமல் காக்கவும்..இருக்கிற ஒரே மார்க்கம்..லிங்கன்—உமா கல்யாணம்தான்!..

ஜமீன்தார்:—(தவிப்புடன்) நீயும் அப்படியா சொல்றே?.. அந்த லிங்கன் யாருன்னு தெரியலியே?..

மரகதம்:—யாராயிருந்தால்என்ன?..இனிமேல் உங்கள் மருமகன்!..

உமா:—(காலில் விழுந்து காலேப் பிடித்துக்கொண்டு) ஆமாம்ப்பா! என்னே மன்னிச்சிடுங்கப்பா..

ஜமீன்தார்:—சரிம்மா! உன் தலேயில் எழுதினபடியே நடக்கட்டும்!..

★

காட்சி 29-ஏ கோகிலா அறை

(கோகிலா அழுது கொண்டு ஓடிவர மரகதம் வருகிருள்.)

மரகதம்:— கோகிலா!..உன்னை மணக்கோலத்தில பாக்கணும்னு மனசுல கோட்டை கட்டி வச்சிருந்தேன்...

கோகிலா:— மணக்கோலத்திலே மகளைப் பாக்காவிட்டாலும்... உங்க மாணவி...என் ஆருயிர்த் தோழி உமாவைப் பார்க்கத் தானேம்மா போறிங்க!..

மரகதம்:— கோகிலா!

கோகிலா:— அம்மா!!

(இருவரும் கண்கலங்கத் தழுவிக் கொள்ளுதல்.)

★

காட்சி 30 அந்தரங்க மாளிகை

(ஜமீன்தார் காளிங்கன் இருக்கின்றனர்.)

ஜமீன்தார்:— மணக்கோலத்தில் வருவான் லிங்கன் என்று, உமா எதிர்பார்த்துக் கொண்டிருப்பாள்!...அவனைப் பிணக் கோலமாக்க வேண்டும்!.. நாமும் சேர்ந்து அழ வேண்டும்...உமாவையும் நம்பவைக்க வேண்டும்!.. சரி காளிங்கா... காரியத்தை முடி! எப்படியாவது லிங்கனைத் தீர்த்துக் கட்டு!.. என் காதுகுளிரச் செய்தி கொண்டு வா போ!...

காளிங்:— காது குளிர இல்லே, காது கிழிய லிங்கன் செத்துட்டான், செத்துட்டான்னு பேப்பர்ல வரப்போகுது பாருங்க!

★

காட்சி–31

(லிங்கன் நீச்சல் குளத்தில் குளித்துக்கொண்டிருக்க காளிங்கன் துப்பாக்கியால் சுட, லிங்கன் தப்புகிருன். பின்னர் காளிங்கன் அடியாட்களை ஏவிவிட லிங்கன் அடியாட்களையும் அடித்துத் தப்புகிருன்.)

காட்சி 32

ஜமீன் மாளிகை

திருமண விழா

ஜமீன்தார்:— (விரக்தியுடன்) நான் சொன்னதை ஒழுங்கா செய்யாம...காரியத்தைக் கெடுத்து விட்டாயே!...

காளிங்:— என்னை என்ன செய்யச் சொல்றீங்க? இந்தப்பெண்ணுக்கு இவன்தான் புருஷன்னு...பிறக்கும் போதே பிர்மதேவன் எங்கேயோ எழுதிப் போட்டுட்டான்... அதை மாத்த நம்பளால முடியுங்களா?

(உமாவை மணக்கோலத்தில் மரகதமும், கோகிலாவும் அழைத்து வருதல். மணமக்கள் மணமேடையில் அமருதல்! புரோகிதர், தாலியை எடுத்து லிங்கன் கையில் தருதல்..)

புரோகிதர்:— கெட்டி மேளம்! கெட்டி மேளம்!..

(தாலியுடன் லிங்கன் எழுதல்.)

காளிங்:—மாப்பிள்ளே!... உக்காந்துகிட்டே கட்டுங்க!... ஜமீன்தார் வீட்டுப் பொண்ணுன்னு பயந்துகிட்டு மரியாதையா நின்னு தாலிகட்டப் போறீங்களா?

லிங்கன்:— மரியாதைக்காக எழுந்து நிக்கலே! என் மனத்தில் உள்ள சில விபரங்களை இந்த மணவிழா மண்டபத்தில் வெளியிடுவதற்காக எழுந்து நிற்கிறேன்!..

(ஜமீன்தார் அதிர்ச்சி)

ஜமீன்தார் ஜம்புலிங்க பூபதி அவர்கள், தன் அருமை மகள் உமாவை எனக்கு வாழ்க்கைத் துணைவியாக்க சம்மதித்ததற்காக முதல்ல என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்!..ஆனுல் ஒன்று நான் இப்போது ஒரு திடுக்கிடும் ரகசியத்தை வெளியிடப் போகிறேன்!. அதற்குப் பிறகும் ஜமீன்தார் என்னை மருமகனுக ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிருரா?...இந்தக் கேள்விக்கு எனக்குப் பதில் வேண்டும்!

காளிங்:—முதல்ல என் கேள்விக்கு பதில் தேவை!...அது என்ன அப்படிப்பட்ட ரகசியம்...சிதம்பர ரகசியம்?...

லிங்கன்:— ஊரார் வணங்கிட, உலகத்தார் போற்றிட, ஜமீன் குடும்பத்தின் கௌரவக்கொடி பட்டொளி வீசிப் பறந்திட, கைகட்டி நிற்கப் பத்து பேர்...கால் பிடித்துச் சேவைசெய்ய பலநூறு பேர்!.இன்னேரன்ன சீரோடும் சிறப்போடும் பெருவாழ்வு — பெருமைமிகு வாழ்வு நடாத்துகின்ற மேன்மை தங்கிய ஜம்புலிங்க பூபதியின் மகளுக்குத் தாலிகட்டப் போகிற நான் கேவலம் — சாதாரண ஒரு வண்டிக்காரனின் மகன்...

(ஜமீன்தார் அதிர்ச்சி—சடையன் மகிழ்ச்சி)

(சடையனிருக்குமிடம் சென்று அவனை இழுத்துக் கொண்டுவந்து) இவர்தான் என் தந்தை!... இந்த ஜமீனில் வண்டியோட்டும் ஏழை!..பதினைந்து வருடங்களுக்கு முன்...பாசமுள்ள தாய் தந்தையைப் பிரிந்து எங்கேயோ ஓடி.... எப்படியோ படித்துப் பட்டம் பெற்று...நானும் ஒரு மனிதன் — எனக்கும் ஒரு குறிக்கோள் உண்டு என்று இங்கேயே வேலைக்கு வந்துவிட்ட லிங்கன்...என் பழைய பெயர் சொக்கலிங்கம்!

சடையன்:— தம்பீ!..சொக்கலிங்கம்...நீ உயிரோடு இருக்கியா?.. என் மகனே!...

லிங்கன்:— உயிரோடு இருக்கிறேனப்பா!... இன்னும் உயிரோடிருக்கிற சில மிருகங்களுக்குப் புத்தி புகட்ட இன்னும் உயிரோடு இருக்கிறேன்!.. (ஜமீன்தாரைப் பார்த்து) இப்போது சொல்லுங்கள் — சடையன் மகனுக்கும். ஜமீன்தார் மகளுக்கும் திருமணம்! சம்மதம்தானு ஜமீன்தார் அவர்களே!

சடையன்:—வேண்டாம்ப்பா வேண்டாம்! இது ரொம்ப விபரீதம்! அவுங்க கால்தூசிப் பெறமாட்டோம் நம்ப...

ஜமீன்தார்:—(பல்வேறு உணர்ச்சிகள் சமாளித்துக் கொண்டு-அலட்சியமாக சிரித்தவாறு அருகே வந்து) சடையா!...ம்... மன்னிக்கணும்...சம்மந்தி அவர்களே!

சடையன்:— அய்யோ எஜமான்!...

ஜமீன்தார்:—லிங்கன்யார் என்று எனக்கு முன்பே தெரியும்..! என் ரத்தத்தில் ஊறிக்கிடக்கும் சமத்துவம் — சமதர்மம் என்ற உணர்வுகளை நீங்கள் அறியாமல் இருக்கலாம்... ஜமீன்தாரிசம் — சமதர்ம இசம் — இரண்டும் கலந்தது தான் இந்த ஐம்புலிங்கபூபதி இசம்!... ஜமீன்தார் மகளும்...பத்து மாதத்தில் பிறந்தவள் தான்! வண்டிக்காரன் மகனும் பத்து மாதத்தில் பிறந்தவன் தான்! ஜமீன் குடும்பத்துப் பெண்ணுக்கு சிகப்பு ரத்தம் — வண்டிக்காரன் மகனுக்கு கறுப்பு ரத்தம் — ஆண்டவன் அப்படி பேதம் காட்டிப் படைக்கவில்லையே!... இருவர் உள்ளமும் கலந்தது—இணைந்தது! என் சமத்துவ இதயம் சந்தோஷத்தால் மலர்ந்தது!.. லிங்கன்!.. தயங்கத் தேவையில்லை — தடையேதும் கிடையாது!.. நான் பெற்ற தளிர்க்கொடியின் கழுத்தில் கட்டுக தாலியை!...ம்...வாங்க மாப்பிள்ளை!...

(லிங்கன் உமாவுக்குத் தாலி கட்டுதல். எல்லோரும் பூ தூவுதல். சடையன் பூ போடுதல்.)

காளிங்:— எல்லாரும் சாப்பிடறதுக்குப் போங்க!..

[கூட்டம் கலைகிறது]

(மண மேடைக்கு அருகே...லிங்கன் — ஜமீன்தார் இருவர் மட்டுமே நிற்கிருர்கள்...)

ஜமீன்தார்:— லிங்கன்! இதோ புகைவது ஓமகுண்டத்தின் நெருப்பு!...நினைவிருக்கட்டும்!..என் நெஞ்சத்தில் புகைந்து கொண்டிருப்பது...எரிமலையின் நெருப்பு!... எச்சரிக்கை! எரிமலையின்மீது நின்று மகுடி ஊத முயலாதே!...

லிங்கன்:— மகுடி ஊதமாட்டேன் மாமனூர் அவர்களே!.. உத்தமன் என்று திரை போட்டுக்கொண்டு ஊரை ஏமாற்றும் பளபளப்பான பாம்பு மனிதனின் நச்சுப்பல்லைப் பிடுங்கி எறிவேன்!...

ஜமீன்தார்:— தோல்விகளைத்தான் தழுவுவாய்!...

லிங்கன்:— தோல்விகளையும் வெற்றியின் படிகளாக்கிக் கொள்ளும் வித்தை கற்றவன் நான்!...

ஜமீன்தார்:—அதையும் பார்ப்போம்!..

லிங்கன்:— நாம் மட்டுமல்ல; இந்த நாடே பார்க்கத்தான் போகிறது!..

ஜமீன்தார்:— ஹா! (சிரிப்பு)

லிங்கன்:— ஹா! (சிரிப்பு)

★

காட்சி 33

ஜமீன் மாளிகை
முதல் இரவு அறை

(லிங்கன், தான்நின்ற இடத்திலிருந்து அவளைப் பார்க்கிறான்; அவளும் பார்க்கிறாள். அருகே வருகிறான்.)

லிங்கன்:— உமா!...இந்த இன்ப இதழ்கள் இசைப்பது உண்மையானால்; என் லட்சியம் நிறைவேற...நான் எந்த நேரத்தில் எதைச் சொன்னாலும்....ஏன் என்று கேட்காமல்... காரணம் எதுவும் புரிந்து கொள்ளத் துடிக்காமல் ...நான் சொன்னதை அப்படியே செய்ய வேண்டும்!..கேட்பதை அப்படியே தர வேண்டும்!..

உமா:— இப்பொழுது என்னகேட்கப்போகிறீர்கள் என்று எனக்குத் தெரியும்...அதை நீங்கள் கேட்காமலே தருவதற்கு...
(அவன் கன்னத்தருகே இதழ்களைக் குவித்து நகருகிறாள்...)

லிங்கன்:— இதல்ல உமா!...இது இன்பபுரிப் பயணம் செல்ல நீ வழங்கும்...தேன்!..கற்கண்டு!..திராட்சை!.. ஆனால் என் இலட்சியபுரிப் பயணம் முடிவு பெற...நான் கேட்பதை; சொல்வதை நீ தட்டாமல் நிறைவேற்ற வேண்டும் என்கிறேன்!..

உமா:— நிச்சயமாக!..

லிங்கன்:— (கையை நீட்டி) எங்கே?..

உமா:— சந்தேகமா?... சத்தியமாக!..

(கை அடித்துத் தருகிறாள். கைகள் இறுகுகின்றன..)

லிங்கன்:— உமா!

உமா:—அத்தான்!....

(உதயமாகிறது)

(அயர்ந்து கட்டிலில் உறங்கும் இருவரில், உமா எழுந்து ஆடை திருத்திப் புறப்படுகிறாள். அவள் சேலைத் தலைப்பை இழுத்த வாறு....)

லிங்கன்:— எங்கே உமா?

உமா:— இருங்கள்! பெட் காபி கொண்டு வருகிறேன்!..

லிங்கன்:— (எழுந்தமர்ந்து) காபி...பிறகு!... உமா!...முதலில் உன் தந்தையின் அறைக்குச் செல்!....

உமா:— உம்...

லிங்கன்:—அவரிடமுள்ள...ஜமீன் களஞ்சியத்தின் சாவிக்கொத்தை அப்படியே...அவருக்குத் தெரியாமல் எடுத்துவா!..

உமா:— சாவிக்கொத்தா? ஏன்?

லிங்கன்:— இரவே சொன்னேனே; காரணம் எதுவும் கேட்கக் கூடாதென்று! ஏன், எதற்காக என்ற கேள்வியே எழக் கூடாது என்று!

உமா:— சரி...அப்பா அறைக்கு எப்படிப் போய்...

லிங்கன்:— உன்னாலா முடியாது!... பூனையைவிட மிருதுவான உன் பட்டுப் பாதங்களால் ஓசை படாமல் நடந்து... கொண்டுவா அந்த சாவிக்கொத்தை!..

(உமா சிறிது தயக்கம்) ஏன் உமா? முடியாதா?...

உமா:— இல்லை...இல்லை..இதோ போகிறேன்!...

★

## காட்சி—33-ஏ

(ஜமீன்தார் அறையில் தூங்கிக் கொண்டிருக்க, உமா மெதுவாக வந்து சாவிக்கொத்தை எடுத்துச் செல்கிறாள்.)

## காட்சி—34

ஊர் பொதுமண்டபம்

(ஊர் மக்கள் கூடியிருக்கிறார்கள்...கண்ணாயிரமும் இருக் கிறான்.)

லிங்கன்:—இதோ!...கறுப்புச் சந்தையில் பணமாக மாறப்போகிற பதுக்கல் களஞ்சியத்தின் சாவிக்கொத்து!.மக்களுக்குப் பயன்படாமல் மர்மக் களஞ்சியத்தில் சிறைப் பட்டிருக்கும்...உணவு தானியங்களை... ஊராருக்கு வாரி வழங்க உதவிடப் போகும் சாவிக்கொத்து!... வாருங்கள் என்னோடு!...

ஜமீன்தார்:— கணவன் கட்டளையாம்மா?..களஞ்சியத்து சாவியை எடுத்துக் கொடுத்துட்டே!..

உமா:— அது என்னப்பா தவறு?...

ஜமீன்தார்:— தவறு ஒண்ணுமில்லம்மா!..தவறு ஒண்ணுமில்ல!.. ஹா! ஹா! ஹா! ஹா!...

(கலகலவெனக் கைகொட்டிச் சிரிக்கிறார்...)

★

காட்சி — 36 (லிங்கன் ஊர்மக்களிடையே பாடுகிறான்)

உழைக்கும் இனமே!
உடன்பிறப்பே!
என்னோடு வாருங்களே! — பசுவின்
உருவில் ஊரில்
உலவும் புலியைக்
காட்டுவேன்; பாருங்களே!

மனிதரில் சிலபேர்
புனிதரைப் போலே
இருப்பார் புவிமேலே!
மான்களின் கண்ணை
மயங்கிட வைக்கும்
கானல் நீர்போலே! — உழைக்கும் இனமே

ஏட்டைப் புரட்டி
சுயநலக்காரனைக்
கேட்பேன் நானொரு கேள்வி! — அவன்
பூட்டைத் திறந்து
காட்டுவதற்கு
என்னிடம் உள்ளது சாவி!

ஏய்ப்பவன் தன்னை
மேய்ப்பவன் என்று — எண்ணியிருக்கும்
ஆடு!—நல்ல
ஆறறிவுள்ள
மனிதரும் அது போல்
இருந்தால் சிரிக்கும் நாடு! — உழைக்கும் இனமே

மின்மினிப் பூச்சி
வெளிச்சத்தினாலே
இருட்டில் பாதை தெரியாது!—அட;
மின்னுவதாலே
உப்புக்கல் தான்
வைரம் போலே ஆகாது!

சிங்கக் கூட்டம்
தூங்கி யிருந்தால்
சிறு நரி ஆட்டும் வாலை!—அதன்
தூக்கம் கலைந்தால்
நடப்பது என்ன?
சரித்திரம் சொல்லும் நாளை! —உழைக்கும் இளமே

✦

காட்சி — 37 பதுக்கல் கிடங்கு

(லிங்கன், தன்னுடன் வரும் கூட்டத்துடன் அங்கே வருகிறான்.)

லிங்கன்:—அதோ தெரிகிறதே! அதுதான்....அந்தப் பகல்வேடதாரியின் பதுக்கல் கிடங்கு!..உள்ளே நுழையுங்கள் உரிமையோடு!.. உங்களுக்குத் தேவையான உணவு தானியங்களை எடுத்துத் தருகிறேன், வாருங்கள்!...

(சாவியை சுழற்றியபடி முன்னே நடக்கிறான்.)

(அங்கொரு கூட்டத்தின் மத்தியில், ஜமீன்தாரும் காளிங்கனும் இருக்கிறார்கள். அரிசி, கோதுமை முதலிய தானியங்களை வாரி வாரி வழங்கிக் கொண்டிருக்கிறார்கள் — அது கண்டு லிங்கன் திகைத்து நிற்கிறான்..)

ஜமீன்தார்:—காளிங்கா! யார் யாருக்கு எவ்வளவு வேணுமோ அள்ளிக்கொடு!..இதையெல்லாம் வச்சுகிட்டு நான் என்ன செய்யப்போறேன்? இன்னைக்கு என் பிறந்த நாள்!

காளிங்:—(திடுக்கிட்டு ஜமீன்தாரைப் பார்த்து) எத்தனையாவது பிறந்த நாளுன்னு வெளியே சொல்லிடாதீங்க!.. வருஷம் பூரா உங்களுக்குப் பிறந்த நாள் தான் — அள்ளிக் கொடுப்பா எல்லாருக்கும் — நல்லாத் தின்னுட்டு அவரை வாழ்த்திட்டுப் போங்க!.வாங்க எல்லோரும்...எல்லாம் வாங்க.. வாங்க.. கொடுக்கிறதையெல்லாம் வாங்கிட்டு நம்ப எஜமான் பாரி வள்ளலே வாழ்த்திட்டு போங்க! ஏன் நிக்கிறீங்க வாங்க

(லிங்கன் பின்னே நின்றவர்கள் காளிங்கனிடம் ஓடுதல்...
லிங்கன், தனியாக நிற்கிறான். அருகே ஜமீன்தார் வருகிறார்..)

ஜமீன்தார்:—என்னமாப்பிளே!..வேங்கைக்கு முன்னால் வெள்ளாடு விளையாடியதாக கதையாவது படித்திருக்கிறீர்களா?.

லிங்கன்:—வேளை வரத்தான் போகிறது!..வேஷம் கலையத்தான் போகிறது! உம்மை எதிர்த்து நான் வெற்றிபெறத் தான் போகிறேன்!..

ஜமீன்தார்:—ஹா!ஹா!ஹா!பாவம், வானத்தை வில்லாவளைக்கப் பாக்கிறீங்க!..முடியாது மாப்பிளே!.. முடியாது!...

லிங்கன்:—பார்ப்போம்!...

ஜமீன்தார்:—ம்!...பார்ப்போம்!..இது என்பிறந்த நாள் சபதம்!..
இந்த ஜமீன்தார் ஜம்புலிங்க பூபதி யாரிடமும் தோற்க மாட்டான் — தோற்கவே மாட்டான்!

★

## காட்சி — 38 ஜமீன் மாளிகை

(ஊர் மக்கள், சீமான்கள் ஹாலில் கூடியிருக்கிறார்கள்.
மரகதம்,கோகிலா,உமா,காளிங்கராயன், சடையன் ஆகியோரும் இருக்கின்றனர்.)

ஜமீன்தார்:—எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றிகூறி, இந்தப் பிறந்த நாள் விழாவில் நான் என்றும்போல் உத்தம குணத்தோடும்,உதார உள்ளத்தோடும் ஒழுக்க சீலனாக விளங்கி உங்களுக்காகப் பாடுபடுவேன் என்று கூறிக் கொள்கிறேன்!..ஆண்டவன் நாமம் வாழ்க!.

காளிங்:—நாமம்!...

மக்கள்:—வாழ்க!..

காளிங்:—நாமம்!..

மக்கள்:—வாழ்க!..

ஒருவர்:—ஜமீன்தார் ஜம்புலிங்க பூபதிக்கு

மக்கள்:—ஜே!

புலவர்:— (பூங்கொடியுடன் நின்றவாறு)

போற்றி! போற்றி!...
புனிதனே போற்றி!..
புண்ணியனே போற்றி!..
கண்ணியனே போற்றி!..
கடையேழு வள்ளல்களை
வென்றவனே போற்றி!..
கலியுகக் கர்ண மகாராஜனே போற்றி!..

என்னய்யன் ஏழைகளின்
தெய்வம் ஜம்புலிங்க
பூபதியாருக்கு..இன்னும் பல
பிறந்தநாள் விழாக்கள்
வரவேண்டும்!..
நூறுவது பிறந்த நாள் விழா
கொண்டாட வேண்டும்,
அதிலும் அடியேன் வந்து
வாழ்த்துகின்ற பேற்றினைப் பெறவேண்டும்!

ஜமீன்தார்:—(கண்களை அகலத் திறந்து) காளிங்கா! யாரது?..

காளிங்:—நம்ப ஜால்ராப் புலவர்!..தமிழை எடுத்து அப்படியே தட்டுரார். (ஜால்ரா போல கைகை காட்டி)

ஜமீன்தார்:—ஓ..புலவரா?..சௌக்யமா?...

புலவர்:—வணக்கம். வாழ்க பல்லாண்டு!..பிறந்த நாள் பரிசு வேண்டி சமூகம் வந்துள்ளேன்!..

ஜமீன்தார்:—ஓ..அப்படியா? (பூங்கொடியைப் பார்த்து) இதுயார்?

புலவர்:—அடையாளம்தெரியலியா?பத்துப்பதினைந்து வருஷத்துக்கு முன்பு! பச்சைக் குழந்தையா தூக்கிட்டு வந்த என் பெண் பூங்கொடி!..

காளிங்:—மறந்துட்டீங்க? அப்போ அந்தக் குழந்தை புசுபுசுன்னு நல்லாயிருக்கும். சின்னது.. நீங்க மாரோடு மார் சேத்து தமாஷா விளையாடுவீங்க!..அது மூக்கச் சிந்தி என்மேலே போட்டீங்க!.. மறந்துட்டீங்க.. அப்போ சின்னது! இப்போ பெரிய பொண்ணாயிடுச்சு!..

புலவர்:—இப்போது வயது வந்த பெண்ணாகிவிட்டாள்!..இவள் திருமணத்தைத் தாங்கள்தான் முயற்சி எடுத்து....

ஜமீன்தார்:—நடத்திவைக்கிறேன்!.தடையேதுமில்லை.. காளிங்கா! புலவர்களுக்கு நாம் தரும் மதிப்பை இந்தப் புவியே அறியும்!..புலவரையும்..குழந்தை பூங்கொடியையும் அழைத்துப்போய்..(கண் காட்டல்) தக்க உபசாரங்களைச்செய்து...

காளிங்:—புரிகிறது பிரபூ..புரிகிறது! புலவரே..வாரும்!..அம்மா பூங்கொடி வா!..நீ அதிர்ஷ்டக்காரப் பொண்ணும்மா! ஜமீன்பார்வை உன்மேலே விழுந்தாச்சு..இனிமேதான் இருக்குது வா!..

(காளிங்கன் புலவரின் பெண் பூங்கொடியை அழைத்துப் போகிறான். பலரும் பல்வேறுவிலைஉயர்ந்த பரிசுகளை வழங்குதல்.)

ஜமீன்:—என்ன உமா?

உமா:—அப்பா!..அத்தான் சார்பாக, இந்தப் பிறந்தநாள் பரிசை உங்களுக்கு வழங்குகிறேன்!..

ஜமீன்தார்:—மாப்பிள்ளை கொடுத்தாரா?..ரொம்ப நன்றிம்மா..ஆமா மாப்பிள்ளை எங்கே?

உமா:—இப்போது வந்து விடுவாரப்பா!...

(பரிசுப் பொருளைச் சுற்றியிருக்கிற தாளைப் பிரிக்கிறார் ஜமீன்தார். ஒரு பெண்ணை மாடுமுட்டிக் கொல்வது போன்ற ஓவியம்..

ஜமீன்தார்:—ஆகா..மிக அழகான ஓவியம்! ஆனால் இது இருக்க வேண்டிய இடம் சடையன் வீடுதான்..சடையா!... சம்பந்தி! என் மாப்பிள்ளை லிங்கன் கொடுத்த பரிசு!.. இதை உன் வீட்டிலேயே மாட்டிவை!.ரொம்ப நல்லா இருக்குதுல்லே!..இந்தா!

(சடையன் அதை வாங்கிப் பார்க்கிறான்.)

☆

காட்சி – 39 சடையன் வீடு

சடையன்:— (மாடு முட்டும் படத்தைத் தூக்கி எறிந்தவாறு) இதென்னடா விபரீத விளையாட்டு ஜமீன்தார் பொறுமையின் பொக்கிஷம்!..அதனால் பொறுத்துக்கொண்டார்...நானாக இருந்திருந்தால் அந்த இடத்தில் நடப்பதே வேறு!..வேற யாராக இருந்தாலும்... உன்னை வீட்டைவிட்டு வெளியேற்றி இருப்பார்கள்!..

லிங்கன்:— நான் அந்த வீட்டுக்கு மாப்பிள்ளையப்பா!... நானாகத்தான் வெளியேறுவேனே தவிர, என்னை உங்கள் ஜமீன்தாரால்; எனது அருமை மாமனால் வெளியேற்ற முடியாது!...

சடையன்:—வீட்டுக்கு மாப்பிள்ளை!..மருமகன்!.. ஜமீன்தார் ஜம்புலிங்க பூபதியின் மகள் உமாவின் கணவன்!.. இவ்வளவு கௌரவமும் உனக்கு யாரால் கிடைச்சது? யார் கொடுத்தது?...கிளிஞ்சலைக் கொண்டுபோய் யாராவது கிரீடத்தில் பதிச்சுக்குவாங்களா? பதிச்சுகிட்ட குற்றத்திற்காக நீ அவரையே பழிவாங்குறேன் என்கிறாயா?

லிங்கன்:— பழி வாங்குவதற்கு நான் பஞ்சாங்கத்தைப் புரட்டி நாள் நட்சத்திரம் பார்த்துக் கொண்டிருக்கவில்லை!.. பழி வாங்கும் படலத்தை நான் ஏற்கனவே எழுத ஆரம்பிச்சுட்டேன்!.. அதுமுழுமையாக முடிவடையும் காலம் வெகு தூரத்தில் இல்லை!... அதற்குள், உங்களுக்கு உண்மையை உணர்த்த வேண்டியது என் கடமை!

சடையன்:— என்ன உண்மை; பொல்லாத உண்மை! சொர்ணத்தை ஜமீன்தார்தான் கொன்றார்ன்னு, கடவுளே வந்து சாட்சி சொன்னாலும்...இந்தச் சடையன் நம்ப மாட்டான்டா...நம்பவே மாட்டான்!...

லிங்கன்:— நம்ப வைக்கிறேன்!. நச்சரவத்தை, பச்சைக்கொடின்னு எண்ணியிருக்கிற உங்களை மட்டுமல்ல... இந்த ஊராரையே உண்மை எது — போலி எதுன்னு புரிஞ்சு கொள்ற அளவுக்கு..வெற்றி பெற்றுக் காட்டுகிறேன!. அந்த மனித மிருகத்தால் கொலை செய்யப்பட்ட என் தாயின்மேல் ஆணையிட்டுச் சொல்றேன்!..அந்த வெறிபிடிச்ச விலங்கின் வேஷத்தைக் கலைச்சுக் காட்டு கிறேன்!..

சடையன்:—(ஆத்திரமாக சப்தமிட்டு) உளராதே!.. ஜமீன்தார் நம்ப ஊருக்கே தெய்வம் மாதிரி!...

★

காட்சி — 40 டீக்கடை

(கடைக்காரன் ஜமீன்தார் படத்தை கடையில் மாட்டுகிறான் அதைப் பார்த்துக்கொண்டே வரும்)

கண்ணாயிரம்:— என்னய்யா முதலாளி! படம் மாட்டுறே படம்!..

கடைக்:— நான் மாத்திரமா மாட்டுறேன்...இந்த ஊர் பூரா இந்தப் புண்யவானோட படத்தை மாட்டுறாங்க!.களஞ் சியத்தில இருக்கிற தானியத்தைப் பூராவும் தர்மம் பண்ணின வள்ளலாச்சே!..அவரு படத்தை மாட் டாம, உன் படத்தையா மாட்டுவேன்...

("பூங்கொடி பூங்கொடி!" என்று கதறியவாறு புலவர் ஓடிவருதல்.)

புலவர்:—(கடைக்காரன், கண்ணாயிரம்! மற்றும் அங்குள்ளோரைப் பார்த்து) அய்யா!..என் மகப் பூங்கொடியைப் பாத் திங்களா?...

கண்ணாயிரம்:— புலவரய்யா! என்ன விவரம் அதைச் சொல்லுங் கய்யா!

புலவர்:— என் பொண்ணு சின்னப் பொண்ணு! ஜமீன்தார் வீட் டிலேயிருந்து வர்ரவழியிலே யாரோ ரெண்டு முரடன் கள்...என்னை அடிச்சுப் போட்டுட்டு...என் பெண்ணைத் தூக்கிட்டுப் போய்ட்டானுங்கய்யா...

கண்ணாயிரம்:— ஜமீன்தார் வீட்லேயிருந்து திரும்புற போதா?... அப்ப...ஜமீன்தார் வேலையாத்தான் இருக்கும்!...

புலவர்:— நீங்க யாரும் பாக்கலியா?... பூங்கொடி!...அம்மா பூங்கொடி!....

(ஓடுகிறார் அந்த இடத்தை விட்டு)

கடைக்:— (கண்ணாயிரத்திடம்) ஏ, கண்ணாயிரம்!... ஜமீன் தாரைப்பத்தி என்னசொன்னே?...என்னசொன்னே?..

கண்ணுயிரம்:—நீ படம்வச்சு கும்பிடுறியே! அவன் ஒருபொம்பிளேப் பொறுக்கின்னு சொன்னேன்!

(கடைக்காரன் அடிக்கிருன்..கண்ணுயிரமும் திருப்பி அடிக்கிருன்... இருவருக்கும் சண்டை....அப்போது ஜமீன்தாரும், காளிங்கனும் அங்குவரவே சண்டை ஓய்கிறது,..)

ஜமீன்தார்:— என்னப்பா இது...ம்?...

கடைக்:— இந்தப் பய கண்ணுயிரம்...ஜமீன்தார் அய்யாவைப் பத்தி தாறுமாருப் பேசுருன்!..யாரோ பூங்கொடிங்கிற பெண்ணும்!...அதை நீங்க...

ஜமீன்தார்:— உஸ்....போதும்!....அதற்காக அவனை அடிக் கிறதா?...யார் எது வேண்டுமானுலும் பேசட்டும். எனக்குக் கோபமே வராது!.. பாவம்விட்டு விடுங்கள்!

(கண்ணுயிரத்தைத் தவிர எல்லோரும் வணங்குதல்... குதிரைகள் சிறிது தூரம் சென்றதும்)

ஜமீன்தார்:—காளிங்கா!....அந்தக் கண்ணுயிரத்தை மக்களுக்கு நேரா மன்னிச்சுட்டேன்...ஆனுல்...இன்றைக்கு இராத்திரியே அவனைத் தீர்த்துக் கட்ட ஏற்பாடுசெய்!

காளிங்:— தீப்பந்தத்தாலே பொசுக்கி... சாம்பலாக்கிடறேன்... சண்டாளப்பயலே!...

ஜமீன்தார்:—சபாஷ்!...ம்...பூங்கொடி தயாராக இருக்காளா?...

காளிங்:— பூஜைக்கு வந்த மலர்!..தங்கள் வரவு நோக்கித் தயாரா இருக்கு!..

(ஜமீன்தார் மகிழ்ச்சி)

★

## காட்சி - 41 வெளிப்புறக் காட்சி இரவு

(கண்ணுயிரம் தனியாகப் போய்க் கொண்டிருக்கிருன்—
''முன்னேயிட்ட தீ முப்புரத்திலே
பின்னேயிட்ட தீ தென்னிலங்கையிலே
அன்னேயிட்ட தீ அடிவயிற்றிலே...
யானுமிட்ட தீ....'' என்ற பாட்டை முணு
முணுத்துக் கொண்டு—எதிரே தீப்பந்தமுடன் ஒருஆள் வருதல்.)

கண்ணுயிரம்:— தீ! தீ!... (திரும்புகிருன்.)

(பின்னுல் ஒரு ஆள்தீப்பந்தமுடன் எதிரேவருகிருன்.)

கண்ணுயிரம்:— தீ! தீ!...

(இவ்வாறே நாலு திசையிலிருந்தும் தீப்பந்தங்களுடன் ஆட்கள் சூழ்தல்.)

ஆட்கள்:— டேய்!....பொடியா!....நீ எங்க ஜமீன்தாரைப்பத்தியா தப்புப் பிரச்சாரம் பண்ணுறே?..இதோ இந்தத்தியிலே குளிச்சு சாவு!...

(கண்ணுயிரம் நடுங்குதல் — தீப்பந்தங்களுக்கு நடுவே சிக்கித் தீக்கிரையாகும் நேரத்தில்...அங்கே லிங்கன் பிரவேசித்து சண்டை போடுதல்... தீப்பந்தக்காரர்கள் விரட்டப் படுகிறுர்கள்...: சண்டையின் போது, ஊரார் கூடி விடுகிறுர்கள்..புலவரும் அங்கே வந்துவிடுகிறுர்...)

லிங்கன்:— (ஊராரிடம்) வாங்கய்யா வாங்க! நான் சொன்னுல் நீங்கள் நம்பமாட்டீர்கள்!..யாரோ புலவர் மகளாம்..; பூங்கொடியென்ற பருவ மங்கையாம்...அவளே ஜமீன்தார், ஆட்களைவைத்து தூக்கிக் கொண்டு போய் விட்டார் என்ற உண்மையை—இந்தக் கண்ணுயிரம் சொல்லிவிட்டான். அதற்காக...இவனைத் தீயிட்டுப் பொசுக்குமாறு ஜமீன்தார் உத்தரவு...

புலவர்:— ஐயா நான்தாங்க...அந்தப் புலவன்! பூங்கொடியோட தகப்பன் — பெண்ணுக்குக் கல்யாணம் பண்ண உதவி கேட்டு வந்தேன் — வந்த இடத்திலே யாரோ என் மகளைத் தூக்கிகிட்டு போய்ட்டானுங்க!..

லிங்கன்:— யாருமில்லே! சாட்சாத் ஜமீன்தாரே தான்!

(அப்போது சடையன் வண்டி ஓட்டி வருதல்...லிங்கன் வண்டியை எதிரே நின்று நிறுத்துகிறுன்...)

சடையன்:— என்னப்பா இது ரகளை?...

லிங்கன்:— உங்கள் கண்கண்டதெய்வம் ஜமீன்தார் எங்கேயப்பா இருக்கிறுர்?

சடையன்:— அவர் தேவாலயத்தில் தேவி பூஜையில் இருக்கிறுர்... ஏன்? ...எதுக்காக?...

லிங்கன்:— ஊர் மக்களே!..புலவரே!...அந்ததேவாலயத்தில்தான் பூங்கொடியின் கற்பை... ஜமீன்தார் சூறையாடிக் கொண்டிருக்க வேண்டும்... தயவு செய்து என்னுேடு வாருங்கள்!... இப்போதாவது உண்மையை உணருங்கள்!..ம்...

(லிங்கன் ஓடுகிறுன். புலவரும், ஊராரும் பின்தொடருதல்.)

★

## காட்சி — 42

### ஜமீன் தேவாலயம் வாயிற்புறம்

(லிங்கன்,கண்ணுயிரம், புலவர், மற்றும் ஊர்ப்பெரியவர்கள் ஓடிவருதல்..சடையனும், அவர்களுக்குச் சற்றுப் பின்னுல் தொடர்ந்து வருகிறுன்..கதவருகே லிங்கன் வந்து)

லிங்கன்:—ஏய், வழிவிடு! கதவைத்திற!..

(காவலன், தன்கையில் உள்ள ஈட்டிபோன்ற ஒருகருவியைக் குறுக்கே நீட்டியபடி)

காவலன்:—ஜமீன்தாரய்யா உத்திரவில்லாமல்..யாரையும் உள்ளே விட முடியாது...

லிங்கன்:—முட்டாளே! ஜமீன்தாரின் காமவெறிக்கு ஆளாகி உள்ளே துடிதுடித்துக்கொண்டிருக்கிற பெண்ணுக்கு நீ தந்தையாக இருந்தால்..அப்போது உள்ளே நுழைய உத்திரவை எதிர்பார்க்கமாட்டாய்! உடைத்தெறிவாய் இந்தக் கதவை! ம்..விடு..எங்களை!

(காவலனைத் தள்ளுகிறான்)

காவலன்:—முடியாது! (தடுத்தல்).

(தடுக்கும் காவலனை லிங்கன் தூக்கி எறிதல். லிங்கனும், மற்றவர்களும், கண்ணாயிரமும், புலவரும் கதவைத் தடதடவென தட்டுதல். ஓங்கி மோதுதல். கதவு திறக்கப்படுகிறது. அனைவரும் உள்ளே நுழைகிறார்கள்.)

★

## காட்சி — 42ஏ   தேவாலய உட்புறம்

(புலவர் மகள் பூங்கொடி மணமகளாகக் குனிந்தவாறு உட்கார்ந்திருக்கிறாள்..அருகே மணமகன் உட்கார்ந்திருக்கிறான்... மந்திர ஒலி — மணமேடை — இதனைக் கண்டவர்கள் வியந்து நிற்கிறார்கள்.)

ஜமீன்தார்:—வாங்க மாப்பிள்ளை..வாங்க!..அடடே! புலவரே!.. எங்கய்யா போய்ட்டீரு?..நான் சொன்னபடி உமது பெண்ணுக்குத் திருமணம் நடக்குது பார்த்தீரா?

புலவர்:—ஜமீன்தாரய்யா! மன்னிக்கணும்—நான் உங்களைப் பத்தி தப்பா நினைச்சுட்டேன்—இதோ, உங்க மருமகப்பிள்ளை லிங்கன் பேச்சைக் கேட்டது என் குற்றம்.

ஜமீன்தார்:—போதும் போதும் அளவுக்கு மீறிப் புகழாதீர்புலவரே இதெல்லாம் என் கடமை!...

சடையன்:—(லிங்கனிடம் ஜமீன்தாரைக் காட்டி) என்னப்பா, இப்ப என்ன சொல்றே?..என் தெய்வத்தின் திருவிளையாடலைப் பாத்தியா?..அவசரமும் ஆத்திரமும் உன்

அறிவை மறைச்சுகிட்டே இருக்கு!..இந்தக் கலி யுகத்திலே எங்கும் காண முடியாத கருணை வடிவம்டா இது!..இப்பவாவது காலில விழுந்து மன்னிப்புக்கேளு!

ஊர்ப்பெரியவர்:— (லிங்கனிடம்) இந்தப் புண்யவான் மேலே புழுதி வாரித் தூத்துறதே உன் வேலையாப்போச்சு!.. உன் பேச்சைக் கேட்டு நாங்களும் பைத்தியக்காரனு ஆயிட்டோம்..எஜமான் எங்களை மன்னிச்சுடுங்க!...

ஜமீன்தார்:—மனிதனை மனிதன் மன்னிப்பதா?.. வேண்டாம்! தேவையில்லை!..முதல்ல உங்களை நீங்க திருத்திக்குங்க! அப்புறம் என்னைப் புரிஞ்சுக்குங்க எல்லோரும் போய் வாருங்கள்!

ஊரார்:—வர்ரங்க! வணக்கங்க!..

(ஒவ்வொருவராக எல்லோரும் போகிறார்கள். சடையனும் போய்விடுகிறான் அவர்களுடன். புலவரும், லிங்கனும் இருக்கிறார்கள்..)

ஜமீன்தார்:— (ஒரு பெருமிதச் சிரிப்புடன் அருகே வந்து) என்ன லிங்கன்..என் அருமை மாப்பிள்ளை!..

லிங்கன்:—மாயை விலகத்தான் போகிறது! மக்கள் உண்மையை உணரத்தான் போகிறார்கள்!..

ஜமீன்தார்:—மணலைக் கயிறாகத் திரிக்கும் முயற்சி!

லிங்கன்:—அதையும் பார்க்கிறேன்!..

(வேகமாகப் போகிறான் லிங்கன்.)

(போனதும் கதவு மூடப்படுகிறது.)

புலவர்:—(மணவறைக்கு ஓடி.) பூங்கொடி! உன்னை எங்கெல்லாம் தேடி அலைந்தேனம்மா — தேவி சன்னிதானத்திலே நீ மணக்கோலத்தில் இருக்கிற இந்த திவ்யமான காட்சியைப் பார்க்க எனக்கு வரங்கொடுத்த வள்ளலம்மா, இவரு!.... எழுந்திருச்சி அவருக்கு நமஸ்காரம் பண்ணும்மா! வாம்மா!...

(புலவர் போய்த் தொடுகிறார்—குனிந்த தலை நிமிராமல் கீழே விழுந்து விடுகிறது பூங்கொடியின் பிணம்.)

புலவர்:—ஆ! பூங்கொடி!.. பூங்கொடி!.. அய்யய்யோ, மோசம் போயிட்டேனே!..நான் மோசம் போயிட்டேனே

(ஜமீன்தாரைப் பார்த்து) அடப்பாவி! கொன்னுட்டியா?..

(என்று குத்துவிளக்கை எடுத்து ஜமீன்தாரைக் குத்தப்போக அய்யர் வேடத்தில் இருந்தவன், பூணூலைக் கழற்றி எறிந்துவிட்டு தலை டோப்பாவையும் கழற்றி எறிந்துவிட்டு—புலவரின் வயிற்றில் கத்தியால் குத்துகிறான். புலவர், வீறிட்டுச் சாய்கிறார்.)

ஜமீன்தார்:—ம்!..இரண்டையும் தூக்கிப்போய்..யார் கண்ணிலும் படாமல் புதையுங்கள்.

(லிங்கன் உமா வீட்டை விட்டு வெளியேறப் புறப்படு கிறார்கள். எதிரே ஜமீன்தார் வர, உமா லிங்கனைப்பார்க்கிறாள்.

உமா:—அத்தான்!..அப்பாவிடம் ஒரு வார்த்தை...

லிங்கன்:—அப்பாவிடம் விடை பெற்றுக்கொள்! அனுமதி கேட் காதே!...

ஜமீன்தார்:—(வந்து கொண்டே)என்ன மாப்பிளே?..இதெல்லாம் என்ன விபரீதம்?...

லிங்கன்:—விபரீதங்களைத் தாங்கிக்கொள்ள முடியாமல்தான் வெளியேறுகிறேன்!..உங்கள் மகளுக்கு விடைகொடுத் தனுப்புங்கள்...

(சடையன் வருதல்)

ஜமீன்தார்:—சடையா!..பார்த்தியா?..எப்படி செல்லமாவளர்ந்த பெண்ணை..விழி அசைத்தால் வேலை செய்ய நூறு வேலைக்காரர்கள்ஓடிவந்து இட்ட வேலையைத் தட்டாம செய்கிற அந்தஸ்த்து, ஆடம்பரம் நிறைந்த இந்த மாளிகையிலே பிறந்து வளர்ந்த பெண்ணை..மண் குடிசைக்கு அழைச்சிகிட்டுப் போறேங்கிறாரே மாப்பிள்ளை...இது நியாயமா?...

சடையன்:—ஏம்பா, உனக்கு என்ன..பைத்தியம் பிடிச்சுட்டுதா? ஏன்டா இந்த வேலையெல்லாம் செய்ற? ஏன்டா எஜமான் மனசிலே இவ்வளவு பெரிய வேதனையை உண்டாக்குறே?.அதுவும் வயிறும்பிள்ளையுமா இருக்கிற பெண்ணை அழைச்சிகிட்டு போறேங்கிறியே!...

லிங்கன்:— உமா! புறப்படு!..

ஜமீன்தார்:—உமா!...

உமா:—அப்பா! மன்னிச்சிடுங்க! அவர் இருக்கிற இடம்தான் எனக்கு சொர்க்கம்!..நான் வர்ரேன்!.. (லிங்கனிடம்) போகலாமா?...

லிங்கன்:—(ஜமீன்தாரிடம்) வர்ரேன்!..நாங்க ஒண்ணும் தொலை தூரம் போய்விட வில்லே. அதனால தொடர்பு விட்டுப் போகாது... (சடையனிடம்) அப்பா! நான் தவறு செய்ற மாதிரி தெரியும்!...ஆனா..உண்மை போகப் போகப் புரியும்!.. மன்னிச்சிடுங்க! வரட்டுமா.. உமா!..வா!...

(இருவரும் போகிறார்கள்... ஜமீன்தார் பார்த்துக்கொண்டே நிற்கிறார்..சடையன் முகத்தில் வேதனை..)

சடையன்:—(ஜமீன்தார் காலடியில் விழுந்து) எஜமான்.. என்னை மன்னிச்சிடுங்க!...

ஜமீன்தார்:—(மனதில் குரோத உணர்வுடன்) உஸ்..காலில் விழக் கூடாது!..சம்பந்தி...சமநிலையில் இருக்கணும்!...

காட்சி -- 44 குடிசை வீடு

(அடுப்பு புகைகிறது...உமா, கண்ணைக் கசக்கிக்கொண்டே சமைக்கிறாள்...புகை தாங்காமல் கண்ணில் நீர்வழிய அடுக்களையிலிருந்து வருகிறாள்...ஒரு கயிற்றுக் கட்டிலில் அமர்ந்தவாறு லிங்கன் அவளைப் பார்த்து..)

லிங்கன்:— என்ன உமா!...சமைக்கிறது கஷ்டமா இருக்கா?... அதுக்காகவா கண்ணீர் விடுறே?...

உமா:— நான் ஒண்ணும் கண்ணீர் விடுலே; அடுப்புப் புகை தாங்கலே!..

லிங்கன்:— இங்கே அடுப்பு புகையிறதினாலே உன் கண்ணிலே கண்ணீர்கொட்டுது!..எத்தனை ஏழைங்க வீட்ல அடுப்பு புகைய வழியில்லையேன்னு தாய்மார்கள் கண்ணீர் சிந்துறாங்க தெரியுமா?...சரி!...சரி!...நீ சர்ப்டைதி... கொஞ்சம் களைப்பாறு!...நான் சமையல் வேலையைக் கவனிக்கிறேன்!..

(எழுகிறான்...உமா, அவனைக் கரம் பிடித்துத் தடுத்து)

உமா:— ஊஹூம்...வேண்டாம்...வேண்டாம்...எல்லாப் பழகப் பழக சரியாப் போயிடும்...நீங்க இருங்க!..நானே பாத்துக்கிறேன்!..

★

காட்சி -- 45-46 வெளிப்புறம்

குடிசைப் பகுதியை ஒட்டிய தெரு

கண்ணாயிரம்:— காளை!...காளை! மயிலைக்காளை கொண்டு வந்து விட்டேன்...

(கண்ணாயிரம் காளையைக் கொண்டு வருகிறான்.)

லிங்கன்:— சபாஷ்! கண்ணாயிரம்!..சரியான காளை! நான் நினைத்தபடி கொண்டு வந்துவிட்டாய்...

(குடிசைக்குள் திரும்பி)...உமா! உமா!.... கொஞ்சம் வெளியே வந்து பாரேன்..உமா!...

(உமா வருகிறாள் குடிசைக்குள்ளிருந்து — அதற்குள் குடிசை வாசிகள் சிலரும் சூழ்கிறார்கள்.)

லிங்கன்:— உமா!...இந்தக் காளைக்கு தினந்தோறும் நீ பூஜை செய்யவேண்டும்!..

உமா:— காளைக்கு பூஜையா?... பசுவுக்குத்தான் கோபூஜை செய்வாங்க!....

லிங்கன்:— இது சாதாரண காளையல்ல— ஒரு லட்சியத்திற்காக நம் வீட்டில் வளரப்போகிற காளை!...அதற்கு நீ பூஜை செய்தாதான் பொருத்தமா இருக்கும்!

உமா:— நீங்க சொன்னு சரி!...

லிங்கன்:— எனக்காக பூஜை செய்யக்கூடாது! நீ உன் இதய சுத்தியோடு பூஜை செய்யணும்!...

உமா:— (சரியெனப் புன்னகையுடன் தலையசைத்தல்.)

★

## காட்சி — 47 சுற்றடைப்புள்ள ஒரு மைதானம்

(லிங்கனும், கண்ணுயிரமும் காளையைப் பழக்குகிருர்கள்.. காளை, சீறிப்பாய்ந்து அவர்களால் முடுக்கி விடப்பட்டு முன்னேக்கி ஓடுகிறது... ஒரு உருவத்தைப் போய் முட்டுகிறது. அது ஜமீன்தார் அல்ல; ஜமீன்தார் போன்ற ஒரு பொம்மை.)

லிங்கன்:— பலே! அப்படித்தான்!...கண்ணுயிரம்!..பழகி விட்டது காளை!...இனி அடுத்தது பழி வாங்கும் படலம்!....

(சிரிக்கிருன்) ஹா! ஹா! ஹா! ஹா!...

(அப்போது ஒரு சிறுமி ஓடிவந்து....)

சிறுமி:— அண்ணு! அண்ணு!...உமா அக்காளுக்கு குழந்தை பொறந்திருக்கு!...குழந்தை...

லிங்கன்:— ஆ!....(மகிழ்ச்சி)

(லிங்கன் ஓடி வருதல்)

★

## காட்சி — 48 குடிசைப் பகுதி

(குடிசைப்பகுதி மக்கள், லிங்கன், உமா முதலியோர் ஆடிப் பாடி குழந்தைக்கு விழா எடுக்கிருர்கள்..

பாட்டின் இடையே சடையன், வண்டியோட்டி, ஜமீன் தாரும் காளிங்கனும் வருகிருர்கள்...

குடிசைப் பகுதியே விழாக் கோலமாக இருக்கிறது... இளமகளிர், வாலிபர் — அனைவரும் பாடியும் ஆடியும் குழந்தையை வாழ்த்துதல்.)

(பாட்டு)

ஊரைத் திருத்த — ஒரு
புள்ளே பொறந்தான்!— அப்பன்
பேரை நிறுத்த — இரு
கண்ணைத் தொறந்தான்!
தாரை தம்பட்டம்
கொட்டுங்கடி!— கைத்
தாளம் தப்பாமே
தட்டுங்கடி! — ஊரைத்

ஒருவன்:— அணிப்புள்ளே; தென்னம் புள்ளே;
கிளிப்புள்ளே; கீரிப்புள்ளே;
அத்தனைக்கும் ஒசந்தது
என்ன புள்ளே?
அட— சொல்லு, புள்ளே!

ஒருத்தி:— ஒரு
ஆத்தா மடி சுமந்த
சின்னப்புள்ளே!— தொட்டுப்
பாத்தா கைமணக்கும்
வண்ணப்புள்ளே!

— ஊரைத்

வெள்ளரிக்கா விதை போலச்
சிரிக்குதடி!— புள்ளே
வெள்ளெருக்கம் பூவாட்டம்
இருக்குதடி!

கள்ளிருக்கும் தாமரைப்பூ;
காடிருக்கும் மல்லிகைப் பூ—
முள்ளிருக்கும் சேரியிலே
பொறந்ததடி!— இங்கே
உள்ளிருக்கும் சேதியெல்லாம்
அறிஞ்சுதடி!

— ஊரைத்

பெத்தெடுத்த அம்மையொரு
பணக்காரி!—நல்ல
பேருவெச்ச அப்பனொரு
தொழிலாளி!

மேலிடத்தைக் கீழிடத்தை
ஒன்றத்தில் சேத்து வைக்கக்
காரணமா வந்ததடி
இந்தப்புள்ளே!— இந்தக்
காரியத்தை வேறெவனும்
செஞ்சதில்லே!

— ஊரைத்

லிங்கன்:—

ஆனந்தத் தேனே!
அருமை மகனே!
நான் சொல்லப் போறதைச்
கேட்டுக்கடா!— நீ
நல்லதைக் காதுலே
போட்டுக்கடா!

ஆலையில் உழைக்கும்
தொழிலாளி! — உண்ண
அரிசியைக் கொடுக்கும்
விவசாயி!
மூட்டையைத் தூக்கும்
பாட்டாளி! — இந்த
மூவரும் நமக்குக் கூட்டாளி! — ஆனந்தத் தேனே

*

காட்சி -- 49 லிங்கன் குடிசை வெளிப்புறம்

பாடல் முடிய... ஜமீன்தார். காளிங்கராயனும் அங்கே வருகின்றனர்.

(ஜமீன்தார் குழந்தையை மகிழ்ச்சியுடன் தூக்குதல்.)

ஜமீன்தார்:—காளிங்கா!. அதையெல்லாம் உள்ளே கொண்டுபோய் வை!...

காளிங்:—டேய்! அந்த சாமான்களை எல்லாம் குடிசைக்குள்ளே கொண்டு போயி வையுங்கடா.!

லிங்கன்:—என்ன இதெல்லாம்?

காளிங்:—சும்மா குழந்தைக்கு... தங்க கிலுகிலுப்பை!... மாணிக்கப் பாலாடை!.. அசல் யானைத் தந்தத்திலே செஞ்ச தொட்டில்!...

லிங்கன்:—வேண்டாம்! வேண்டாம்!... இதெல்லாம் இங்கே ஒட்டாது!.... துணியில ஒரு தொட்டில்!... பனை ஓலையில் ஒரு கிலுகிலுப்பை!. சங்குலே ஒரு பாலாடை!. அது போதும் எங்க வீட்டு குழந்தைக்கு!..

ஜமீன்தார்:—மாப்பிளே!... என்ன இருந்தாலும்... ஜமீன்தார் ஜம்புலிங்க பூபதியின் பேரப்பிள்ளை!...

லிங்கன்:— (குழந்தையை வாங்கி... உற்றுப் பார்த்து) அப்படி ஒண்ணும் நெத்தியிலே எழுதலியே!...

காளிங்:—மாப்பிளே...கிண்டல் பண்றாறு!...

(அப்போது அங்கு கட்டப்பட்டிருக்கும் காளை மாடு ஜமீன்தாரைப் பார்க்கிறது—மைதானத்தில் முட்டிய உருவம் போல் காளைக்குத் தெரிகிறது – உடனே காளை, சீறிப்பாய்ந்து நிற்கிறது ஜமீன்தார் காளையைப் பார்த்து அதிர்ச்சி அடைகிறார்.)

ஜமீன்தார்:—ஏதம்மா இந்தக்காளைமாடு?

உமா:—அவர் தான் வளர்க்கிறார் அப்பா... ஏதோ ஒரு லட்சியத்துக்காக வளர்க்கிறாராம்... நான் நாள்தோறும் இதுக்கு பூஜை செய்கிறேன்!...

(ஜமீன்தார் காளிங்கனைப் பார்க்கிறார் திகிலோடு.)

★

காட்சி — 50 அந்தரங்க மாளிகை

ஜமீன்தார்:—அது காளைமாடு அல்ல!...காலன்! எமன்!..என்னைப் பழிக்குப் பழிதீர்க்க அந்த லிங்கன் கூர்தீட்டி வைத்திருக்கும் பயங்கர ஆயுதம்!...

லிங்கன் வசிக்கிறானே குடிசைப்பகுதி அதற்குத் தீ வைத்தால்... லிங்கன்..அந்தக் காளை மாடு..எல்லாமே வெந்து கருகிப் போவார்கள்!...

காளிங்:—நம்ப பொண்ணு உமா அங்கே இருக்கே...? அதுவும் தீயில கருகிடுமே!..

ஜமீன்தார்:—அந்தக் குடிசைப்பகுதிக்கு தீவைப்பதற்கு முன்... லிங்கனிடமிருந்து உமாவைப் பிரித்துவிட வேண்டும். அதற்கும் திட்டம் வைத்திருக்கிறேன்!...

காளிங்:—அடடா! திடீர் திடீர்னு திட்டம் இந்த மூளையிலே உதிக்குதே?... இது என்ன மூளைதானு?...

ஜமீன்தார்:—அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு உன்னுடையது!...

(சுற்றுமுற்றும் பார்த்து காளிங்கன் காதில் ரகசியமாகச் சொல்லுகிறார்...சுவராஸ்யமாக காளிங்கன் அந்த ரகசியத்தைக் கேட்கிறான்.)

காளிங்:—ஆமா! ஆமாம்!... இன்னைக்கு வெள்ளிக்கிழமை!...கோகிலா முருகன் கோயிலுக்கு வருவா கட்டாயம். நான் பாத்துக்கிறேன்...

★

காட்சி — 51 கோயில் வாசல்

(கோயிலுக்குள்ளேயிருந்து பூஜைக் கூடையுடன், வெளியே வந்து கொண்டிருக்கிறாள் கோகிலா.. அப்போது லிங்கன் வருகிறான்...)

லிங்கன்:—கோகிலா!...

கோகிலா:—சௌக்யமாயிருக்கீங்களா?... உமா எப்படியிருக்கா?...

லிங்கன்:—அவளுக்கென்ன—நல்லாயிருக்கா!

கோகிலா:—குழந்தையைக் கூட வந்து பார்க்க முடியலே!... அம்மா சொன்னாங்க; நாளைக்குத்தான் ஜமீன்தாருகிட்ட சொல்லிட்டு... குழந்தையைப் போய்பாத்துட்டு வரணும்னு!.... குழந்தை எப்படி?... உங்களாட்டம் இருக்கா?.. உமா மாதிரி இருக்கா?... சிகப்பா?... கறுப்பா?...

லிங்கன்:—அதான் நேரா வந்து பாக்கப் போறேன்னியே; வந்து பாத்து தெரிஞ்சுக்கியேன்... அதிருக்கட்டும்!.. கோகிலா!.. என்னை எதுக்கு அவசரமா இங்கு வரச் சொல்லி ஆள் அனுப்பினே?

கோகிலா:—நானு உங்களையா?..இல்லியே—இல்லவே இல்லியே!..

லிங்கன்:—ஆமாம்; கோகிலா... ஒரு ஆள் வந்து கூட்டியே சொன்னான் — அதனாலதான் நான் அவசரமா ஓடி வந்தேன்...

கோகிலா:—ஆச்சரியமாயிருக்கே!.. நான் யாருகிட்டயும் சொல்லி அனுப்பவே இல்லியே!...

(குதிரை வரும் குளம்படிச் சப்தம்)

லிங்கன்:—ம்... இதிலே ஏதோ விஷமத்தனம் நடந்திருக்கு! காளிங்கன் வர்றான்..உன்னையும் என்னையும், பாத்தா கதை கட்டிடுவான்.நான்அப்புறம் வர்றேன் கோகிலா!

(லிங்கன் அங்கிருந்து சென்று... ஒரு மண்டபத்திற்குப் பின்புறம்போய் நின்று கவனிக்கிறான். கோகிலா போய்க் கொண்டிருக்கிறாள்...காளிங்கன் குதிரையைக் கொண்டுபோய் அருகே நிறுத்தி...)

காளிங்:—கோகிலா!.. எங்கே போறே? நடந்து போறே... குதிரையிலே ஏறிக்கியேன்... வா!...

கோகிலா:—வேண்டாம்... வேண்டாம்... எனக்கு மாளிகைக்கு வழி தெரியும்!..

காளிங்:— கொஞ்சம்கூட ஞானமே புரியாத பெண்ணா யிருக்கியே; ஒரு ஆம்பளை கூப்பிட்டா ஆசையா தானே கூப்பிடுவான்... அப்படிங்கிற அறிவு வேண் டாம்!.. நான் என்ன உன்னைக் கடிச்சா தின்னுடப் போறேன்!...

கோகிலா:—மானேஜர் சார்!...

காளிங்:—அது என்ன உத்தியோகத்தைச் சொல்லிச்சிட்டு மேனேஜர்ன்னு! ''அலோ மை டியர் அத்தான்''னு கூப்பிடுறது!.. இல்லே...''மை டியர் மாமா''ன்னு... மாமா வேண்டாம்... அத்தானே இருக்கட்டும்!..

கோகிலா:—மரியாதையா நடந்துக்கிங்க!...

காளிங்:—ஏய் கோகிலா நில்லு!... நான் கூப்பிடுகிறேன் போய்கிட்டே இருக்கே!... என் மனசுலே உன்னை வச்சு பூஜிப்பேன்!... வா என் மாளிகைக்கு!

(கையைத் தொட்டிழுக்கிறான்... அவள் திமிரிக்கொண்டு பூக்கூடை சிதறிக்கீழேவிழ, அவனை அறைந்துவிட்டுப் போகிறாள்.)

காளிங்:—போ! போ!... பகல்லே தப்பிச்சிட்டே... ராத்திரியிலே தப்பிச்சுக்க முடியுமா? வர்றேன்... இன்னைக்கு உன்னை...க்கு!...

(காளிங்கன் போக — லிங்கன் ஒரு முடிவிற்கு வருகிறான்.)

காட்சி — 52 ஜமீன் மாளிகை-கோகிலா அறை

இரவு

(கோகிலா அறையின் கதவு தட்டப்படுகிறது... படுத்திருந்த கோகிலா விளக்கைத் தூண்டிவிட்டு... எழுந்து சென்று கதவைத் திறக்கிருள்... லிங்கன் உள்ளே வருகிருன்.)

கோகிலா:—நீங்களா?... இந்நேரத்தில்...

லிங்கன்:—அதிர்ச்சி அடையாதே!... மாலையில் உன்னை வழியிலே மடக்கி.. காளிங்கன் பேசியதைக் கவனிச்சுக்கிட்டுத் தாலிருந்தேன்... உன் கற்பை எப்படியும் குறையாடுவதுன்னு திட்டம் போட்டிருக்கும் அந்தத் தியவன் இன்றிரவு இங்கே வரத்தான் போகிருன்!... அவனுக்குச் சரியான பாடம் கற்பித்து அனுப்பவே.. நான் வந்திருக்கேன்!...நீபயப்படாமல் இரு!...

(என்று சொன்னபடி கதவைச் சாத்திவிட்டு, கதவோரத்து மூலையில் ஒளிந்து கொள்கிருன். கதவு தட்டப்படுகிறது..

லிங்கன், சைகை மூலமாக கோகிலாவிடம் 'போய்க் கதவைத் திற!'' என்கிருன்... கோகிலா, ஒருவகை பீதியுடன் சென்று கதவைத் திறக்கிருள்... தோளில் குழந்தையுடன் குடிசைவாசியாக சாதாரண உடையுடன் உமா வருகிருள்...)

கோகிலா:—உமா! நீயா?...

உமா:—நான்தான் எங்கே அவர்?... உன் கள்ளக்காதலர்?...

(ஒளிந்திருந்து வெளியே வரும் லிங்கனைக்கண்டு) ஓ... இங்கே தான் இருக்கிறீங்களா?...

லிங்கன்:—உமா!... தீர விசாரிக்காமல் அவசரப்பட்டு எதையும் அக்கிரமமா பேசிவிடாதே!...

(ஜமீன்தார், காளிங்கன், சடையன் வருதல்...)

காளிங்:— அக்கிரமம் நடக்கலாம்... அதைக் கண்டிச்சுப் பேச... கட்டின மனைவிக்கு உரிமை கிடையாதோ?...

கோகிலா:—உமா!... அவர் இங்கே வந்தது...

உமா:—விளக்கம் தேவையில்லையடி விசுவாசக்காரி!... இரவு நேரம்!... தாள் போட்ட கதவு!... தனியறையில் ஒரு இன்ப ஜோடி!... இந்த வெட்கங்கெட்ட வேலைக்கு விளக்கம் வேறு சொல்லப் போகிருயா?...

லிங்கன்:—உமா!... மனம்போன போக்கில் பேசாதே!... நான் சொல்வதைக் கேள்!..

உமா:—கேட்கத் தேவையில்லை!... மனைவிக்குத் துரோகம் செய்து விட்டு... கையும் களவுமாகப் பிடிபட்ட பிறகு... நீங்கள் சொல்லப் போகும் எந்தக் கதையையும் நான் கேட்கத் தேவையில்லை!...

லிங்கன்:—வீட்டுக்கு வா! விபரம் சொல்லுகிறேன்.

உமா:—அது இனிமேல் நடக்காத காரியம்!... ஒரு துரோகி யோடு வாழ நான் விரும்பவில்லை!.. விரும்பவே இல்லை!

லிங்கன்:—(உமாவின் கையைப் பிடித்து) வருகிறுயா இல்லையா?..

உமா:—விடுங்கள் கையை!..

ஜமீன்தார்:—(உறுமலுடன்) மிஸ்டர் லிங்கன்!.. மாப்பிளே!..

காளிங்:—இவ்வளவு நாளா எங்க கண்ணுலே மிளகாய்த் தூளைத் தூவிட்டு கோகிலாவோட கள்ளக்காதல் பண்ணிகிட்டிருக்கிறே!

(லிங்கன், உமாவை விடுத்து — ஜமீன்தாரிடம் திரும்பி)

லிங்கன்:—என்ன சூழ்ச்சி இதெல்லாம்?

ஜமீன்தார்:—கேட்டாயா சடையா!... சூழ்ச்சி செய்கிறேனும் நான்!..

சடையன்:—ஏண்டா பாவி!.. சின்ன ஜமீன்தாரிணியையே உனக்கு மனைவியாக்கின தெய்வம்டா இவரு!... அந்தத்தெய்வத்துக்கே அடுக்காத செயலைச் செய்துட்டு பேச்சு வேறயா பேசுறே!...

லிங்கன்:—அப்பா உங்க கண்களைத் திறக்கிறது ரொம்பகஷ்டம்! ஆனு ஒரு நாளைக்குத் திறக்கத்தான் போகிறேன்!..

காளிங்:—சடையன் கண்ணைத் திறக்கிறது இருக்கட்டும்... இவ்வளவுநாளா எங்க எல்லாருடைய கண்ணிலேயும் மண்ணைத் தூவிட்டு...கோகிலாவோட கள்ளக் காதல் நடத்தியிருக்கியே!..

கோகிலா:—அய்யோ அம்மா! (காதுகளைப் பொத்திக் கொண்டு கதறல்)உமா!..என்னை நம்பு!..(உமா, கோகிலாவைத் தள்ளிவிடுதல்..)

உமா:—சீ!..

(அப்போது மரகதம் வந்து)

மரகதம்:—ஜமீன்தார் ஐம்புலிங்க பூபதி... தனக்குத் தெரிந்த சகல வித்தைகளையும் காட்டுகிருர்!.. அவரது... சதிவேலைக்கு என்மகள் கோகிலா பலியாகவேண்டுமா?

ஜமீன்தார்:—கைப்புண்ணுக்குக் கண்ணுடி தேவையில்லை!... உன் மகளும், லிங்கனும் உல்லாச கேளிக்கை நடத்தியதை உமாவே, தன் கண்ணுலே பார்த்துவிட்டாள்!..

சடையன்:—ஏம்மா!.. இந்த உத்தமரோட சோற்றைத் தின்னு நீங்களும் வளர்ந்தீங்க... உங்க மகளும் வளந் துச்சு...(மகனைக் காட்டி) இதோ.. இந்த ஊதாரிப் பயலும் வளர்ந்தான்; ஏன் இந்த ஊரே வளந்தது!.. அவருக்கு துரோகம் பண்ணலாமா?...

மரகதம்:—உங்களைப் போல பத்து பைத்தியக் காரர்கள்சேர்ந்தால் ஊரையடிச்சு உலையில போடுறவன்... கள்வன்... காமுகன்... கொள்ளைக்காரன்... கொலைகாரன்... எல்லோரையுமே உத்தமர்களாக்கிடுவீங்க.

ஜமீன்தார்:—(ஆவேசமாக) மரகதம்!..

மரகதம்:—உங்களைச் சொல்லவில்லை!.. அதாவது பதினைஞ்சு... பதினாறு ஆண்டுகளுக்கு முன்...

ஜமீன்தார் :—(அடங்கி விடுதல்) சரி... சரி...போதும்! மாப்பிளே! மிஸ்டர் லிங்கன்!...உமா, கோபம் தணியிற வரை யிலும் இங்கேயே இருக்கட்டும்... ஏதோ நடந்தது நடந்துவிட்டது...உமாவை நான் சமாதானப்படுத்தி பிறகு அனுப்புறேன்!...

காளிங்:—ஆங்!... நல்ல யோசனை!..

லிங்கன்:—உமா கடைசியாகக் கேட்கிறேன், எங்கூட வரப் போகிறாயா இல்லையா?...

உமா:—முடியாது... இதோ...கோகிலா! அவளை அழைச்சுகிட்டுப் போங்க!...

லிங்கன்:— அழைச்சுக் கிட்டுத்தான் போகப் போகிறேன்!... கோகிலா என்சகோதரிங்கிறதை நீ உணரும் வரையில் இந்த ஊரார் விழிகளும், என் தந்தையின் விழிகளும் ஒளிபெறும் வரையில்... கோகிலாவும். மரகதம் அம்மாவும் என்னோடு தானிருப்பாங்க!..நீ., உன் இஷ்டப்படி இங்கேயே இரு!...என் குழந்தையை என்னிடம் கொடுத்துவிடு!...

(பிடுங்க முயற்சி — உமா தடுத்தல் — இறுதியில் குழந்தையைப் பறித்துக் கொண்டு)

லிங்கன்:—மரகதம் அம்மா!..இனிமே நீங்க இங்கே இருக்கிறது நல்லதல்ல. தயவு செஞ்சு நீங்க ரெண்டுபேரும் எங்கூட வாங்க!

(குழந்தையுடன் வேகமாகப் போகிறான் லிங்கன்.)

ஜமீன்தார்:—கோகிலாவுடன் செல்லும் மரகதத்தைப் பார்த்து).. மரகதம்!...

மரகதம்:—உத்தமரோட சரித்திரத்தின் கடைசி அத்தியாயம் எழுதப்படுகிறது... வருகிறேன்!...

(போய்விடுகிறார்கள். காளிங்கனிடம் ஜமீன்தார் பேசுகிறார்).

ஜமீன்தார்:—கடைசி அத்தியாயம்!.. யாருக்கென்று விரைவில் தெரிந்துவிடும்!.. காளிங்கா!... நான் போட்ட திட்டமும்...நீ ஆடிய நாடகமும் வெற்றி!... அந்த ஓட்டைக் குடிசைப் பகுதியிலிருந்து நம் உமாவைப் பிரித்தாகிவிட்டது!... இனி நமது எண்ணப்படி எரியட்டும்... அந்தக் குடிசைகள்!... எரிநெருப்பில் விழுந்து கருகட்டும் நமது எதிரிகள் கூட்டம்! நெருப்பு! நெருப்பு! என் வெறுப்புக்குரியவர்களை விழுங்கட்டும்..அந்த நெருப்பு!..ஹா!..ஹா!..ஹா!..

★

காட்சி — 53

ஜமீன் அந்தரங்க மாளிகை
ஆடம்பர அறை

(வீணு; ஜமீன்தாரின் கிளாசில் மதுவை ஊற்றுகிருள்.)

காட்சி — 53 ஏ

(குடிசைப்பகுதிகளில் உள்ள வீடுகளின்மீது காளிங்கன் கட்டளைப்படி பெட்ரோல் ஊற்றப்படுகிறது.)

★

காட்சி — 53 பி

(ஜமீன்தார் புகைபிடிக்க தீக்குச்சியைக் கொளுத்தல்.)

★

காட்சி — 53 சி

(குடிசைப் பகுதியில் தீப்பந்தங்கள் காளிங்கன் முன்னிலையில் அவன் ஆட்களால் எறியப்படுகின்றன....)

(நடனம் ஒருபுறம் — நாசம் ஒரு புறம் மாறி மாறிக் காட்சிகளாகின்றன.)

(அழகி வீணு நடனமாட ஜமீன்தார் ரசித்தல்.)

ஒரு பக்கம் நெருப்பு!
மறு பக்கம் நிலவு!
இரு பக்கம் கொண்டது
இளமையின் —
அழகோ அழகு!

வல்லினம், மெல்லினம்—
இரண்டும் திரண்டு
கலந்து புரண்டு
வளர்ந்த பெண்ணனது!

வில்லினம், வேலினம்—
இரண்டும் நெளிந்து
வளைந்து குழைந்து
மலர்ந்த கண்ணனது!

இடையினம் ஒரு கொடி போலே!
படர்ந்திட வரும் மடி மேலே!
மதுக்குடம் அல்லவோ!
பெண்ணுகிக் கண்ணு! உன்
முன்னுடி தள்ளாடுது!

— ஒருபக்கம்

காலையில் சூரியன்
கிழக்கில் உதிக்கும்
வரைக்கும் நமக்கு
இனிக்கும் உல்லாசமே!

காமனின் சாஸ்திரம்
உதட்டில் வரைந்து
இருட்டில் விரைந்து
படிக்கும் ஒய்யாரமே!

அழகிய மலர் இவள் மேனி!
அருகினில் ஒரு இசைத்தேனீ!
அறிமுகம் இல்லையோ!
அன்றுடம் மன்னு! உன்
பொன்மாடம் வந்தாடவா? —ஒரு பக்கம்

(குடிசை மக்கள் அங்குமிங்கும் அலறித்துடித்து ஓடுகிறுர்கள். விழுகிறுர்கள்... குழந்தைகள் நெருப்பில் கருகு கின்றன. அல்லோலகல்லோலப்படுகிறது. லிங்கன் நெருப்பில் விழுந்தவர்களைக் காப்பாற்றுகிறுன். கண்ணுயிரமும் அவதிப் பட்டுத் துடிப்பவர்களைக் காப்பாற்றுகிறுன். கோகிலாவும் மரகதமும் குழந்தையைத் தூக்கிக்கொண்டு ஓடுகிறுர்கள். லிங்கன் காளையை அவிழ்த்துக் கண்ணுயிரத்திடம் கொடுத்து, அதைக் காப்பாற்றும்படி விரட்டுகிறுன்... இப்போது கோகிலா, குழந்தை யுடன் தனியாக ஓடிக்கொண்டிருக்கிறுள். மரகதம் அங்குள்ள ஏழைபாழைகளை நெருப்பிலிருந்து காப்பாற்றிக் கொண்டிருக் கிறுள்.)

காட்சி -- 53 டி

(குடிசைப் பகுதியில் தீ பரவியவாறு இருக்கிறது — தீப்பந்தமுடன் ஓடுகிற காளிங்கராயனை மரகதம் பிடித்துக் கொண்டு—அங்கு கிடந்த ஒரு அரிவாள்மனையை ஓங்கி. . . .)

மரகதம்:— உண்மையைச் சொல்! ....இந்தக்கொடுமைசெய்யச் சொன்னது யார்?. . . .

காளிங்:—அய்யோ! என்னைக் கொன்னுடாதிங்க! . . உன் பழைய லவ்வர் ஜமீன்தார் உத்திரவு!

(அரிவாள் மனைக்கட்டையால்அடிக்கப்போக அதற்குள் ஆட்கள் ஓடிவந்து காளிங்கராயனைத் தூக்குகின்றனர்)

மரகதம்:— ஜமீன்தார்! . . . ஜமீன்தார்!. . . . எல்லாம் அவர் வேலைதானு?

ஆட்கள்:— நீங்க விட்டுடுங்கம்மா அவனை நாங்க, பாத்துக்கிறோம்.

(எரிகின்ற ஒரு குடிசையில் காளிங்கராயனை ஆட்கள் தூக்கிப் போடுதல். கோகிலா குழந்தையுடன் ஓடிவரும்போது . . அவள் உடையில் தீ பிடிக்கிறது..எரியும் மரத்துண்டு அவள்மேலே விழுகிறது. . . . கோகிலா, குழந்தையை இரு கைகளாலும் உயரத் தூக்கிப் பிடித்துக் கொண்டு, தீப்புண்களுடன் வெளியே வருகிருள். — ' என் குழந்தை!. என் குழந்தை!'' ...என அலறிய வாறு ஓடிவருகிருள் உமா,)

உமா:— கோகிலா! (என அலறுகிருள்). . . . . .

கோகிலா:—உமா!. .வந்துட்டியா? . இந்தா உன் குழந்தையைப் பிடி!. . . .

(உமா, குழந்தையை வாங்கிக் கொள்கிருள். . கோகிலா: கீழே சாய்கிருள்.)

கோகிலா:—உமா! என்னைப்பத்தியும், உன் கணவரைப் பத்தியும் தப்பா நினைக்காதே!. . . . நான் லிங்கனை முதல்ல காதலிச்சது உண்மை! அப்பறம் அவர் உனக்குச் சொந்தம்னு ஆனபிறகு. . . எங்க ரெண்டுபேரு உள்ளத்திலியும்... அப்படிப்பட்ட எண்ணமே ஏற்பட்டதில்லே! .

உமா:— கோகிலா! . . . . .!

(மரகதம் ஓடிவந்து 'கோகிலா' எனக் கதறுகிருள்!)

கோகிலா:—அம்மா! . என் வாழ்க்கை முடிஞ்சுட்டுது. . . . இனிமே உங்களுக்கு உமாதான் சொந்தப் பெண்ணு! இதோ இதுதான் உங்க பேரக்குழந்தை; . . .

மரகதம்:— கோகிலா!. . . .

கோகிலா:—அம்மா! . . . அம்மா!! . லிங்கன்!. . (என்று அவன் கையைப் பிடிக்கப் போனவள் உயிரை விடுகிருள்.)

மரகதம்:- கோகிலா! கோகிலா!. . . . போய்ட்டியாம்மா!. :
(குடிசைவாசிகள் கூட்டம் கூடிவிடுகிறது.)
தம்பீ!..என் கோகிலாவைத் தீ விழுங்கிட்டுது!.இல்லே! அந்தத் தீயவன் ஜம்புலிங்க பூபதி விழுங்கிட்டான்! எந்தப் பெண்ணுக்காக இதுவரையில் உயிர் வாழ்ந்தேனோ; எந்தப் பெண்ணின் வாழ்வு மலர்ந்து மணம் வீச வேண்டுமென்று. . . . இந்த ஜமீன் மாளிகையின் மர்மங்களை மறைத்துக் கொண்டிருந்தேனோ; எந்தப் பெண்ணுக்காக நான் யார் என்றுகூடச் சொல்லாமல் நடைப்பிணமாகத் திரிந்து கொண்டிருந்தேனோ; அந்தப் பெண்ணே போய்விட்ட பிறகு இனி என்ன இருக்கிறது? இந்த ஊரே உத்தமர்னு நினைச்சுகிட்டிருக்கிற ஜம்புலிங்க பூபதி — யார்?. . குடிகாரன்!.... கொலேகாரன்!...கொள்ளைக்காரன்!.. கயவன்!... காமாந்தகாரன்!... கன்னியர் கற்பைக் கடைச்சரக்கென மதிக்கும் மனிதமிருகம்!... அந்த மனித மிருகத்தின் மஞ்சத்துப் பதுமையாக ஆக்கப் பட்டவள்தான் இந்த மரகதம்! எங்களுக்குப் பிறந்த குழந்தைதான் கோகிலா!...நீ போன பிறகு எனக்கு என்ன இருக்கிறது? இதோஇப்போதே புறப்படுகிறேன் அவனோட அந்தரங்க மாளிகைக்கு! ஆலயங்கிறபேரு அங்கே ஒரு அம்மன் சிலே; அதைத் திருப்பினல் உள்ளே அந்த அக்ரமக்காரனின் சல்லாப மண்டபம்! எத்தனையோ இளம்பெண்களின் வாழ்வைக் கெடுத்தவனை; ஏழைகள் வாழ்கிற குடிசைகளுக்கும் தீயிடக் கட்டளையிட்டு நம்மை உயிரோடு கருக்கிவிடத் திட்டம் போட்டவனைப் பழிக்குப் பழி வாங்குகிறேன்! . .

(ஆவேசமாக) பழிக்குப் பழி வாங்குகிறேன்! .

லிங்கன்:— அம்மா!. . அந்த வேலே உங்களுக்கு வேண்டாம்மா! அதுக்காகத்தான் நான் காத்துக்கிட்டிருக்கேன்!

(சடையனிடம்) அப்பா!. ... இப்போதாவது உங்கள் தெய்வம் — கலியுகக் கடவுள் . . அந்த ஜமீன்தாரின் உண்மை உருவம் உங்கக்குத் தெரிகிறதா? . , .

சடையன்:—தம்பீ! . . . . இறுக மூடிக்கிடந்த என் இமைகள் திறந்து கொண்டன . . .

லிங்கன்:— ஏய், ஜம்புலிங்க பூபதி!

(லிங்கன் ஓடுகிருன் மற்றவர்கள் பின் தொடருதல்

(லிங்கன், கம்பீரமாக நுழைகிறான். . லிங்கன், சிலையைத் திருப்பி உள்ளே நுழைதல். லீனு மடி மீது படுத்திருந்த ஜமீன்தார் திடுக்கிட்டு எழுந்து. . . .)

ஜமீன்தார்:—லிங்கன்! . . நீயா? . . இன்னும் உயிரோடு இருக்கிறாயா? . . . (லீனு ஓடிவிடல்)

லிங்கன்:—நான் லிங்கன் அல்ல; லிங்கனின் ஆவி! . . . ஜமீன்தார் அவர்களே! உமக்குத்தான் ஆத்மாவில் நம்பிக்கை உண்டே அந்த ஆத்மா தான் வந்திருக்கிறது. . . நீர் தீயிட்டுப் பொசுக்கிய குடிசையிலே கருகி உருகிப் பிணமாக விழுந்த லிங்கனின் ஆத்மா!.. பேய்உருவில் வந்திருக்கிறது; இந்தப் பிசாசை . . . . ஊருக்கு அடையாளம் காட்ட!. . . .

ஜமீன்தார்:—எதற்காக வீண் பேச்சு? எங்கு வந்தாய்? எதற்காக வந்தாய்?. . . .

லிங்கன்:— "மாயை விலகும் மக்கள் உண்மை உணருவார்கள்" என்றபோது—"மணலை கயிராகத் திரிக்கும் முயற்சி" ன்னு கேலி பேசினீரே. இப்போது மணலைக் கயிறாத் திரிச்சுக்கிட்டு வந்திருக்கிறேன்!
வெறுங்கயிறு அல்ல! உமக்கேற்ற தூக்குக் கயிறு! உமது வேஷத்தைக் கலைப்பேன் என்றபோது "வானத்தை வில்லா வளைப்பாயோ!"?ன்னு வக்கணை பேசினீங்களே இப்போது வானத்தையல்ல; உமது மானத்தையே வளைத்துக் காட்ட வந்திருக்கேன்! "எரிமலையின் மீது நின்று மகுடி ஊதாதே!" என்று எச்சரித்தீரே; அந்த "எரிமலை மனிதனை" எலும்பு வேறு, நரம்பு வேறு நொறுக்கிப் போடத்தான் வந்திருக்கிறேன்! . . (ஜமீன்தாரின் சட்டையைப் பிடித்தபடி லிங்கன் இருக்க)

ஜமீன்தார்:—என்னடா வெறி பிடித்து விட்டதா?

லிங்கன்:— எனக்கு வெறி பிடித்தது இன்றல்ல! அன்று என் இளம்பிராயத்தில் பிள்ளை விளையாட்டில் உமது பெண்ணுக்குத் தாலிகட்டியபோது என்னை அடித்தீரே அப்போதே வெறி பிடிச்சிட்டது எனக்கு! என்னை அடித்த உன்னைத் தடுத்த அன்னையைக்

கரந்தொட்டு அணைச்ச காளைமாட்டின் கொம்பிலே தள்ளி என் பெற்ற தாயின் உடலைக் கிழிச்ச.... பாவி! நான் குடியிருந்த தாயின் வயிற்றி லிருந்து குருதி கொப்பளிச்சுதே; அப்போதே அந்த ரத்தத்தின் சாட்சியாக நான் எடுத்துக் கொண்ட சபதத்திற்குப் பெயர் வெறியென்றால்! . . . அந்த வெறி தணியுமட்டும் எனக்கு வேறு வேலை இல்லை! வேறு வேலை இல்லை! . . .

ஜமீன்தார்:—என்னசொன்னாய்?

(இருவரிடையே சண்டை – ஜமீன்தார் ஆட்கள் சூழ்கிறார்கள் – சண்டை—ஆட்கள் அடிபட்டு வீழ்தல்—சண்முகசுந்தரம், மரகதம், உமா, சடையன், குடிசைவாசிகள் வருதல்—ஜமீன்தார் வெளியே ஓடுதல்.)

★

**காட்சி — 55**

**ஜமீன்தார் அந்தரங்க மாளிகை வெளிப்புறம்**

(ஜமீன்தார் ஓடிவருகிறார். — லிங்கன், மரகதம், உமா, சடையன், குடிசைவாசிகள், ஊரார் பின் தொடர்தல்— ஓடிவந்த ஜமீன்தார்; எதிரில் காளை முறைத்தவாறு நிற்பதைப் பார்க்கிறார் . . ஜமீன்தார் நடுங்குகிறார். .ஓடுகிறார் காளை துரத்துகிறது. . ஓடுகிறார். . . )

ஜமீன்தார்:—லிங்கன்! . . . அய்யோ என்னைக் காப்பாற்று!

லிங்கன்:— உண்மையைச் சொல்லும்! . . . என் தாயாரை காளை மாட்டுக் கொம்பின்மீது தள்ளிக் கொலை செய்தது நீர் தானே?

ஜமீன்தார்:—ஆமாம். . நான்தான்! . .

லிங்கன்:—மக்களுக்குப் பயன்படக் கூடிய உணவு தானியங்களைப் பதுக்கி வைத்து, அவர்களைப் பட்டினி போட்டு விட்டு கள்ளக் கடத்தல் மூலம் கறுப்புப் பணம் சம்பாதித்தது உண்மைதானே?

ஜமீன்தார்:—உண்மைதான்! . உண்மைதான். . . .

லிங்கன்:— புலவர் மகளைக் கற்பழிச்சு புலவரையும் அவர் மகளையும் தீர்த்துக்கட்டியது உண்மைதானே?

ஜமீன்தார்:—உண்மைதான்! உண்மைதான்! சடையா! என்னை நீயாவது காப்பாற்று!

சடையன்:—தம்பி! தன் தவறை உணர்ந்து திருந்த நினைக்கிறவங்களை மன்னிக்கிறதுதான் மனிதத்தன்மை! அவரை மன்னிச்சிடுப்பா! ஜமீன்தாரய்யாவைக் காப்பாத்து!

லிங்கன்:— அழுக்கு உள்ளம்! அக்கிரம ஆட்டம்! அநியாயச் செயல்கள்! இத்தனையும் வார்த்தெடுத்த வஞ்சக வடிவங்கொண்ட நீர். . வெளி வேஷத்தாலே. புனிதர்—புண்ணியர்—உத்தமர்—யோக்கியர்ன்னு இந்த ஊராரை ஏமாற்றியதும் உண்மைதானே?

ஜமீன்தார்:—எல்லாம் உண்மைதான்! . என்னை மன்னிச்சிடு லிங்கன்! . . .

(லிங்கன் பாய்ந்து சென்று மாட்டைப் பிடித்துத் தள்ளிவிடுகல்.)

லிங்கன்:—நான் உங்களை மன்னிச்சா போதாது அதோ வாங்க...: இதோ இங்கு நிற்கிற எல்லோரிடத்திலும் மன்னிப்புக் கேளும். . . .

(ஜமீன்தார் ஸ்தம்பித்து நிற்கிறார்.)

உம்! . . . ஏன் தயக்கம்! . . . எல்லோரிடமும் மன்னிப்புக் கேட்க வெட்கமாக இருக்கிறதா?. .

(கூட்டத்தில் ஒருவன் கையில் கத்தியிருப்பதைப் பார்த்த ஜமீன்தார்; அதைப் பிடுங்கி லிங்கனை வெட்டப்போகிறார்.) உமா ''அத்தான்'' என அலறுகிறாள். அதற்குள் கண்ணாயிரம் காளையைவிட்டுவிடவே காளை ஜமீன்தார் மீது பாய்கிறது. ஜமீன்தார் ரத்த வெள்ளத்தில் மிதக்கிறார்.)

★

## காட்சி — 56

**சடையன் வீடு**

(லிங்கன், உமா, சடையன், குழந்தை, மரகதம்; கண்ணாயிரம் இருக்கிறார்கள். . . . லிங்கன், தாயின் படத்திற்கு மாலை அணிவிக்கிறான். உமா கோகிலா படத்திற்கு மாலை அணிக்விகிறாள்.)

**வணக்கம்.**

★

பூம்புகார் புரொடக்ஷன்ஸ்

# "வண்டிக்காரன் மகன்"

நடிகர்கள்:

| | | |
|---|---|---|
| மக்கள் கலைஞர் ஜெய்சங்கர் | : | சொக்கலிங்கம் (லிங்கன்) |
| நடிகவேள் எம். ஆர். ராதா | : | காளிங்கராயன் |
| எஸ். வி சுப்பையா | : | சடையன் |
| எஸ். ஏ. அசோகன் | : | ஜமீன்தார் ஐம்புலிங்க பூபதி |
| செந்தாமரை | : | தமிழ்ப்புலவர் |
| 'காக்கா' ராதாகிருஷ்ணன் | : | கண்ணாயிரம் |
| ஜெய சித்ரா | : | உமாமகேஸ்வரி |
| ரோஜாரமணி | : | கோகிலா |
| மனோரமா | : | மரகதம் |
| ஜெயமாலினி | : | நடனககாரி |
| தாம்பரம் லலிதா | : | சொர்ணம் |

மற்றும் பலர்

கதை:
**அறிஞர் அண்ணா**

திரைக்கதை வசனம்:
**கலைஞர்**

இயக்குநர்: **அமிர்தம்**

தயாரிப்பு: **முரசொலி செல்வம்**

பாடல்கள்:
**கவிஞர் வாலி**

இசை:
**எம். எஸ். விஸ்வநாதன்**

| | | |
|---|---|---|
| தயாரிப்பு நிர்வாகம் | : | சுப்பையா |
| அலுவலக நிர்வாகம் | : | கே. ஆர். மகாதேவன் |
| இயக்குநர் உதவி | : | டி. பி. அருணாசலம், அருண் |
| ஒளிப்பதிவு | : | கஜேந்திரமணி |
| படத்தொகுப்பு | : | ராமலிங்கம் |
| நடனம் | : | தாரா அண்ட் மதுரை ராமு |
| சண்டைப் பயிற்சி | : | ஆம்பூர் ஆர். எஸ். பாபு |
| அரங்க அமைப்பு | : | நாகராஜன் |

★

பின்னணி :

டி. எம். சௌந்தரராஜன்

சீர்காழி கோவிந்தராஜன்

கோவை சௌந்தரராஜன்

எஸ். பி. பாலசுப்பிரமணியம்

வாணி ஜெயராம், எல். ஆர். ஈஸ்வரி

★



இயக்குனர்
அமிர்தம்

பதிப்பகம்